

பொன்விழா ஆண்டு
கல்கி
KALKI ரூ. 3.00
15.12.91
கலைவிழா சிறப்பிதழ்
சினிமா இசை
Vs
கர்நாடக இசை

சினிமாத் துறையை நம்பி, கிட்டத்தட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் சென்னையில் இருக்கிறார்கள். ஆனால், ராஜா, தேவா, ஆகிய இருவர் தவிர மற்ற எந்த இசை இயக்குனர்களும் தினசரி வேலை செய்வதில்லை. இவர்கள் இருவரும் சேர்ந்து இன்று சுமார் 100 இசைக் கலைஞர்களுக்கு வேலை கொடுத்து வருகிறார்கள். மற்றவர்கள் நிலை?

''ரொம்ப மோசம்தான்'' என்கிறார் இசைக் கலைஞர்கள் சங்கச் செயலாளர் ஏ. ஏ. ராஜ்.

''1989-ல் திரையுலகில் இரண்டு மாதம் வேலை நிறுத்தம் நடந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, நாங்கள் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமை தவிர, மற்ற ஞாயிறுகளில் வேலை செய்ய வேண்டும். ஆனால் ஒன்றரைச் சம்பளம் கிடையாது. நிரந்தர வேலை வாய்ப்பும் இல்லை. சிலருக்கு மாதம் நான்கு நாட்கள் வேலை இருந்தாலே அதிகம். மேலும் எங்கள் இசைக் கலைஞர்களில் கணிசமானவர்கள் கிறிஸ்துவர்கள். அவர்கள் ஞாயிறு அன்று சர்ச்சுக்குப் போக முடிவதில்லை. பாட்டு ரெகார்டிங் செய்தால் அன்றைக்கே இசைக் குழுவினருக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும். ஆனால் சில 'உப்புமா' கம்பெனிகள் நாளைக்கு என்று இழுத்தடிக்கிறார்கள். எங்களுக்குக் கொடுக்கப்படும் போக்குவரத்துச் செலவும் போதாது. பெரிய, பெரிய இசைக் கருவிகளை ஆட்டோவில் தியேட்டருக்குக் கொண்டு வர, அதிகம் செலவாகிறது. இந்தியாவில் இசைக் கருவிகளை நம்பி வாங்க முடிவதில்லை. தரம் படு மோசம். இதனால் இறக்குமதி செய்ய அரசு அனுமதிப்பதோடு சுங்கத் தீர்வையிலிருந்து விதிவிலக்கும் கொடுக்க வேண்டும்.''

இசைக் கலைஞர்களில் பலர் மதுவுக்கு அடிமையாக இருப்பது மற்றொரு வருத்தமான விஷயம். சில இசையமைப்பாளர்கள், குழுவுக்கும் சேர்த்து, மொத்தமாகப் பணத்தைத் தயாரிப்பாளர்களிடம் பேசி வாங்கிக் கொண்டு, பின்னர் இசைக் கலைஞர்களுக்குக் குறைத்துக் கொடுத்தும், இழுத்தடித்தும் வதைக்கிறார்களாம். இளையராஜாவிடம் பணியாற்றும் நிரந்தரக் கலைஞர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால் பத்திரிகையாளர்களிடம் பேசத் தயங்குகிறார்கள்.

''அபூர்வமான வாத்யக் கருவிகளை வாசிக்கும் ஆட்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள்'' என்கிறார் இசையமைப்பாளர் தேவா. ''உதாரணமாக, சாரங்கி,

திசை புரியாமலிருக்கும் திரை இசைக் கலைஞர்கள்!



சரோட், தில்ருபா போன்ற கருவிகளை வாசிக்க ஆட்களைத் தேடுகிறோம்'' என்கிறார் அவர். ''வயலின், கிடார், தப்லா, டிரம்ஸ், வாசிக்க ஆட்கள் எக்கச்சக்கமாக இருக்கிறார்கள். இந்தத் துறைக்குப் புதிதாக வருபவர்கள் மிகவும் குறைவுதான். அப்பா, மகன் என்று தொடர்ந்து வாசிப்பவர்கள்தான் அதிகம்.''



★ தேவா

''எலெக்ட்ரானிக் துறையின் வேகமான வளர்ச்சி திரை இசைக் கலைஞர்களைப் பெரிதும் பாதித்து விடும் என்று பயப்பட வேண்டிய நிலை வந்து விட்டது'' என்கிறார் ரேனி டேவிட். கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாகத் திரை இசைக் கலைஞராக இருந்து வருகிறார் டேவிட். ஜி. ராமனாதன், விஸ்வனாதன் என்று பல இசை இயக்குனர்களுடன் பணியாற்றியவர்.

''எலெக்ட்ரானிக் ஸின்தஸைஸர் என்னும் கருவி, மேற்கத்திய, மற்றும் ஜப்பான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. வயலின், கிடார், புல்லாங்குழல், சிதார், வீணை, மாண்டலின் என்று சகல, இசைக் கருவிகளின் ஒலியையும் இந்த ஸின்தஸைஸரே எழுப்பும். இது போதாதென்று ரிதம் பாக்ஸ் என்றொரு கருவி. தப்லா, மிருதங்கம், டிரம்ஸ், தவில் போன்றவற்றின் ஒலியைத் தத்ரூபமாக வெளிப்படுத்தும். காலப் போக்கில் தயாரிப்பாளர்கள் செலவுக்குப் பயந்து கொண்டு இசைக் கலைஞர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, இந்த இரண்டு கருவிகளையும் அதிகமாகப் பயன்படுத்த ஆரம்பிக்கலாம். அந்த நிலையில், ஏற்கெனவே பெரும்பாலான நாட்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இசைக் கலைஞர்களின் கதி என்ன?'' என்று கேட்கிறார் டேவிட்.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

அடுத்த இதழில் :

● மதுவிலக்கு :

சட்டத்தால் மட்டுமே சாதிக்க முடியாது!

- காவல் துறை உயர் அதிகாரி அர்ச்சனா



● டைரிகள் :

சரித்திர ஆதாரம் முதல் சமையல் குறிப்பு வரை

+

வாசகர்களுக்கு 500 ஈ.கிள் டைரிகள் பரிசு!

தேன்தமிழில் சுப்ரபாதம்



எம்.எஸ்.



பார்த்தசாரதி

வைணவ நெறியில் தோய்ந்த குடும்பம் அது. கருவுற்றிருந்த அன்னை பகவத் கீதையைப் படித்தபடியிருக்க, வயிற்றில் குழந்தை முட்டித் திரும்பியது. ஆண் பிள்ளை பிறந்தால் பார்த்தசாரதி என்று பெயரிடுவதாகச் சங்கல்பம் செய்து கொண்டார். அப்படியே பிறந்து பெயரும் இடப்பட்டது.

பார்த்தசாரதி திவ்வியப் பிரபந்த பாசுரங்கள் கேட்டு வளர்ந்தான். இலக்கியத்தில் இயல்பான ஈடுபாடு இருந்தது. வருடங்கள் பல சென்ற பிறகு, பார்த்தசாரதியின் தம்பி மகனுக்கு முடியிறக்கக் குடும்பமே திருப்பதி சென்றது. அத்தருணத்தில் ஆசிரியர் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பேராசிரியர் பார்த்தசாரதியால் போக முடியவில்லை.

பிரார்த்தனை முடித்துத் திரும்பிய தாயார், 'திருப்பதி வராமல் போன குறை தீர நீ ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதத்தை மொழி பெயர்க்க வேண்டும்' என்று பார்த்தசாரதியிடம் கூறினார்.

சம்மதம் தெரிவித்தாலும் அது மாபெரும் பணி என்பதால் உடனடியாக மேற்கொள்ளாமலே இருந்தார் பார்த்தசாரதி. அன்னை மீண்டும் அழைத்து 'சுப்ரபாத மொழிபெயர்ப்பைச் சீக்கிரம் முடித்துவிடு, வருகிற மார்கழியில் எனக்கு முடிவு இருக்கலாம்' என்று கூறிவிட, மூன்று இரவுகளில் அதனைச் செய்து முடித்தார் பார்த்தசாரதி. அன்னைக்குப் படித்துக் காட்ட, அவர் அழகு சேர்க்கும் திருத்தங்கள் செய்தார். தாம் எண்ணிய பணி முடிந்த திருப்தியில் அன்னை அந்த மார்கழியில் இறையடி சேர்ந்தார்.

சுப்ரபாத மொழி பெயர்ப்பை நூலாக வெளியிட்டு, அதன் மூலம் பெற்ற தொகையை அறப்பணிகளுக்கு அளித்து வந்தார் பார்த்தசாரதி. தலைநகர் நண்பர் ஒருவர் மூலம் அந்நூல் குடியரசுத் தலைவர் ஆர்.வி.யின் கைகளுக்கு எட்டியது. (அப்போது அவர் துணைத் தலைவர்) புரட்டிப் பார்த்த அவர் அதன் கவிநயத்தால் கவரப்பட்டு முழுவதையும் ஒரு மூச்சில் படித்ததோடல்லாமல்,

'நல்ல சங்கீத வித்வான்களைக் கொண்டு இசையமைத்து கேஸட்டுகளாக வெளியிடுவது பயனுள்ளதாகவிருக்கும்' என்று பார்த்தசாரதிக்குக் கடிதமும் எழுதினார்.

ஆர்.வி.யின் கடிதம் பார்த்தசாரதியை எச்.எம்.வி. நிறுவனத்தை அணுகத் தூண்டியது. அவர்களும் மொழிபெயர்ப்பில் ஆழ்வார் பாசுரங்களின் இன்னிசைச் சாயல் தெரிவதை உணர்ந்து 'இதை காஸெட்டாக வழங்கத் தகுந்த குரல் திருமதி எம்.எஸ்ஸுடையதுதான் எனக் கூறிவிட்டனர்.

பார்த்தசாரதியின் மொழிபெயர்ப்பு நூலைப் படித்துப் பார்த்த சதாசிவம் - எம்.எஸ். தம்பதியும் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அதனைப் பதிவு செய்ய ஒப்புக் கொண்டனர்.

'கௌசல்யா சுப்ரஜா' என்ற சம்ஸ்கிருத சுப்ரபாதத்தின் மெட்டிலேயே எழுதப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ள திருவேங்கடமுடையான் திருப்பள்ளியெழுச்சி காஸெட் மற்றும் இசைத்தட்டு டிசம்பர் ஏழாம் தேதியன்று விமரிசையாக வெளியிடப்பட்டது.

அதிலிருந்து சில வரிகள் :

வந்துதித்தாய் ராமா நீ
கௌசலைதன் திருமகனாய்
சிந்துமொளிச் சிறு காலை
திசை எங்கும் புலர்கிறது!
மந்திரங்கள் வாய்மொழிந்து,
வந்தனைகள் புரிந்தருளச்
செந்திருக்கரன் அருள்பொழிய
வேங்கடவா எழுந்தருள்வாய்!

('கௌசல்யா சுப்ரஜா....' என்ற ஆரம்ப அடியின் மொழிபெயர்ப்பு)

இந்த மார்கழியில் எம்.எஸ்.ஸின் இனிய குரலில் திருப்பள்ளி எழுச்சி செவிகளையும் மனத்தையும் குளிர்விக்கும்.

- சீதா ரவி



கும் என்பதால் மாறுதலுக்காக 'ரிக் கார்டிங் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் நிறைய பயன்படுத்துகிறோம். பக்குவமாகத்தான் யூஸ் பண்ணுகிறோம். பாடலைக் கெடுப்பது என்றோ, வார்த்தைகளை அமுக்கிவிட வேண்டும் என்றோ, அதிக வாத்தியங்களைப் பயன்படுத்துவதில்லை. வார்த்தைகள் தெளிவாகக் கேட்பதில்லை என்கிறார்கள். பாட்டு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா? பக்திப் பாடல்களும் சரி, சினிமா பாடல்களும் சரி, எல்லாமே இப்போது புத்தகமாக அச்சாகி, கிடைக்கின்றன. பாட்டுப் பிடித்திருந்தால், பாட்டுப் புத்தகத்தை வாங்கி வார்த்தைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாமே?

சினிமா இசை Vs

இசையமைப்பாளர் எம்.எஸ். விசுவநாதனைச் சந்தித்து உரையாடுகிறார், சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளரும் மேடைக் கச்சேரிகள் செய்பவருமான டாக்டர் எம். பிரமீளா.

பிரமீளா : வணக்கம். இன்றைக்கு உள்ள சினிமா சங்கீதத்துக்கும், சுமார் 30 வருடத்துக்கு முன்னால் இருந்த சினிமா சங்கீதத்துக்கும், உங்கள் அநுபவத்தைப் பொறுத்த வரை என்ன வேறுபாடு இருப்பதாக நினைக்கிறீர்கள்?

எம்.எஸ்.வி : முன்பெல்லாம் இத்தனை வாத்தியங்கள் பயன்படுத்தவில்லை. இப்போது ஜனங்களுக்குப் புதுமைகள் பிடிக்கும் என்பதால் மாறுதலுக்காக 'ரிக்கார்டிங் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் நிறைய பயன்படுத்துகிறோம்.

பிரமீளா : இப்போது நிறைய மேற்கத்திய இன்ஸ்ட்ருமென்ட்ஸ் பயன்படுத்தி வருகிறீர்களே? முன்பு சிதார், ஷெனாய் என்று உபயோகித்தது போய், கிடார், டிரம்ஸ் என்று மேற்கத்திய வாத்தியங்களை உபயோகப்படுத்துகிறீர்களே?

எம்.எஸ்.வி : மேற்கத்திய இன்ஸ்ட்ருமென்ட்சை மட்டுமே பயன்படுத்த வேண்டிய கட்டாயம் அவ்வப்போது வந்திருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால் மேற்கத்திய இன்ஸ்ட்ருமென்டுகளோடு, நமது வாத்தியங்களையும் சேர்த்துத்தான் இசை அமைக்கிறோம். நமக்கென்று இருக்கும் பாரம்பரிய இசையை அறவே விட்டு விடவில்லை; கெடுக்கவுமில்லை! இந்தப் பழக்கம் அந்தக் காலத்திலேயே இருந்தது. 'ஊட்டி வரை உற'வில் 'தேடினேன் வந்தது' பாட்டில் அப்போதே செய்திருக்கிறோம். ஆனால் இத்தனை இன்ஸ்ட்ருமென்ட்ஸ் இருக்கவில்லை. இப்போது புதிது புதிதாக வாத்தியங்கள் வந்து

விட்டன. அதுவும் ஒரு முன்னேற்றம் தானே! அதை ஒரு பெரிய குறையாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

பிரமீளா : மொத்தத்தில் பழைய திரைப் பாடல்களுக்கு இருந்த விஷய கனமும் இசை நயமும் இன்றைக்கு இல்லை என்று நான் நினைக்கிறேன். வார்த்தைகள் மிகவும் கொச்சையாகி விட்டதால் அதற்கு ஏற்ப இசையின் தரத்தைத் தாழ்த்த வேண்டி யிருக்கிறதோ.....?

எம்.எஸ்.வி : திரை இசையின் தரம் ஒட்டுமொத்தமாகத் தாழ்ந்துவிட்டது என்று நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். முன்பு வார்த்தைகளில் இருந்த 'டெப்த்' இப்போது அனேகம் பாடல்களில் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அந்த ஆழம் இப்போது தேவை யில்லை. ஜனங்கள் ரசிப்பதில்லை. சிரமப் பட்டுப் பாடாமல், கேட்டவுடன் பாட வேண்டும் என்ற லட்சியத்தில், எளிமை யான வார்த்தைகளால் இப்போது பாடல் இயற்றுகிறார்கள். அதனால் ஓரளவுக்கு அவர்களின் டேஸ்ட்டுக்கு மெட்டுப் போடு கிறோம். இது தவறுதான். அவர்களின் டேஸ்ட்டை உயர்த்துவதுதான் நியாயம். சேர்க்கிற, அந்த அளவுக்கு 'கபாஸிடி' உள்ளவரின் திறமையை விமர்சிக்க நமக்குத் தகுதி இடையாது. அது கடவுளின் அருள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டி யதுதான். ஒவ்வொருவருக்கும் ஒரு காலம் வரும். ரொம்பச் சாதாரணமாகச் செய்திருப் பார்; அது பிரபலம் ஆகிப் பரபரப்பாகப் பேசப்படும்! ஆனால் 'லாங் ஸ்டாண்டிங்' காக அது இருக்கிறதா? அப்படி காலங் காலமாக நிலைத்திருக்குமானால் அதைத் தான் நான் கிளாசிகல் என்று சொல்லு வேன்! சிரஞ்சீவித் தன்மையோடு இருக்கிற பாடல்கள் - தியாகராஜ சுவாமிகள் பாடலா னாலும் சரி, புரந்தரதாசர் பாடலானாலும் சரி, இல்லை சினிமா பாடலே ஆனாலும் சரி - நினைவில் நிலைத்து, தீர்க்காயுசோடு, புகழோடு இருக்கிறதுதான் கிளாசிக்.

பிரமீளா : காஸெட் முன்னதாக ரிலீசாவ தால் பாட்டின் வெற்றியைப் பொறுத்துத் தான் படத்தின் வெற்றி அமைகிறதோ? அத னால் வெகுஜன ரசனையைத் திருப்திப்

கர்நாடக இசை



இருந்தாலும், சினிமாவை ஒரு பிஸினஸ் என்று கருதி வந்துவிட்ட பிறகு கொஞ்சம் சமரசம் செய்யத் தான் வேண்டியிருக்கிறது. கலைக்காக என்ற உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்க் கையில் ஒரு பத்துப் படங்கள் பண்ணலாம். சங்கரா பரணம் மாதிரி. ஆனால் சினிமா என்பது ஒரு வியாபார நோக்கோடு செய்யப்படும் போது, அதிலும் ஒரு படத்தின் பாடல் ஐந்து லட்சம், ஆறு லட்சம் காசெட்டுகள் விற்பனை யாகி ஒரு மயக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதை நினைத் துப் பார்க்கிற போது, ஓர் உண்மை தெரிகிறது. அந்த அளவுக்குப் புகழ்

மைனர் பெண்ணை மணந்த முதல்வரின் மகன்!

சிறிய நகரான மண்டி ஆதம்பூரில் நடந்த அந்தக் கோலாகலத் திருமணத்துக்கு அரசு இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டு சாலைகள் கூட செப்பனிடப்பட்டன. கறுப்புப் பூனைப் பாதுகாப்புடன் சிம்மாசன நாற்காலியில் ஹரியானா முதல்வர் பஜன்லால். மகனின் கல்யாணத்துக்கு மொய் எழுத வந்தவர்களைத் தடுத்து, ''தேர்தலின் போது கொடுங்கள்'' என்றாராம்! 40,000 பேருக்குச் சாப்பாடு! சுமார் 30 கி.மீ. வட்டாரத்துக்கு ஒரு கடையிலும் நெய் இல்லை, பாலில்லை! இந்தச் சிக்கனக் கல்யாணத்துக்குப் பிரதமர் விஜயம்! பஜன்லால் மருமகன், மணப்பெண் ரேணுகா மைனர் பெண்! ''மாநில முதல்வரே சட்டத்தை மீறுவதா?'' - கேள்வி எழுப்பியவர் பன்சிலால். முந்நாள் ஹரியானா முதல்வர். கேள்வியின் எதிரொலி மாநிலங்கள் அவையில்!

டில்லி டயரி :

பல நாள் திருடி......

டில்லியின் மிகப்பெரிய அரசு மருத்துவமனை AIIMS. இங்கு ஒரு இருதய நோய் பைபாஸ் சர்ஜரிக்கு 45,000 செலவாகும். நோயாளிக்கு அறுவை சிகிச்சைக்கு முன் ரூ. 184 விலையுள்ள, ''புரோபிலாக்சில் - ஹைட்ரோஃபோரன்'' என்ற தடுப்பு ஊசி போடவேண்டும். நோயாளிகள் எல்லோரும் பணம் செலுத்தியும் போடாமல், அந்த வார்டு நர்ஸ் காஞ்சன் சர்தேவ், வெறும் ''டிஸ்டில்ட் வாட்டர்'' ஊசியை ஏற்றிவிட்டு, தடுப்பூசியை வெளியே விற்று வந்திருக்கிறாள். பல நாள் திருடி ஒருநாள் சிக்கினாள்! இவளுக்குக் கூட்டாளிகள் மூவர். சரி, சிக்கியவளுக்கு என்ன தண்டனை? வேறு வார்டுக்கு மாற்றல். அவ்வளவுதான்! இது ஆஸ்பத்திரி அரசியல்!

கலிகாலமா? எலிகாலமா?

AIIMS ல் மனிதப் பெருச்சாளிகள் என்றால், ராம்

படுத்தும் கட்டாயம் இசையமைப்பாளர்களைக் கட்டுப்படுத்துகிறதா?

எம்.எஸ்.வி : எத்தனையோ அருமையான பாடல்கள் இருந்த படங்கள் எவ்வளவோ 'ஃப்ளாப்' ஆகியிருக்கின்றன என்பது தெரியுமா? இப்போது நாங்கள் ஸ்க்ரீனுக்குத் தகுந்த மியூசிக் போட்டுக் கொண்டிருக்கிறோம். ஸ்க்ரீனுக்குத்தான்! கதை, கதைக்குத் தகுந்த வசனம், பாடல்கள் வரக்கூடிய இடங்கள், அதைப் பாடக்கூடிய பாடகர்கள், அந்தப் பாடல்களுக்கு உணர்ச்சி ததும்ப நடிக்கும் நடிகர்கள் என எத்தனையோ அம்சங்களைப் பொறுத்தே உள்ளது படத்தின் வெற்றி தோல்வி. எட்டாவது ரீலில் இடைவேளை என்றால், ஏழாவது ரீலிலே பிரமாதமாக ஒரு பாட்டைப் போட்டாலும் எழுந்து போய் விடுவார்கள். பிளேஸ்மெண்ட் அஃப் எ சாங், ஒரு பிளேயர் வாசிக்கிற ஒத்துழைப்பு, இவ்வளவையும் தாண்டி, தியேட்டரில் பார்க்கும்போது ஆபரேடர் கொஞ்சம் அவுட் அஃப் போகஸ் ஆகக் காண்பித்தாலோ, சவுண்டைக் கூட்டியோ குறைத்தோ போட்டாரானால், எல்லாம் போச்சு! கேமராமேன், எடிடர் இவர்களின் திறமை, செட்டிங் இவை எல்லாம் சேர்ந்துதான் ஒரு பாடல் பிரபலமாகிறது என்பது என் கருத்து.

பிரமீளா : 'சங்கராபரணம்' படம் பிரபலமான பிறகு, அதில், வந்த இரண்டு கர்நாடக இசைப் பாடல்களை - புரோசேவாரெவருரா, மானஸ சஞ்சரரே - பாடச் சொல்லி ரசிகர்கள் பல வித்வான்களின் கச்சேரிகளில் கேட்டார்களாம். சினிமா என்கிற சக்தி வாய்ந்த மீடியத்தின் மூலமாக, கர்நாடக இசைக்கு உங்களைப் போன்றவர்கள் உதவ முடியும் என்பதற்கு இது நல்ல உதாரணம்.....

எம்.எஸ்.வி : நீங்கள் குறிப்பிடுகிற பாட்டுக்களை எத்தனை வித்வான்கள், எத்தனை வருஷங்கள் மேடைகளில் பாடி வருகிறார்கள்! அவர்கள் எல்லாம் பாடிப் பிரபலமாகாதபோது, ஒரு எஸ்.பி.பி. பாடி, அதை வித்வான்கள் பாடும்படி மக்கள் கேட்கிறார்கள் என்றால் என்ன தெரிகிறது?

பிரமீளா : சினிமா அப்பேர்ப்பட்ட சக்தி வாய்ந்த, சாதனம் என்று.....

எம்.எஸ்.வி : அது மட்டும் தானா? ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரம் இருக்கிறது என்று தெரியவில்லையா? நேரம் வந்தது, பிரபலம் ஆயிற்று! மேலும், இந்த விளம்பர யுகத்தில் கேசட் ரிலீஸ் ஃபங்ஷன் வைக்கிறார்கள். விளம்பரம் செய்கிறார்கள். இதெல்லாம் இன்றைக்குத் தேவையாய் இருக்கிறது.

பிரமீளா : ஆக, கர்நாடக இசைக்கு இல்லாத வெகுஜன சர்ப்பும் விளம்பர பலமும் சினிமா இசைக்கு இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன் 'மொட்டை மாடி மொட்டை மாடி', ருக்குமணி வண்டி வருது' என்பன போன்ற பாட்டுக்களைப் போடுவதோடு கர்நாடக இசை அடிப்படையிலான மெட்டுக்களையும் இசையையும் பயன்படுத்துங்கள். 'சங்கராபரணம்' போன்ற படம் அமையக் காத்திராமல் ஒவ்வொரு படத்திலும் ஒரு பாட்டாவது கர்நாடக இசை அடிப்படையில் அமைக்கலாமே. யேசுதாஸ் கூட கல்கிக்கு அளித்த ஒரு பேட்டியில் வருத்தத்துடன் இதைக் கூறியுள்ளார்.

எம்.எஸ்.வி : சந்தர்ப்பங்கள் வருகிறபோது எல்லாருமே பண்ணத்தான் பண்ணுகிறோம். எல்லாப் பாட்டுமே டப்பாங்குத்தாகவோ, நீங்கள் சொல்லுகிற 'மொட்ட மாடி' மாதிரியோ போடவில்லை. சினிமாவுக்கு என்ன மியூசிக் தேவையோ அதைப் போட்டுத்தான் ஆகணும். அதைத்தான் நாங்கள் செய்கிறோம். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் கர்நாடக இசை அடிப்படையில் போடத்தானே செய்கிறோம்? 'சின்னக்கண்ணன் அழைக்கிறான்' என்று ஓர் அருமையான பாட்டு போட்

மனோஹர் லோஹியா ஆஸ்பத்திரியில் அசல் கண்டெலிகள் கொட்டம்! எக்ஸ்ரே படங்களைக் கடித்துக் குதறி, இரத்த சேமிப்புப் பாட்டில்களை உருட்டித் தள்ளி உடைத்து, நர்ஸ்களை அச்சுறுத்தி, நோயாளிகள் மேல் ஏறி விளையாடி எலிகள் செய்யும் அட்டகாசம் பொறுக்கவில்லையாம். உச்சகட்டமாக, மூளைக் கோளாறினால் அவதியுறும் பத்து வயதுச் சிறுமி மீனாட்சியின் கால் கட்டை விரலை எலி கடித்துத் துண்டித்துக் கொவியபடி ஓடிவிட்டது! இது கலிகாலமா? எலிகாலமா?

தப்பிவந்த ராது!

''எலிவளைக்குள் பதுக்கி வைத்தாலும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டவர்களை மீட்டு வருவோம்'' என்று டெல்லி போலீஸ் மார் தட்டினாலும், ஐந்து பம்பாய் வைர வியாபாரிகளும் தாங்களாகவே தான் தப்பி வந்தார்கள். 'ரோமானிய தூதுவர் ராதுவும் அப்படியே. ❖ நாட்களுக்குப் பிறகு மனிதர் ஏதோ ஒரு


♦ பழையவர்


♦ புதியவர்

ரயிலில் புதுதில்லி ஸ்டேஷனில் வந்து இறங்கி, ஒரு டாக்ஸி பிடித்து 18 கி.மீ. தூரத்தில் உள்ள தமது வீட்டை அடைந்திருக்கிறார். யாருமே கண்டுகொள்ளவில்லை. அவர் வீட்டு வாசலில் காவலிருந்த போலீஸே அவரை அடையாளம் தெரியாமல் வீட்டுக் குள் அனுமதிக்க மறுத்து இருக்கின்றனர்! ''போதும், போதும்'' என்று அவர் தாய்நாடு திரும்பிவிட்டார். ஆனால் என்ன? மே முதல் அக்டோபர் வரை தில்லியில் 327 ஆள் கடத்தல்கள், ஜாம் ஜாமென்று!

- இருள்நீக்கி கணேசன்

டிருக்கிறார் ராஜா தம்பி... எவ்வளவு அழகாக இருக்கிறது!

பிரமீளா : ஓரளவுக்கு நீங்கள் புரொட்யூசர் சொல்கிற மாதிரிதான் போட்டாகணும். இல்லையா?

எம்.எஸ்.வி : புரொட்யூசர் சொல்ல மாட்டார். டைரக்டர் சொல்லுவார். எங்கே கர்நாடக இசையைக் கையாள முடியுமோ. அங்கேதான் வைக்க முடியும். கன்னடத்தில் ஒரு ஐடியல் படத்துக்கு இசை அமைத்திருக்கிறேன். ஜி.வி. அய்யரின் படம். இன்னும் வெளியாகவில்லை. 2000 வருடத்துக்கு முன் கல்வெட்டில் எழுதின பாடல் ஒன்றை, வெட்டியான் ஒருவன் பாடுகிறான். பாட்டு ரிகார்டிங் நடக்கும் போது, 'வெட்டியான் இவ்வளவு சுருதி சுத்தமாகப் பாடமாட்டானே?' என்றார் ஜி.வி. அய்யர். ரியலிசம் என்று அங்கே பார்த்தால் சுருதி போய்விடுகிறது. மற்ற விஷயங்களில் எல்லாம் ரியலிசம் பார்க்கிறார்களா என்று கேட்டாரீர்கள். அதற்கு நான் பொறுப்பல்ல.

பிரமீளா : இப்போதெல்லாம் கர்நாடக இசைக் கச்சேரிகளுக்குக் கூட்டம் அதிகம் வருவதில்லை. இளைஞர்களுக்கு அதில் ஈடுபாடில்லை என்று பரவலான பயம் இருக்கிறது. இளைஞர்கள் பலர் கலைஞர்களாக இருந்தாலும் இளம் ரசிகர்கள் இல்லை. இந்தப் போக்குக்குச் சினிமாவின் ஆகர்ஷணமும் ஒரு காரணம் என்பதை ஏற்கிறீர்களா?


எம்.எஸ்.வி : ஒரு முறை என்னைப் பார்த்துக் கேட்டுக் கொண்டார் ஒரு பெரிய மகான். கர்நாடக சங்கீதத்தில் இன்றைக்கு வணங்கக்கூடிய ஸ்தானம் வகிக்கிற பெரியவர் அவர். ''கர்நாடக சங்கீதத்தைக் காப்பாற்றுங்கள், நீங்கள் எல்லாரும் சேர்ந்து!'' என்றார். ''ஐயோ, நான் ஒன்றுமே பண்ணவில்லையே அதை!'' என்று சொன்னேன். ''நீங்க பண்ணவில்லை. மற்றவர்களிடமும் சொல்லுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார் அந்த வித்துவான். கர்நாடக இசையுடன் போட்டி போட நாங்கள் முயல்வதே இல்லை. எங்களுக்கென்ற தொழிலை நாங்கள் செய்கிறோம்.

பிரமீளா : அன்றைக்குக் கர்நாடக இசைப் பயிற்சியோடுதான் திரை இசைக்கு வந்தார்கள். இன்றைக்கும் அந்த நிலை தொடருகிறதா இல்லை மாறி இருக்கிறதா?

எம்.எஸ்.வி : இளங்கன்று பயமறியாது என்பார்கள். சங்கீதம் எதுவுமே தெரியாத சிலர் என்னிடமே வந்து, 'ஐயா நான் சில பாடல்களுக்கு இசை அமைத்திருக்கிறேன். ரொம்ப நன்றாகவே வந்திருக்கிறது. இதை நீங்கள் உங்கள் பெயரிலேயே போட்டு வெளியிட வேண்டும்' என்று கேட்கிறார்கள்! இப்படிக் கேட்கிற துணிவு வந்திருக்கிறதே என்பதைக் கூறத்தான் இதைச் சொல்லுகிறேன். முறையான பயிற்சியின் மகிமை அவனுக்குத் தெரியவில்லை.... காசு கொடுத்துச் சங்கீதம் கற்க வசதி இல்லாதது என் குடும்பம். ஏழாவது வயதில் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல், பக்கத்தில் இருந்த பாட்டு ஸ்கூலுக்குப் போய், பையன்களுக்கு வாத்தியார் பாட்டுச் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுக் கேட்டுப் படித்த பின், வாத்தியாரே, 'பணம் வாங்கிக் கொண்டு அவர்களுக்குச் சொல்லித் தருகிறேன். ஏற மாட்டேன் என்கிறது அவர்களுக்கு. உனக்குப் பணம் வாங்காமலே சொல்லித் தருகிறேன், உனக்கு ஏறுகிறது' என்று, மூன்று வருஷம் சொல்லித் தந்தார், என்னுடைய குருநாதர் நீலகண்ட பாகவதர். கேரளத்தைச் சேர்ந்தவர்.... எதற்குச் சொல்கிறேன் என்றால் கஷ்டப்பட்டாலும் முறையான பயிற்சி கைகொடுக்கும். ஆனால் துணிவே துணை என்றும் மியூசிக் டைரக்டராகச் சிலர் வரலாம். அவர்களுக்குக் கற்பனை இருக்கலாம். மக்களுக்குப் பிடித்திருந்தால் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்! மக்கள் தீர்ப்பு, மகேசன் தீர்ப்பல்லவா?

உரையாடல் தொகுப்பு : **சாருகேசி**

அட்டை வண்ணப்படம்; புகைப் படங்கள் : **யோகா**



காவேரி பிரச்னையை என்கிட்ட விட்டுடுங்க!
அய்யய்யோ... சகிக்கலே!
விடுதலைப்புலிகளை வளர்த்து விட்டது இவருதான்!
இவங்கதான், அவருதான்...
அவங்கதான்!
சத்துணவு போட்டேனே... மழைக் கோட்டு கொடுத்தேனே... மின்சாரம் தந்தேனே... எல்லாமே இலவசமே... ஏ... ஏ... ஏ...
அந்தப் பாட்டை கொஞ்சம் நிப்பாட்டிட்டு இதக் கொஞ்சம் பாருங்க...

தடா சட்டமும் தடலடி தர்பாரும்

இந்த இதழ் உங்கள் கைக்கு வந்து சேரு முன்னர் இன்னும் எத்தனை பிரபலங்கள் தடா சட்டத்தின் கீழ் கைதாகியிருப்பார்களோ என்று இதை எழுதும்போதே யோசிக்க வைக்கிறது. ஜெ. ஆட்சி. பயங்கரவாதிகள் மீது பிரயோகிக்க உருவாக்கப்பட்ட தடா சட்டம் விடுதலைப் புலிகள் மீது பாய்வதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அரசியல்வாதிகள், அதிகாரிகள், வழக்கறிஞர்கள் மீது செலுத்தப்படுவதை ஜீரணிப்பது சிரமமாகவே உள்ளது.

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகளுக்குத் திட்டமிட்டு உதவினார்கள் என்று யார் மீது சந்தேகம் ஏற்பட்டாலும் தடாவைப் பிரயோகியுங்கள்; தவறில்லை. ஆனால் விடுதலைப் புலிகளிடமும் அவர்கள் லட்சியத்தினிடமும் அனுதாபம் கொண்டிருந்தார்கள் என்பதற்காக யாரையும் கைது பண்ணாதீர்கள். இது அநீதி. புலிகளின் இறுதி லட்சியம், அதை அடைய அவர்கள் கையாண்ட வன்முறை ஆகியவற்றை வெறுத்தவர்கள் கூட அவர்களுடைய லட்சியப் பிடிப்பு, திறமை, தியாக உணர்வு முதலியவற்றில் ஒரு மரியாதை கலந்த வியப்பு கொண்டிருந்தார்கள். எனவே அனுதாபம் காட்டியவர்களையெல்லாம் பிடிப்பது என்று ஆரம்பித்தால் தமிழகமே சிறைச்சாலையாக வேண்டியதுதான்.

புலிகள் விஷயத்தில் இத்தகைய ஒரு பிரமிப்பு கலந்த அனுதாபம் மக்களுக்கு உருவாகக் காரணமே மத்திய மாநில அரசுகளின் கொள்கைகள்தாம். இந்திரா காந்தி புலிகளுக்கு இந்திய மண்ணில் பயிற்சி தந்தார். இந்தியா டுடே அதை பகிரங்கப்படுத்திய போது சீறினார். எம்.ஜி.ஆர். புலிகளுக்குப் பல கோடி தந்து ஊக்குவித்தார். ராஜீவ், ஒரு சமயம் பேச்சு வார்த்தை, இன்னொரு சமயம் அமைதிப்படைத் தாக்குதல் என்று புலிகள் விஷயத்தில் ஓர் இரண்டுங்கெட்டான் கொள்கையைக் கையாண்டார். பேச்சு வார்த்தைகளில் உதவுமாறு முதல்வர் கருணாநிதியையும் கேட்டுக் கொண்டார். வி. பி. சிங் பிரதமராயிருந்த போது அவரும் பேச்சு வார்த்தைகளால் புலிகளை வென்று விடலாம் என எண்ணினார். முதல்வர் கருணாநிதியிடம் அந்தப் பணியை ஒப்படைத்தார். கருணாநிதியும் தம்மால் ஏதோ சாதித்து விட முடியும் என்று எண்ணிச் செயல்பட்டார். ஜெயலலிதா கூட முதல்வராவதற்கு முன் புலிகள் விஷயத்தில் பலமுறை பரிந்து பேசியிருக்கிறார்.

எல்லாமே தவறான கொள்கைகள். பாம்புக்குப் பால் வார்த்த கொள்கைகள். பலர் எடுத்துக் கூறியும் பத்திரிகைகள் எச்சரித்தும் மத்திய, மாநில அரசுகள் கேட்கவில்லை. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்த பிறகுதான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்கள். ராஜீவின் மரணத்துக்குப் பிறகு புலிகள் இந்தியாவின் விரோதி நெம்பர் ஒன் ஆகி விட்டார்கள். இதன் விளைவாக, ஏற்கெனவே அவர்களிடம் பரிவு காட்டியவர்களையெல்லாம் தேசத் துரோகிகள் என்று தற்போது கருதுவதானால், இந்திரா காந்தி காலம் தொட்டு, இந்நாள் -முன்னாள் முதல்வர்கள், பிரதமர்கள் அனைவரையுமே அப்படி வர்ணிக்க வேண்டிவரும். பத்மநாபா கொலை தொடர்பாகக் கருணாநிதி தவறாக நடந்து கொண்டதை இன்று கிளறிக் கொண்டிருந்தால் விமான நிலைய வெடிகுண்டு விஷயத்தில் எம். ஜி. ஆர். தப்பு செய்ததும் பிரச்னையாகி விடும். இப்படியே போனால் அதற்கு எல்லையே இராது. இந்தப் போக்கு புத்திசாலித்தனமும் அல்ல. கொள்கை தவறானது, இருத்திக் கொண்டாயிற்று. ஆட்சியும் மாறி விட்டது; அத்துடன் விட வேண்டியதுதான்.

ராஜீவ் கொலைக்குக் காரணமானவர்களையும் உடந்தையாயிருந்தவர்களையும் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுங்கள். இனி தமிழகத்தில் புலிகளுக்கு இடமில்லை என்று கொள்கை வகுத்துச் செயல்படுங்கள். ஆனால் ஏற்கெனவே இருந்த கொள்கை ரீதியில் தவறு செய்து விட்ட அரசியல்வாதிகளையும் அவர்கள் சொற்படி கேட்டு நடந்த அதிகாரிகளையும் பழிவாங்காதீர்கள். இந்தத் தவறான முன்னுதாரணம் அடுத்து வரும் ஆட்சியிலும் இதே கதை தொடர வாய்ப்பளிக்கும். அதிகாரவர்க்கமே ஆடிப் போகும்.



கல்கி



1991
டிசம்பர் 15
மலர் : 50
இதழ் : 20
பிரஜோத்பத்தி
கார்த்திகை 29

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

கார்த்திக் ஃபைன்

39, பீமண்ணா முதலி

17 ஆம் ஆண்டு

தமிழக ஆளுநர் திரு. பீஷ்மநாராயண சிங்

14 டிசம்பர் மாலை 5 மணி — மங்கள இசை நாமகிரி

மாலை 7 மணி அனுப் ஜலோட்டா அவர்களின் கஸல் (Jointly wi

கிழமை & தேதி	காலை 8.00-9.00 மணி	காலை 10.00 — 11.30 மணி	பிற்பகல் 2.00 — 3.00 மணி
15.12.91 (ஞாயிறு)	பக்தி இசை டி.கே. ஜெயராமன் அவர்களின் சீடர்கள்	ஓ.எஸ். தியாகராஜன் — பாட்டு வி.வி.ரவி — வயலின் பாலக்காடு ரகு — மிருதங்கம் பாலக்காடு சுந்தரம் — கடம்	குமாரி பி.லலிதா — பாட்டு கே.டி. சிவகணேசன் — வயலின் வேகனரங்கன் — மிருதங்கம்
16.12.91 (திங்கள்)	வி.லலிதா குழுவினர்	சங்கீத உபன்யாசம் — டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள்	ஆர்.எஸ். ஜெயலட்சுமி — வீணை நந்தகுமார் — மிருதங்கம்
17.12.91 (செவ்வாய்)	எஸ். ரங்கமணி மற்றும் குழுவினர்	அலோக பிரபாவின் ஒடிசி நடனம் (சங்கீத நாடக அகடமி வழங்கும் நிகழ்ச்சி)	திருமதி. துர்கா லட்சுமி — பாட்டு டி.எஸ். நாராயண ராவ் — வயலின் கே.சுப்பிரமணியம் — மிருதங்கம்
18.12.91 (புதன்)	புரந்தர ஸ்மிருதி	தீபக் சௌத்ரியின் (கல்கத்தா) சிதார் (சங்கீத நாடக அகடமி வழங்கும் நிகழ்ச்சி)	ஆர்.கோபிநாத் கணேஷ் — புல்லாங்குழல் வி.பாலகிருஷ்ணன் — வயலின் டி.கண்ணன் — மிருதங்கம்
19.12.91 (வியாழன்)	பக்தி தார குழுவினர் (மாயா ஜோதி)	நெய்வேலி சந்தான கோபாலன் — பாட்டு கண்டதேவி அழகிரிசாமி — வயலின் நெய்வேலி நாராயணன் — மிருதங்கம்	திருமதி வி. பிருந்தா — பாட்டு ராதிகா மணி — வயலின் ஜி.கே.கணேஷ் — மிருதங்கம்
20.12.91 (வெள்ளி)	கானஸ்ருதி	கதிரி கோபால்நாத் — சாக்ஸபோன் சி.என். சந்திரசேகர் — வயலின் அர்ஜுன் குமார் — மிருதங்கம்	சுரேஷ் குமார் — மாண்டொலின் கே.எஸ்.மணி — வயலின் என்.மதுசூதனன் — மிருதங்கம்
21.12.91 (சனி)	நாதாஞ்சலி	சிக்கில் சகோதரிகள் — புல்லாங்குழல் டி.ருக்மணி — வயலின் மன்னார்குடி ஈஸ்வரன் — மிருதங்கம் திருவாரூர் வைத்தியநாதன் — மிருதங்கம்	ஆர். விஜயலட்சுமி மற்றும் ஆர்.சித்ரா — பாட்டு ஆர்.ஹேமலதா — வயலின் கே.ராமகிருஷ்ணன் — மிருதங்கம்
22.12.91 (ஞாயிறு)	ஸ்ரீமதி சித்ரா ரகுநாதன் குழுவினரின் திவ்யப் பிரபந்தம் இசை	9.15 — 1 மணி வரை அமுதசுரபி பரிசளிப்பு விழா, பட்டிமன்றம் — கவியரசு கண்ணதாசன் புகழுக்குப் பெரிதும் காரணம் அவரது தத்துவப் படைப்புகளே — காதல் படைப்புகளே	குமாரி ஆஷா ரமேஷ் — பாட்டு எஸ்.விஜயராகவன் — வயலின் ஆர். சுந்தரராமன் — மிருதங்கம்
23.12.91 (திங்கள்)	மாதா மரகத சியாமா குழுவினர்	ஹைதராபாத் சகோதரர்கள் — பாட்டு பேரி ஸ்ரீராமமூர்த்தி — வயலின் கே.ஆர். கணேஷ் — மிருதங்கம் கே.வி.ஆர்.எஸ்.மணி — கஞ்சிரா	திருமதி சாரதா — வீணை கலாகட் ஸ்ரீனிவாசன் — மிருதங்கம்
24.12.91 (செவ்வாய்)	ஸ்வரஸ் குழுவின் வைதேகி கிருஷ்ணன்	பெங்களூர் விஜயலட்சுமி மற்றும் குழுவினர்	மாஸ்டர் என்.ஸ்ரீராம் — பாட்டு கே.ஆனந்த் — வயலின் எஸ்.ஸ்ரீதர் — மிருதங்கம்
25.12.91 (புதன்)	அன்னை சாரதாமணி நூல் வெளியீடு — பக்தி ஒலி	டி.வி.கோபாலகிருஷ்ணன் — பாட்டு (கர்நாடகம் மற்றும் இந்துஸ்தானி) ஆர்.கணேஷ் — வயலின் கப்பா ராவ் — ஹார்மோனியம் ஃபாஸல் குரேஷி — தபேலா	

* திரு. மகாராஜபுரம் சந்தானம் மற்றும் திரு.கே.ஜே. ஜேசுதாஸ் ஆகியோர்களின் கச்சேரிகள் ஆர்.ஆர். சபா அரங்கிலும், இதர நிகழ்ச்சிகள் பாரதிய வித்யா பவன் A/c ஹாலிலும் நடைபெறும்

ஆர்ட்ஸ் (Regd.) தொலைபேசி: 73388

கார்டன் தெரு, சென்னை-18

கலைவிழா

அவர்கள் விழாவை துவக்கி வைக்கிறார்

பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாதஸ்வரம்

Rotary Dist. 3230) இடம்: காமராஜ் நினைவாலயம், தேனாம்பேட்டை

பிற்பகல் 3.15 — 4.30 மணி	மாலை 5.00 — 7.00 மணி	மாலை 7.15 — 9.15 மணி
ஆர்.பிரசன்னா — கிட்டார் பக்கல் ராம்தாஸ் — புல்லாங்குழல் திருவிடைமருதூர் சங்கரன் — மிருதங்கம்	மகாராஜபுரம் சந்தானம் — பாட்டு நாகை முரளிதரன் — வயலின் வேலூர் ராமபத்திரன் — மிருதங்கம்	ஷோபனா நாராயண் — கதக்
அருணா சாய்ராம் — பாட்டு கல்பனா கிஷோர் — வயலின் எஸ்.பாலசங்கர் — மிருதங்கம்	மணி கிருஷ்ணஸ்வாமி மற்றும் குழுவினர்	யு.ஸ்ரீனிவாஸ் — மாண்டோலின் கோவை தட்சிணாமூர்த்தி — வயலின் கே.வி.பிரசாத் — மிருதங்கம் ஈ.எம். சுப்பிரமணியன் — கடம்
டாக்டர் கே.ஜி. விஜயகிருஷ்ணன் — வீணை பாபு ராஜசேகர் — மிருதங்கம்	டி.வி.சங்கரநாராயணன் — பாட்டு எம்.எஸ்.கோபாலகிருஷ்ணன் — வயலின் வேலூர் ராமபத்திரன் — மிருதங்கம்	கே.ஜே. ஜேசுதாஸ் — பாட்டு பெங்களூர் தியாகராஜன் — வயலின் கே.வி.பிரசாத் — மிருதங்கம் திருப்பூந்துறை ராதாகிருஷ்ணன் — கடம்
பவானி கோவிந்தன் — பாட்டு லால்குடி ராஜலட்சுமி — வயலின் டி.ஷியாம் சுந்தர் — மிருதங்கம்	ரவிகிரண் — சித்ர வீணை ஸ்ரீவத்சன் — வயலின் காரைக்குடி மணி — மிருதங்கம் பாலக்காடு சுந்தரம் — கடம்	டி.என்.சேஷ கோபாலன் — பாட்டு மைசூர் மஞ்சுநாத் — வயலின் டி.கே. மூர்த்தி — மிருதங்கம்
சுசிலா ராமன் — பாட்டு ராகவேந்திர ராவ் — வயலின் எஸ்.பாஸ்கர் — மிருதங்கம்	சுதா ரகுநாதன் — பாட்டு லலிதா ராகவன் — வயலின் திருவாரூர் வைத்தியநாதன் — மிருதங்கம்	கே.வி.நாராயணசாமி — பாட்டு கோவை பாலசுப்பிரமணி — வயலின் ஜே.வைத்தியநாதன் — மிருதங்கம் டி.வி.செல்வகணேஷ் — கஞ்சிரா
கீதா பென்னெட் — வீணை திண்டுக்கல் ராமமூர்த்தி — மிருதங்கம்	மதுரை ஜி.எஸ். மணி — பாட்டு திருப்பாற்கடல் வீரராகவன் — வயலின் ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ் — மிருதங்கம்	பரத நாட்டியம் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன்
அசோக் ரமணி — பாட்டு எஸ். வரதராஜன் — வயலின் சுரேஷ் ஒலப்பமன்னா — மிருதங்கம்	பம்பாய் சகோதரிகள் — பாட்டு எம்.ஏ. சுந்தரேசன் — வயலின் அர்ஜுன் குமார் — மிருதங்கம் என்.கோவிந்தராஜன் — கடம்	என். ரமணி — புல்லாங்குழல் கன்னியாகுமரி — வயலின் திருச்சி சங்கரன் — மிருதங்கம்
திருமதி கீதா ராஜா — பாட்டு வி.எல். குமார் — வயலின் ராமையா — மிருதங்கம்	டி.என்.கிருஷ்ணன், விஜி கிருஷ்ணன் நடராஜன், ஸ்ரீராம்கிருஷ்ணன் — வயலின் [illegible] திருவாரூர் பக்தவத்ஸலம் — மிருதங்கம் வைக்கம் கோபாலகிருஷ்ணன் — கடம்	[illegible] நடன அமைப்பு "கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்" நாட்டிய நாடகம் — சுதாராணி ரகுபதி அவர்களின் படைப்பு.
குமாரி எம்.லலிதா மற்றும் எம்.நந்தினி — வயலின் டூயட் [illegible] மகாதேவன் — மிருதங்கம்	லால்குடி ஜி.ஜே.ஆர்.கிருஷ்ணன் மற்றும் திருமதி விஜயலட்சுமி — வயலின் ரமேஷ் — மிருதங்கம் வி.நாகராஜன் — கஞ்சிரா	பரத நாட்டியம் — டாக்டர் பத்மா சுப்பிரமணியம்
ப்ரியா சகோதரிகள் — ஹரிப்ரியா மற்றும் சண்முகப்ரியா — பாட்டு கே.சிவராமன் — வயலின் தஞ்சாவூர் சுப்பிரமணியன் — மிருதங்கம் கார்த்திக் — கடம்	சிட்டி பாபு — வீணை பாலக்காடு சுரேஷ் — மிருதங்கம் உமையாள்புரம் நாராயணசாமி — கடம்	மோஹினி ஆட்டம் — பாரதி சிவாஜி

ஏ.வி.எஸ். ராஜா
தலைவர்

எஸ். சத்தியமூர்த்தி IA&AS
விழா தலைவர்

ஆர். ராஜகோபால்
எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி
காரிய தரிசிகள்

Co-Sponsors : Bank of Madura, Canara Bank, Chemplast, Chettinad Cements, City Union Bank, Eagle Flask, Enfield India, Essar Group, Indian Bank, IHFD, Indian Overseas Bank, ITC, India Cements, Kalki, Lakshmi Trade Credits, Lalitha Jewellery, Madras Refineries Ltd, Meltrack, Nalli, Park Hotels, Ready Money, Rotary District 3230, Sanmac, Shriram Group, State Bank of India, Trans India Resorts, UB Group, United India, Vazir Sultan Tobacco & Velvette.



ஷண்முகப்ரியா - ஹரிப்ரியா

இசையில் இரட்டையர்

"சேர்ந்து பாடுவது தனி சுகம்..."

"திட்டமிட்டே மேடைக்குச் சென்றாலும் ரசிகர்களின் மனநிலையை உணர்ந்தும், சகக் கலைஞர்களின் எண்ணங்களைக் கருத்தில் கொண்டும் எங்கள் கச்சேரிகளில் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு - அவை திருப்தியாய் நிறைவேறுவதுண்டு'' என்கிறார்கள் ஹைதராபாத் சகோதரர்கள்.

இரட்டையர்களான ராகவாச்சாரியும் சேஷாசாரியும் ஆரம்பத்தில், தனித் தனிக் கச்சேரிகளையே நடத்தி வந்தார்கள். 1975-ல் திருவையாறில் சேர்ந்து பாடின போது மிகுந்த பாராட்டைப் பெற்றிருக்கின்றனர். அதன்பின் சேர்ந்து பாட ஆரம்பித்தனர்.

நளினமும், வேகமும் இணைந்த இரு குரல்கள். ஐந்து வயதிலிருந்து பயிற்சி. சேர்ந்து பாடுவது தனி சுகம் என்கிறார்கள்.



ஹைதராபாத் சகோதரர்கள்

குடும்ப உறவு இன்னும் பிணைக்கிறது. சந்தோஷப்படுகிறார்கள். "சகோதரர்கள் என்ற பெயரில் வெற்றி கண்டபின் தனித் தனியே பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் எழுவதேயில்லை. ஆனால் தனியே பாடுவதும் சுகமானது'' என்கிறார்கள்.

"வீட்டுப் பயிற்சியின் போது சில சமயம் அடையும் சந்தோஷ எழுச்சி மேடையில் கிடைப்பதில்லை. ஆனால் சில சமயம் மேடைகளில் வீட்டுப் பயிற்சியை விட பூரணமும், சந்தோஷமும் கிடைக்கிறது'' என்று இருவிதமாகவும் பேசுகிறார்கள். இரண்டும் உண்மையே என்கிறார்கள்.

கணேஷ் - குமரேஷ்





சென்னை ரசிகர்களைப் பற்றி நினைவு கூர்கையில் நெகிழ்வடைகி றார்கள். 'இந்தியாவிலேயே இசை யைப் பூரணமாய் அனுப விக்கிற உயர்ந்த ரசிகர்கள்' என்கிறார்கள்.

வாய்ப்பாட்டில் சிறந்த கலைஞர் களான இவர்களில் ஒருவர் - சேஷாச்சாரி - ஆல் இந்தியா ரேடியோவில் பணி புரிவது மிருதங்க வித்வானாக! கிருஷ்ண கான சபா, மியூசிக் அகாடமியின் பரிசு கள் பெற்றிருக்கிற இவர்கள், கச்சேரி களின் போது அலுவலகங்களில் அனு மதியும், விடுமுறையும் பெறுவது ''பெரிய கச்சேரி போன்ற விஷயங்கள்'' என்கிறார்கள்.



☛ பம்பாய் சகோதரிகள்

அக்காவே குரு

பெரியப்பா ஆழியூர் நாராயணசாமி அய்யரிடம் முதலில் புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொண்டவர் அக்கா குஞ்சு மணிதான். அந்தக் கால வழக்கப்படி மிகச் சிறிய வயதிலேயே திருமணமாகி விட, இசைத் திறமைக்குத் தற்காலிகத் தடை - ஆனால் தங்கை நீலாவுக்குக் குருவாய் விளங்கிப் புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொடுத்தார். பத்து வருஷம் இளையவ ளான தங்கையிடம் பயிற்சியின் போது கண்டிப்புக் காட்டி பயிற்சி முடிந்ததும் பாசம் பொழிந்து, அவளையும் கச்சேரி செய்யும் அளவுக்கு வளர்த்தார். சில காலம் தனித்தனியே வாசித்தனர் இருவரும். ஓர் ஆடிக் கிருத்திகை தினத்தில் அந்தத் திருப்பு முனை அமைந்தது. காசி விச்வநாத சுவாமி கோயிலில் அன்று இருவரையும் சேர்ந்து வாசிக்கச் சொல்லிக் கேட்டார்கள்.

''வருடம் சரியாக நினைவில்லை. ஆனால் அன்று கச்சேரி அமர்க்களமாக அமைந்தது என்றார்கள். அன்று முதல் நாங்கள் தனியே மேடை ஏறவே யில்லை...'' என்கின்றனர் சிக்கில் சகோ தரிகள்.

''தனியே வாசித்த அனுபவமும் உங்க ளுக்கு இருக்கிறது... அதில் அதிக மன நிறைவு கிடைக்கிறது என்று தோன்ற வில்லையா...?''

''சேர்ந்து வாசிக்க ஆரம்பித்த பிறகு அப்படியொரு எண்ணமே தோன்ற வில்லை.''

''தனியே வாசிக்கும் போது மனோ தர்மத்துக்குக் கிடைக்கும் முழுச் சுதந்திரம் சேர்ந்து வாசிக்கும் போது கிடைக் காதே...?''

''அனுசரணையோடு வாசிக்க வேண் டும்தான். ஆனால் அது எங்களைக் கட்டுப் படுத்துவதாக நாங்கள் நினைக்கவில்லை. ராகம் வாசிக்கும் போதும், ஸ்வரம், நிரவ லின் போதும் அவரவர் தனித்தன்மை வெளிப்படவே செய்கிறது. ஒரே விஷ யத்தை இரண்டு பேர் எழுதினால் கையெ ழுத்து வெவ்வேறு மாதிரிதானே இருக்கும்! அதைப் போல்தான் இதுவும்....'' என்கிறார் குஞ்சுமணி.

நீலா, புல்லாங்குழலைச் சேர்ந்து இசைப்பதிலுள்ள நடைமுறைக் கஷ்டங் களை விளக்குகிறார்:

☛ சிக்கில் சகோதரிகள்



''மூங்கிலாலான இந்த வாத்தியம் தட்பவெட்ப மாறுதல்க ளால் தொட்டாற் சுருங்கி போல் பாதிக் கப்படும். ஏ. ஸி., ஃபான் போன்றவற் றின் குளிர்ச்சியிலும், மின்விளக்கு ஒளி, வாசிப்பவரின் உடல் சூடு போன்றவற்றின் வெப்பத்தாலும் புல் லாங்குழலின் சுருதி நுட்பமான மாறு தலுக்குள்ளாகும்.

இதை அனுபவத்தின் மூலம் உணர்ந்து, ஊதும் சக்தியை வேறு படுத்தித் தான் சீர் செய்ய முடியும். ஊதும் சக்தியோ நபருக்கு நபர் வேறுபடும். அதனால் இருவர் சேர்ந்து புல்லாங்குழல் வாசிக்கும் போது ஒத்தாற்போல் சுனாத மாக ஒலிக்கச் செய்வது மிகவும் கஷ்டம்...''

''...இருந்தாலும் சேர்ந்து வாசிக்கும் போது பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள முடிவதாலும் ஒருவரிடமிருந்து மற்றவர் மனோபலம் பெறுவதாலும் இதையே நாங்கள் மிகவும் விரும்புகிறோம்...'' என் கின்றனர் சிக்கில் சகோதரிகள் குஞ்சுமணி, நீலா.

இயல்பான விட்டுக் கொடுத்தல்

பம்பாய் ஜிம்கானாவுக்கு எதிரே வீடு. அங்கே கச்சேரி செய்ய வந்த பெரிய பாடகர்கள் பொது மக்களால் கொண் டாடப்படுவதைப் பார்த்துச் சிறுமி சரோஜா வுக்குத் தானும் பாடகி ஆக வேண்டும் என்ற இலட்சியக் கனவு உண்டாயிற்று.

திருச்சூரில் அத்தையிடம் வளர்ந்து வந்த தங்கை லலிதா பம்பாய் வந்ததும் சரோஜா வுக்கு ஆத்மார்த்தமான தோழி கிடைத்தாள். ஒருவர் கனவு இருவர் கனவாயிற்று. ஆரம் பம் முதலே தெளிவான இலக்கை நோக்கி இரு சிறுமிகளும் முனைப்புடன் முன்னேறி னார்கள்.

''கடவுள் அருளால், கல்யாணம் ஆன பின்பும் நாங்கள் இருவரும் ஒரே ஊரில் இருக்கிறோம். தினம் தவறாமல் பயிற்சி செய்ய, நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுக் கொள்ள எவ்வளவு சௌகரியம்...'' என்கி றார் சரோஜா.

''தனியாகப் பாட வேண்டும் என்ற ஆசையே வராதா...?'' என்று கேட்டால்,

''அது எங்களால் முடியவே முடியாது. ஒருவர் பக்கத்தில் இல்லாவிட்டால் மற்றவ ரால் பாடவே முடியாது...'' என்கிறார் லலிதா. ''போன வருடம் மியூசிக் அகாடமி கச்சேரியின் போது சரோஜாவுக்குக் கடுமை யான தொண்டைப் புண். என்னால் பாடவே முடியாது. நான் பார்வையாளர்க ளுடன் உட்கார்ந்து கொள்கிறேன் என்றாள். ஆனால் நான் சம்மதிக்கவில்லை. ஒப்புக் காவது நீ இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டேன்...'' என்கிறார் லலிதா.

''ஒருவர் பாட்டை உயர்வாகவும் மற்ற வரைக் கடுமையாகவும் விமர்சித்து எழுதப் பட்டால்...''

''அது எங்கள் உறவைப் பாதிக்காது. மொத்தத்தில் கச்சேரி நன்றாக அமைந்ததா என்பதே எங்கள் கவலை...''

''கோபமான வார்த்தைப் பரிமாறல்கள் - ஒருத்தரை ஒருத்தர் விமர்சித்தல்...''

''கச்சேரியில் தப்பு பண்ணுபவரை மற்ற வர் ஒரு கடுமையான பார்வை... அதோடு சரி. எல்லா விஷயங்கள் குறித்தும் அனல் பறக்கும் விவாதங்கள் எங்களுக்குள் நடக் கும். ஆனால் அந்த மோதல்கள் எங்களுடன் மேடையேற மாட்டா...''

''சேர்ந்து பாடுவதில் அனுகூலங்கள் என்ன...?''

''சில இடங்களில் சரோஜா குரலும் சில இடங்களில் லலிதா குரலும் அதிகம் எடு படும். அதை உணர்ந்து விட்டுக் கொடுத் துப் பாடும் போது நிறைவு கிடைக்கும். இந்த விட்டுக் கொடுத்தல் பல வருடப் பழக்கத்தில் எங்களை அறியாமலேயே நிகழ்ந்து வருகிறது...''

பம்பாய்ச் சகோதரிகளுள் ஒருவருக்குச் சினிமாவில் பாட வாய்ப்பு வந்த போது, 'அந்த நடனக் காட்சியில் இரு பெண்கள் சேர்ந்து பாடுவதாகக் கதையில் சிறு மாற்றம் செய்தால் ஒப்புக் கொள்கிறேன்' என்று அவர் கூற, அது சாத்தியமில்லாமல் போகவே அந்த வாய்ப்பு நழுவிப் போயிற்று.

''எங்களுக்கு அதில் இம்மியளவும் வருத்தமில்லை'' என்கின்றனர் சரோஜா, லலிதா.

கச்சேரி முடிந்ததும் சினிமாவுக்கு...

''ஒரு வீடு இரு வாசலில் உங்கள் இருவருள் ஒருவருக்கு மட்டுமே நடிக்க வாய்ப்புக் கிட்டியிருந்தால் ஒப்புக் கொண் டிருப்பீர்களா...?'' என்று கேட்டால்,

''ஒய் நாட்?'' என்று உற்சாகமாகக் கேட் கும் கணேஷ், குமரேஷ் சகோதரர்கள் வய லின் கச்சேரிகளை இணைந்து வழங்குவ தோடு, மற்ற கலைஞர்களுக்குப் பக்கவாத் தியம் வாசிக்கவும், 'ஜுகல் பந்தி' 'ஜாஸ்' என்று வித்தியாச முயற்சிகளில் ஈடுபடவும் தனித்தனியே மேடையேறுகிறார்கள்.

''கச்சேரிகளில் சேர்ந்து வாசிக்கும் போது சிறு குறைகள் வெளியே தெரியாமல் நிரவி விட முடியும் என்பது அனுகூலம் தான். ஆனால் அதற்காக நாங்கள் அலட்சிய மாக இருந்து விடுவதில்லை. இருவரும் தனித்தனியாகத்தான் பயிற்சி செய்வோம். அப்போதுதான் எங்கள் குறைகளை, தவறுகளை உணர்ந்து கச்சிதப்படுத்திக் கொள்ள முடியும்'' என்கின்றனர் கணேஷ் குமரேஷ்.

''சண்டை? சச்சரவு..?''

திருவேங்கடமுடையான் திருப்பள்ளியெழுச்சி

(ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதத்தின் தமிழ் வடிவம்)

M.S. SUBBULAKSHMI



ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இனிய
குரலிலே "திருவேங்கடமுடையான் திருப்பள்ளி
எழுச்சி" என்ற தலைப்பில் வெங்கடேச
சுப்ரபாதத்தினை தற்போது தமிழ் வடிவத்தில் அளித்து
பெருமை அடைகிறோம். சமஸ்கிருத சுப்ரபாதம் மற்றும்
ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்திரம் பேராசிரியர்
ச. பார்த்தசாரதி அவர்களால் தமிழாக்கம்
செய்யப்பட்டுள்ளது.
இத்துடன் திருமழிசையாழ்வார், குலசேகர ஆழ்வார்,
அருணாசல கவிராயர் மற்றும் பாபநாசம் சிவம்
போன்ற பெருந்தகைகள் இயற்றிய பெருமாள்
புகழ்பாடும் இனிய தமிழ்பாடல்களையும்
ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின்
இனிய குரலில் கேட்டு மகிழுங்கள்.



HMV

The Gramophone Company of India Limited,
6-B, Nungambakkam High Road, Madras-600 034.

RPG

''அண்ணன் - தம்பி என்ற உறவு முறையையே நாங்கள் பாராட்டுவதில்லை. எங்கள் குடும்பத்தில் எல்லோருமே நண்பர்களாகத்தான் பழகுகிறோம். அதனால் எங்கள் உறவு ரொம்ப ஆரோக்கியமாக இருக்கும். சண்டையிருக்காது, போட்டியிருக்கும் - கச்சேரியில் ஸ்வரமோ நிரவலோ வாசிக்கும் போது ஒருவரை விட அடுத்தவர் பிரமாதமாக வாசித்து விட வேண்டும் என்ற வேகம் வரும்...''

''கச்சேரி முடிந்த பிறகு போஸ்ட் மார்டம்...?''

''ஐயோ! கிடையவே கிடையாது - சபாவிலிருந்து நேரே சினிமாவுக்குப் போய் விடுவோம்.... கொஞ்சம் அரட்டை போட்டு விட்டுத்தான் அலசுவோம்...'' என்கின்றனர். இந்த 'ஜாலி'யான சகோதரர்கள்.

''சேர்ந்து வாசிப்பதால் சேர்ந்து பிரயாணம் செய்ய முடிகிறது, நிறைய நேரத்தைச் சேர்ந்து செலவிட முடிகிறது. எத்தனை சகோதரர்களுக்கோ நண்பர்களுக்கோ இந்த அதிர்ஷ்டம் கிடைக்கும்...?''

பத்து நிமிடச் சண்டைகள்

ஷண்முகப்ரியா விலங்கியல் பட்டப் படிப்புப் படிக்கிறார். ஹரிப்ரியா ஆங்கில இலக்கியம் - சிறு வயது முதலே சேர்ந்து பாடத்தான் ஆசை.

''ஒருவர் பாடுவதைக் கேட்பதைக் காட்டிலும் இருவர் மாற்றி மாற்றிப் பாடுவதைக் கேட்பதில் சுவாரஸ்யம் அதிகம். அதனால் எங்களைப் போல் சேர்ந்து பாடும் சகோதரிகளுக்கு வாய்ப்புகள் அதிகம்'' என்கிறார் ஷண்முகப்ரியா.

சகோதரிகள் இணைந்தே கச்சேரிகளைத் திட்டமிடுகின்றனர். 'மெயின்' ராகம் பாடுவதில் முறை வைத்துக் கொள்கின்றனர்.

''பாட்டு உள்பட பல விஷயங்கள் பற்றிச் சண்டை வரவே செய்யும். ஒருவரோடொருவர் பேசாமல் கூட இருப்போம்... ஆனால் இந்த 'யுத்தம்' பத்து நிமிடங்களுக்கு மேல் நீடிக்காது...!'' என்கிறார் ஹரிப்ரியா.

திருமணமான பிறகும் இதே போல் சேர்ந்து பாடுவதைத் தொழிலாகக் கொள்ள முடியுமா? பிரச்னைகள் எழாதா?

''பிரச்னைகள் எழ விட மாட்டோம். தகுந்த மாப்பிள்ளைகள் கிடைக்கும் வரை காத்திருப்போம்'' - என்று மிக உறுதியுடன் கூறுகிறார்கள் இந்தச் சகோதரிகள்.

- எஸ். ஆர்., ஆர்பிஎஸ்.

படங்கள் : யோகா



பொன் விழா கவிதைப் போட்டி

அறிமுக எழுத்தாளர்

அது ஒரு காலம்

* நினைவிருக்கிறதா?
கதிரோன் கண்மூடப் போகும்
காலத்தில்
நிலவாய்
ஜன்னலில் ஜனிப்பாயே!
நினைவிருக்கிறதா?
அன்னை ஓடிவந்து
சன்னல் வானத்தைச்
சாத்தி விட்டு
அமாவாசையை அறிவிப்பாளே...
அப்பொழுது
தூறல் விழுமே...
நம்மிருவர் கண்களிலும்
நான்கு சொட்டுக் கண்ணீராய்...
நினைவிருக்கிறதா?

* எதிர்காலக் கனவுகளில்
எத்தனை இரவுகளை
நாம் பகலாக்கினோம்!...
துயிலாமையின்
அடையாளமாய்
தூதுவிடுவாயே விளக்கொளியை...
நானோ
மனத்தால் மட்டும்
மௌனமாய்த் தாலாட்டுவேனே
நினைவிருக்கிறதா?

* வெள்ளிதோறும்
விடுதலை பெற்று
அர்ச்சிக்க வருவாயே...
என்னையும்!
மடிமீது சாய்ந்துகொண்டு
நான் நயனத்தால் யாழ்மீட்ட
இதயம் கட்டும்
மெட்டுக்கு
கவிதையாய்
கண்ணீர் கொட்டுமோ...
நினைவிருக்கிறதா?
இருந்தால்... இறக்கி விடு
இப்பொழுது
நான் கணவன்
நீ மனைவி
வேறு வேறு ஜீவன்களுக்கு.

- டி. ராம்சி

அபிநய அரங்கம்!

நடனக் கலைஞர்களால் பிரபலப் படுத்தப்பட்ட சில பாடல்களுக்கு யார் யார் அபிநயம் பண்ணினால் சிறப்பாயிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்ததில்...... (சில பாடல்களில் வார்த்தை மாற்றங் களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் மன்னிப் பார்களாக!)




தூண்டிற்புழுவினைப் போல், வெளியே சுடர் விளக்கினைப் போல், விலை வாசி ஏற, ஏற எனது நெஞ்சம் துடிக்குதடி!
ஸ்ரீமான் பொதுஜனம்
பதறி வருகுது மருகுதென் மனம், விலை குறைய வகை சொல்லடி!
மன்மோகன் சிங்
சுடர் சட்டம் அளிக்கும் அதிகாரங்கள்
இதை விட இன்னும் வேறு வேண்டுமோ பொருளே..?
அதுவும் சொல்லுவாள்-பாப்பாத்தி அநேகம் சொல்லுவாள் அவள் மேலே குற்றம் உண்டடி!
யாரோ? இவர் யாரோ? என்ன பேரோ? அறியேனே... யாரோ?
எம்.எல்.ஏ

சுஜாதா

20

எல்லோரும் 'சைட்'டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். மக்களின் ஆரவாரமும் ஆர்வமும் 'ஜல்'லென்று ஒலிக்க அவர்கள் பேச்சிலிருந்து, தெய்வத்தன்மை கலந்த ஏதோ ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது என்பது மட்டும் தெரிந்தது. என்ன அதிசயம் என்று ஆர்வம் மிகுந்தவனாக அவன் தன் மனைவியைப் பார்த்தான். ப்ரமிளா களைப்புடன் சற்றே வாய் திறந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

மனோஜ் பாண்ட் மாற்றிக் கொண்டு செருப்பை அவசரமாகக் கால்களில் செருகிக் கொண்டு புறப்பட்டான்.

சைட்டை நெருங்க நெருங்கக் கூட்டம் அதிகமாகிக் கொண்டு வந்தது. எஸ்.பி., ஷண்முகம், டிஸி, நடேச பண்டிதர், பூசாரி எல்லோரும் தென்பட்டார்கள். எல்லோரும் முனீஸ்வரன் மரத்தின் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். மரம்தான் நிற்கவில்லை! ஆம் மரம் சரிபாதியாக உயரவாகில் நெடுக அதன் உடல் பூரா வியாபித்த பிளவில் வெட்டுப்பட்டு இரு பாதியாக, இடம் வலமாகச் சரிந்திருந்தது. பிளவுபட்ட பகுதியில் சிவப்பாக ரத்தத் தீற்றல் போலத் தெரிந்தது. திரவம் கசிந்தது.

''என்னங்க ஆச்சு?''

''அதிகாலைல இந்த சிங்கு தாடிக்காரரு சைட்டுப் பக்கம் போயிருக்கிறார். திடீர்னு ஏதோ பெரிசா முறியறா மாதிரி சப்தம் கேட்டுச்சாம். மரம் தானா பிளந்துக்கிச்சாம்.''

பூசாரி ''முனீஸ்வரன் கிளம்பிப் போய்ட்டாரு. மண்டபத்தில் சிலை கிடைச்சுதில்லை? அந்த அம்மா சூலம் அடையாளம் காட்டினாங்கல்ல? அந்தச் சிலைக்கு மரத் தைப் பிளந்துக்கிட்டு எழுந்து போய்ச் சிலையோட ஒண்ணாயிட்டார். ஐக்கியமாயிட்டாரு... எல்லா சக்தியும் அங்கே போயிருச்சு.. ரத்தம் பாருங்க! வழியுது!''

மரப்பிளவிலிருந்து ஏறக்குறைய கோந்தின் பதத்துக்கு வழிந்த அந்த கருஞ்சிவப்பு திரவத்தை அவர்கள் பேருக்குப் பேர் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார்கள்.

''புது ஸ்தலத்துக்குப் புறப்பட்டுப் போயிட்டாரு அந்தப் பொண்ணு மரத்தில் தொங்கினப்பவே இதனுடைய தூய்மை போயிருச்சில்லை; இடம் பெயர்ந்துட்டாரு.''

''ராத்திரி நிச்சயம் மின்னல் அடிச்சுது. பல பேர் பார்த்தாங்க.''


''நான் கூடப் பார்த்தங்க. இடி கூட இடிச்சுது." கிராமத்தில் பல பேர் அந்த மழையற்ற மின்னலையும் இடியையும் கேட்டிருந்தார்கள். இப்போது அவர்கள் பரவசத்தால் செலுத்தப்பட்டவர்கள் போல முனீஸ்வரனின் புது ஸ்தலத்துக்குச் சாரி சாரியாகச் சென்றார்கள். அனைவரும் மரத்தின் ஏதாவது ஒரு கிளையையோ கொம்பையோ இலையையோ உடைத்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்.

தன் கண் முன்னால் நடக்கும் இத்தனை அதிசயங்களையும் வகைப்படுத்த இயலாமல் மனோஜ் அந்தக் கூட்டத்தில் திரிந்தான். பலர் அவனைச் சுட்டிக்காட்டி ''இவர் சம்சாரத்தின் பேர்லதான் சாமி வந்து விளையாடிச்சு!'' என்றனர். மனோஜ் சைட்டை நெருங்கும் போது முனீஸ்வரன் மரம் ஏறக்குறைய தரைமட்டத்துக்கு வந்து ஒன்றிரண்டு உடைந்த கிளைகளும் காய்ந்த இலைகளும்தான் பாக்கியிருக்க, உஜாகர் சிங் அவற்றை நீக்கிக் கொண்டிருந்தான். மனோஜுக்கு நடப்பது எதுவும் புரியவில்லையென்றாலும் ஒருவிதத்தில் மனதோரத்தில் ஒரு நிம்மதி, அலுப்பு நீக்கம் இருப்பதை உணர்ந்தான்.

மரம் போய் விட்டது. தரைமட்டமாகி விட்டது. இனி பெரிய ஸாட்டிலைட் நிறுவுவதில் எதும் தடை இல்லை. இந்த நேரத்தில் ஷண்பேகர் இல்லையே என்று வருத்தப்பட்டான். முதலில் சின்னதாகத் துவங்கி பூதாகாரமாகப் பெரிதாகி இரண்டு மரணங்கள் வரை தீவிரமாகி விட்ட பிரச்னை ஒரே ராத்திரியில் கரைந்து போய் விட்டது.

உஜாகர் சிங் மரத்தின் கடைசி மிச்சங்களை நீக்க, கர்த்தார்சிங் ''ஸாப் ஸப் ஸாஃப் ஹோகயா '' (அய்யா, எல்லாம்

கம்ப்யூட்டர் கிராமம்



சுத்தமாகி விட்டது) என்றான். ''நாங்கள் இன்றிரவு திரும்பிச் செல்லலாம் என்று இருக்கிறோம்.''

''சரி. அன்டென்னாவை பெடஸ்டலில் ஏற்றியாகி விட்டது. உங்களுக்கு வேலை யில்லை இருவரும் போகலாம்'' என்றான்.

இப்போது மரத்தின் அருகில் யாரும் இல்லை. மரமே இல்லை. சற்றே சரியும் புல்வெளியில் நீண்ட தூரம் தடை எதுவும் இல்லாமல் சுத்தமாக இருந்தது. பம்பாயி லிருந்து மற்றொரு இன்ஜினியரை அனுப்பு மாறு விஸாட் சி றி ய ஸாட்டிலைட் இணைப்பின் மூலம் கேட்டான். வாக தேவன்தான் பதில் சொன்னார்.

''மரம் என்ன ஆச்சு?''

''மரத்தை வெட்டியாச்சு.''

''இஸிட்? யாரு?''

''தானாவே பிளந்து விட்டது!

''மின்னல் அடிச்சோ அல்லது தெய்வச் செயலோ மரம் விழுந்துட்டுது!''

''ஜனங்கள் கோபிக்கவில்லையா? முனீஸ்வரன் மரமாச்சே?''

''முனீஸ்வரன் வேற இடத்துக்கு ஜெய மண்டபத்துக்குள் போய் விட்டார்.''

''மனோஜ் நாம் எந்த யுகத்தில் இருக்கிறோம்?''

''அதுதான் எனக்கும் சந்தேகமாக இருக்கிறது. ஆனால் நான் சொன்னதெல்லாம் அப்பட்டமாக ஸ்பஷ்டமாக நடந்தது. என் மனைவி ப்ரமிளாவின் மேல் ஒரு ஆவேசம் போல வந்து அவள் நேராக நடந்து ஒரு பாழடைந்த மண்டபத்தைக் காட்ட, அதில் முனீஸ்வரன் சிலை புதைந்திருந்தது. ராத்திரி ஒரு மின்னலுடன் இடி இடித்ததைப் பல பேர் பார்த்திருக்கிறார்கள். உஜாகர்சிங் கர்த்தார் சிங் இருவரும் பார்த்தனர். மரம் பிளந்து போய் அதன் மத்தியிலிருந்து ரத்தம் வந்தது!''

''மனோஜ் நிஜமாகவே ஆர் யு ஆல் ரைட்? ஏதாவது நாட்டுச் சரக்கு... போட்டிருக்கிறாயா?''

''நிஜமாகவே வாசு. நீங்கள் இங்கே வந்த போது இந்த மாதிரி எல்லாம் நிகழும் என்று எதிர்பார்த்திருப்பீர்களா? ஒரு சமயம் எனக்குத் தோன்றுகிறது. தப்பான நூற்றாண்டில் இருப்பவர் நாம்தான் என்று. நமக்குத்தான் இதெல்லாம் வியப்பாக இருக்கிறது. கிராமத்து மக்களிடத்தில் ஆந்தேகம் என்பதே இல்லை. மரத்திலிருந்து கசிவது ரத்தம் என்றால் ஆம் அது ரத்தம் தான். சந்தேகமே இல்லை. முனீஸ்வரன் நடந்து போனாரா? ஆம்! இந்த இடத்தில் வந்து ஸாட்டிலைட் எர்த் ஸ்டேஷன் அமைத்து என்ன சாதிக்கிறோம் என்று எனக்குக் குழப்பம் வாசு. சாலையின் ஒரு மருங்கில் இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு மறு மருங்கில் இரண்டாம் நூற்றாண்டு!

''இது இந்தியா!'' சரி விஜய்குமாரை அனுப்புகிறேன். சட்டுபுட்டென்று வேலையை முடித்து விட்டு வந்து விடு. டி அண்ட் ஈ காரன் வந்தான்னா அவன் சார்ஜ் ஒப்புக் கொள்ள வேண்டும்.''

''இன்னும் அதற்குச் சமயம் வரவில்லை. இப்போதுதானே நிஜமாக வேலை துவங்குகிறது. இது வரை மரம் வெட்டுவதில்தானே கவனம்!''

சாயங்காலம் வரை சுறுசுறுப்பாக உழைத்தான். எல்லா 'சப் அசெம்பிளி'களையும் இணைத்து ஸிக்னல் ஜெனரேட்டர் வைத்துப் பரிசோதித்துப் பார்த்து விட்டான். ப்ரமிளா சாப்பிட எதுவும் அனுப்பவில்லை. பசியாக இருந்தது. பைக்குள் இருந்த அத்தனை பிஸ்கட்டுகளையும் சாப்பிட்டும் பசி அடங்கவில்லை. வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு மறுபடி வரலாம் என்று தீர்மானித்தான்.

சாலையோரமாக நடந்த போது இணைச் சாலையில் தள்ளி இருந்த மண்டபத்தில் பெட்ரமாக்ஸ், தீப்பந்த வெளிச்சம், தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அபஸ்வர நாயனம், கொட்டு, எல்லாம் கேட்பதை உணர்ந்து வேடிக்கை பார்க்க அருகே சென்றான். பஞ்சு மிட்டாய் பலூன் வியாபாரிகள் கூட அந்த இடத்துக்கு வந்து விட்டார்கள். யாராலும் யாரையும் கட்டுப்படுத்த இயலவில்லை. பூசாரி ரொம்ப பிஸியாய் இருந்தார். குளித்து விட்டு, குடுமியில் நீர் சொட்டச் சொட்டப் பிரசாதத்தைப் பலருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டு வந்தார்.

போலீஸ் அதிகாரிகள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் சமயம் எஸ்.பி. செல்வகுமார் அவனிடம் வந்தார். ''உங்க ப்ராப்ளம் ஸால்வ் ஆயிருச்சு மனோஜ். மரத்தைப் பிளந்தாச்சு!''

''ஆமாங்க.''

''என் தலைவலிதான் இன்னும் ஓயலை. அந்தப் பொண்ணு தொங்கினதாவது தற்கொலைன்னு சந்தேகமா சொல்லிரலாம். ஆனா இந்த இரண்டாவது கரி மூட்டை பிணம்? உங்காளு ஷண்பேகர் கிடைக்கவே இல்லை.''

''இறந்தவன் யாருன்னு இன்னும் கண்டுபிடிக்கலையா?''

''அவன் பூசாரியோட கூட்டாளி. வாட்ச்மேன் உத்தியோகம் பார்த்தவன். நீங்கதான் அவனைக் காவலுக்கு எடுக்கறதாச் சொன்னீங்க.''

''இருக்கலாம். காவலுக்கு வழக்கமா வர்றவனைக் கொஞ்ச நாளா காணும்.''

''அவனையும் முனி அடிச்சிருக்குமா?''

''மிஸ்டர் செல்வகுமார், நீங்க இதையெல்லாம் நம்பறீங்களா?''

''சமீப காலத்தில நடக்கிற விஷயங்களைப் பார்த்தா நம்ப வைக்குதுங்க. உங்க மனைவிக்கு எப்படி மண்டபத்தின் நடுவில சிலை புதைஞ்சு இருக்கிறது தெரியும்?''

''எப்படின்னு எனக்கு உடனே சொல்லத் தெரியலை...''

''இந்த முனீஸ்வரன் பிஸினஸ்ல ஏதோ



''பாகவதர் ஏன் உறுமிக் கொண்டு இருக்கிறார்?''

''இசை விழாக் கச்சேரி விமர்சனத்தில் 'ஆலாபனையை விஸ்தாரமாக்கி, சாகித்யத்தைக் குறைத்து விட்டார்' என்ற வரியில் பெரிய 'ற' விற்குப் பதிலாச் சின்ன 'ர' அச்சாகியிருந்ததாம்.

- ஜம்புநாத்

இருக்குதுங்க. உங்க மனைவி கட்டிக் காட்டின பிற்பாடு புகழ் பயங்கரமாப் பரவி ஸ்பெஷல் பஸ்ஸு... டீக்கடை, வளையல் கடைன்னு கிராமத்தில வியாபாரம் பணப் புழக்கம் எல்லாம் ஜாஸ்தியாயிருச்சுங்க. சட்டை போடாம உழுதுக்கிட்டு இருந்த வங்க 'டி ஷர்ட்'டை மாட்டிக்கிட்டுத் திரிய றாங்க!''

''ஆச்சர்யந்தாங்க.''

''ஷண்பேகர் உங்களைக் காண்டாக்ட் பண்ணலைதானே!''

''இல்லைங்க,நிச்சயமா.''

திரும்ப வந்த போது ப்ரமிளா அறை யில் இல்லை. டிஸி வீட்டுக்குப் போய் விசாரித்த போது அங்கேயும் இல்லை. ஒரு வேளை முனீஸ்வரனுடன் ஐக்கியமாகிப் போய் விட்டாளோ என்ற அச்சம் ஏற் பட்டது. அண்மைக் காலங்களில் அவள் நடந்து கொண்டவிதம் புரிபடவே இல்லை. எப்படி அவளுக்கு அந்தத் தமிழ் பாட்டு எல்லாம் தெரிந்தது? எப்படி அவளுக்குப் பேசும் தமிழே அத்தனை மாறி விட்டது...? ஹிஸ்டீரியா என்று சொல் வதா, இல்லை தெய்வீகமா...? எவ்வளவு தூரம் அவள் சொல்லும் காரணங்களை நம்புவது? அந்த ஆவேசத்திலிருந்து விழித்து எழும் போது தனக்கு எதுவும் ஞாபகமில்லை என்கிறாளே! சுற்றுப்புறத் தில் நடப்பதைக் கவனிக்காத அந்த ஆவே சம் என்ன? இப்போது எங்கே போயி ருக்கிறாளோ?

மறுபடி அவளை இழக்கப் போகி றோம், என்கிற பயம் வயிற்றில் உணர்ந் தான்.

முனீஸ்வரன் மண்டபத்தருகில் எஸ்.பி. செல்வகுமார் சொன்னபடி நிறையக் கூட் டம் இருந்தது. தற்காலிகமான கடைகள் நிறைந்து, ஒரு ஆசாமி முனீஸ்வர ஸ்தோத்ர மாலை என்ற புத்தகம் கூட அவசர அச்சடித்து விற்றுக் கொண்டிருந்தான். மனோஜின் கண்கள் ப்ரமிளாவைத் தேடின. மண்டபத்துக்குச் செல்லும் பாதை மணல் மூட்டைகள் வைத்துத் தண்ணீரில் நனை யாமல் சௌகரியம் பண்ணப்பட்டிருந்தது. பூசாரி ரொம்ப பிஸியாக இருந்தார். இன்ஸ் பெக்டர் ஷண்முகம் இருந்தார்.

''என்னங்க! இனிமே உங்க சைட்டு பக்கம் யாரும் வர மாட்டாங்க.''

''ஷண்முகம். என் மனைவியைப் பார்த் தீங்களா?''

''வீட்டில இல்லை?''

''இல்லை.''

''இங்கே வரலைங்க. காலைலருந்து இங்கதான் இருக்கிறேன்.''

இப்போது பயம் அதிகமாகியிருந்தது.



ஸ்வரமில்லாத ராகம்

❑ ஏழு ஸ்வரங்களைக் கொண்ட ராகங்கள் சம்பூர்ணம் என்று சொல்லப்படும். பழங்காலத்தில் ராகத்திற்குக் குறைந்தபட்சம் ஐந்து ஸ்வரங்கள் தேவை என்று இருந்தது. இதைப் பற்றி ஓர் இசை மேதை பேசும் போது, ''ஐந்து நான்காகவும், மூன்றாகவும் குறைந்து விட்டது. இதே ரீதியில் போனால் ஒரு நாள் ஸ்வரமே இல்லாத ராகத்தைக் கண்டுபிடித்தாலும் கண்டுபிடித்து விடுவார்கள்!'' என்றதும் எல்லோ ரும் சிரித்தனர்.

தொடர்ந்து அவர், ''நான் அந்த நாளைத்தான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். ஏனெனில் ஸ்வர மில்லாத ராகத்தைக் கையாளும் போதாவது அவர்கள் நிசப்தமாக இருப்பார்கள் இல்லையா?'' என்ற போது, கரகோஷத்தைப் பார்க்க வேண்டுமே!

- வி. ரகுராமன்

வாடகை சைக்கிள் எடுத்துக் கொண்டு மறு படி டிஸி வீட்டிற்குச் சென்ற போது உஜாகர் சிங் லாரியில் செல்வதைக் கவனித்தான். மற்ற சிங்கைக் காணவில்லை. ஒரு நிமிஷம் சாயங்கால மயக்கத்தில் உஜாகர் சிங்கின் பக்கத்தில் ஒரு பெண் உருவம் தெரிவது போல இருந்தது. சட்டென்று பார்த்தால் ப்ரமிளா போல இருந்தாள்.

ப்ரமிளாவா? உஜாகர் சிங் பக்கத்திலா? அதுவும் லாரியிலா? என்று யோசிப்ப தற்குள் லாரி செடுப்பாக்கம் நெடுஞ்சாலை யில் சென்று மறைந்தது. மனோஜ் இலக் கில்லாமல் அது சென்ற திசையில் சைக் கிளை மிதித்தான்.

மறுபடி 'சைட்'டை அணுகிய போது மரம் இல்லாதது விரிச்சோடியிருந்தது. கட்டட உச்சியில் ஸாட்டிலைட் அன் டென்னா பெரிசாக வீற்றிருக்க, அருகே அது குட்டி போட்டாற் போல் 'விஸாட் கிண்ணி... லாரி சாலையில் நின்று கொண் டிருந்தது.

உஜாகர் சிங்கும் அந்தப் பெண்ணும் உள்ளே செல்ல, நிச்சயம் அந்தப் பின்பக்கம் பரிச்சயமாகத்தான் இருந்தது. ப்ரமிளா எப்படி சர்தார்ஜியுடன்.... ஒருவேளை அவள் அவளை ஏதாவது பொய் சொல்லி அழைத்து வந்திருக்கிறானோ? ஐயோ! சைக்கிளைக் கிடத்தி விட்டு வேகமாக அவன் ஒற்றையடிப் பாதையைக் கடந்து வாசலை அணுகினான்.

அணுக அணுகப் பேச்சுக் குரல் தெளி வானது.

ப்ரமிளாவின் குரல்தான்.

(தொடரும்)

சின்ன பச்சை ரேடியோ - நிஜ ரேடியோ மாதிரியே குட்டையாய், குண்டாய்; குமிழ்களுடன் இருக்கும். சொப்புக் கூடையிலிருந்து அதைப் பொறுக்கி எடுத்துத் தரையில் வைப்பாள் லக்ஷ்மி.

''பாரு பாட்டி! நான் அம்மா மாதிரியே ரேடியோவுல கச்சேரி பண்றேன்...''

கவுனை இழுத்து முழங்காலை மறைத்து விட்டுக் கொண்டு ரேடியோ வுக்குப் பின்னால் உட்கார்ந்து பாடுவாள்.

''தத்தரின்னா... னா... னோ... தான்னனனா....''

பாட்டி பொக்கை வாய் தெரிய 'கெக் கெக்' என்று சிரிப்பாள். உடம்பு குலுங்கச் சிரித்ததில் கண்ணோரத்தில் நீர் கோர்த்துக் கொள்ளும். தலை முக்காடு நெகிழ்ந்து போகும்...

''ஏன் பாட்டி சிரிக்கறே...?''

லக்ஷ்மி புரியாமல் கேட்பாள் - பச்சை ரேடியோ பின்னாலிருந்தபடி.

''ஒன்னுமில்லேடி என் கண்ணே...''

லக்ஷ்மி திரும்பவும் முனைப்புடன் கண்ணை மூடிக் கொண்டு பாடுவாள் ''ஸா... ஸரிக ஸ.... பஸ... பஸ...''

பாட்டியிடமிருந்து திரும்பவும் சிரிப்பு - பீரிடும் சிரிப்பு.... தவம் கலைந்தவளாக எழுந்திருப்பாள் லக்ஷ்மி. நெகிழ்ந்து சரியும் பாட்டியின் முக்காடைப் பிடித்து ஆத்திரத் துடன் இழுத்து விட்டு விட்டு ஓடுவாள்.

''ஏய்! பொல்லாது! துஷ்டை துஷ்டை!'' - பாட்டி சபித்தபடியே அவசர அவசரமாக மொட்டைத் தலைக்கு மீண்டும் முக்காடிட்டுக் கொள்வாள்.

''லக்ஷ்மி...''

பாட்டி எழுப்பும் அதிகாலை நேரத்தில் தம்பூரா சுருதியுடன் இழைய இழைய அம்மா சாதகம் பண்ணிக் கொண்டிருப் பாள். மந்தர ஸ்தாயியில் அந்தக் குரல் 'கும்' மென்று லக்ஷ்மியின் நெஞ்சுக்குள் புகுந்து கொள்ளும். இனம் புரியாத ஒரு இன்பம் கலந்த வேதனையை உண்டுபண்ணும்.

பாட்டு ரூம் வாசலில் நின்றபடியே அம்மா பாடுவதைப் பார்ப்பாள். பல் தேய்க்காமல் உள்ளே போகக் கூடாது. அம்மா அப்படியே அகார சாதகத்தில் கரைந்து கொண்டிருப்பாள். ''இதுவா என் அம்மா...? இல்லை... இவள் வேறு யாரோ...'' பத்து வயதின் புரிந்தும் புரியாத மனத்துக்கு, தம்பூராவை மீட்டியபடி, இலே சாகத் தலை உயர்த்திக் கண் மூடிப் பாடும் அம்மாவைப் பார்த்தால், சுவாமி ரூமில்





இருக்கும் தவக்கோல காமாக்ஷி ஞாபகம் வரும்.

'அம்மா எனக்கும் பாட்டு கத்துக் குடு. சீக்கிரம் வந்துடு நீ. வந்ததும் பாட்டுக் கிளாஸ் ஆரம்பிக்கணும்...'

குண்டு குண்டான எழுத்தில் வாரம் ஒரு லெட்டர் எழுதுவாள் லக்ஷ்மி. அம்மாவின் ஆறு மாத அமெரிக்கா கச்சேரி டூர் டைம்டேபிள் பார்த்து அவள் கடிதங்களைச் சரியான முகவரிக்கு அனுப்புவார் அப்பா.

'லக்ஷ்மி குட்டிக்கு நான் வந்ததும் நல்ல பாட்டு வாத்தியார் அமர்த்துகிறேன்...' - அப்பாவுக்கு எழுதுவாள் அம்மா. 'நானே கத்துக் கொடுக்கலாம் என்றால் ஏது நேரம்...?'

பாட்டு வாத்தியார் வயதானவர். 'ஓளம்'பாஸூத 'வெளங்'கடேச என்று வேடிக்கையாய் உச்சரித்தார். லக்ஷ்மி சிரித்த போது 'ஷ்... சிரிக்காம பாடணும்' என்று உதட்டின் மேல் விரல் வைத்து எச்சரித்தார். அவள் முழுசாக முதல் வர்ணம் கற்றுக் கொண்டு பாடியதும் ''பேஷான ஞானமிருக்கு...'' என்று பாராட்டினார்.

லக்ஷ்மி கீர்த்தனை பாட ஆரம்பித்த போதும் அப்படியே பாராட்டினார் பாட்டு வாத்தியார். அந்தப் பாராட்டில் தொக்கி நின்ற 'ஆனால்' அப்போதுதான் லக்ஷ்மிக்குக் கொஞ்சமாகப் புரிந்தது. ''பேஷான ஞானமிருக்கு...''



'ஆனால் வேறு ஏதோ ஒன்று இல்லை' என்கிறார். என் பாட்டில் என்ன இல்லை...? அம்மா மாதிரி கண் மூடி, மனம் லயித்துப் பாடினாலும் ஏதோ குறை... என்ன... என்ன?'

யோசிக்க யோசிக்க, கவனிக்க கவனிக்க உண்மை புலப்பட்டது. அம்மாவைப் போல் இழுத்த இழுப்புக்குக் கூட வர குரல் மறுத்தது. மனத்துக்குப் படிந்த ஸ்வரங்கள் குரல் வடிவாய்ப்பிசிறின்றி வரவில்லை. அனாயாசமாய் அம்மா பிடித்த பிடிகளும் சங்கதிகளும் அவஸ்தைப்பட்டாலும் லக்ஷ்மிக்கு வரவில்லை.

''எனக்குப் பாட்டு வாத்தியார் வேண்டாம். நான் பாடல்லை...''

அம்மா ஓய்வாய் இருந்த ஓர் அரிய தருணத்தில் சொன்னாள்.

''ஏன் கண்ணம்மா...?''

கேளாத பாடல்

சிஷ்யா

''எனக்கு வரல்லை...''

''வரல்லைன்னா பரவாயில்லை. பாட்டுத் தெரியணும். கத்துக்கோ....''

'முயற்சி பண்ணு வரும். உன்னால் முடியும்' என்று அம்மா சொல்லவில்லை.

''லக்ஷ்மி, அடுத்த வாரம் தியாகராஜ கீர்த்தனை 'காம்படிஷன்' இருக்கு... நீ சேரணும்...''

''மிஸ்... எனக்குத் தெரியா...''

மியூசிக் டீச்சர் மிஸ் தங்கம் பதில் சொல்வதற்கு விடவில்லை.

''ம்... எல்லாரும் ஒழுங்காப் பாடுங்க... 'பூல பாண்பு மீத பாக....' ...இது என்ன ராகம் தெரியுமா...?''

'பெல் அடித்ததும் சொல்லி விட வேண்டும்; என்னால் 'காம்படிஷனில்' பாட முடியாது...' லக்ஷ்மி நினைத்துக் கொண்டாள். ஆனால் மணியடித்ததும் மாத்ஸ் டெஸ்ட்! மனசுக்குள் கணக்குப் போட்டுக் கொண்டே பாடும் பெண்கள் அடுத்த வகுப்புக்கு ஓட, அவளும் அவர்களுடன் ஓடினாள்.

காம்படிஷன் நேரத்துக்கு லக்ஷ்மியைத் தேடி அழைத்து வர ஆள் அனுப்பப்பட்டது. மைதானத்தின் கடைசி மரத்தடியிலிருந்து மியூசிக் கிளாஸ் வரை சரோ அக்கா புத்தி சொல்லி அழைத்து வந்தாள். ''நீ நல்ல பாட்டுக் குடும்பத்துப் பொண்ணு. இப்படிப் பாட்டைக் கண்டால் ஓடலாமா...? தினமும் சாதகம் பண்றியோல்லியோ...?''

''எங்க அம்மா பண்ணுவாங்க....''

''அசடே! நீயும் பண்ணு...''

''எப்படி! எப்படிப் பண்ணுவேன்?' அலற வேண்டும் போலிருந்தது லக்ஷ்மிக்கு. 'நான் எவ்வளவுதான் தொண்டை வலிக்கப் பாடினாலும் எனக்கு வரல்லை. அம்மா மாதிரி வரலை. அம்மாவுல பாதி கூட வரலை...'

அதற்குள் மியூசிக் கிளாஸ் வந்து விட்டது.

''வா, வா... உனக்காக எவ்வளவு நேரம் வெயிட் பண்றது... ஜட்ஜஸ் எல்லாம் வந்தாச்சு...''

தங்கம் மிஸ் பக்கத்து நாற்காலிகளில் தலைநரைத்த ஒரு அம்மாள் கைப்பையுடன்; வேஷ்டி ஜிப்பாவில், புகையிலை வாயுடன் ஒரு ஜவ்வாதுப் பொட்டுக்காரர்.

கிளாஸ் நடுவில் தரையில் சுருதிப் பெட்டி - வாய் பிளந்து ஜரிகைப் பற்கள் தெரிய அது தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல் உணர்ந்தாள் லக்ஷ்மி.

முதலில் உஷா பாடினாள் :

'நெனருஞ்சினனு... அன்னிடிகி...'

அவள் பாடி முடித்ததும் பலத்த கைத்தட்டல். நடுவர்கள் திருப்தியுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''லக்ஷ்மி... வா...'' தங்கம் டீச்சர் அழைத்தாள்.

லக்ஷ்மி கால்கள் நடுங்க சுருதிப் பெட்டி அருகே வந்து உட்கார்ந்தாள். தங்கம் மிஸ் குனிந்து நடுவர்களிடம் பேசிய போது அம்மா பெயர் காதில் விழுந்தது.

''தயாரானி தயாரானி...'' - தைரியத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு ஆரம்பித்தாள்.

''ம்... ம்... தாளம் என்ன ஆச்சு...?!''

தங்கம் மிஸ்ஸின் அலறலில் தயாரானி என்ன ராகம்? என்ன தாளம்? இது என்ன இடம்? ஏன் இங்கே இருக்கிறோம்...? எல்லாம் மறந்தது. பயம் பூதாகாரமாக அழுத்தியது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

''என்னம்மா நீ! எப்பேர்ப்பட்ட குடும்பத்துலேருந்து வர...? இப்படித் தாளத்துக்குத் தடவறியே...'' தங்கம் மிஸ் பொறுமை இழந்தாள். நடுவர்கள் சுள் கொட்டினார்கள். லக்ஷ்மி விளையாட்டு மைதானத்தின் கடைசி மரம் நோக்கி ஓடினாள்.

அருள்வாக்கு

வேதாந்தத்திலே எல்லாம் உள்ளத்துக்குள்ளே ஹ்ருதய குகையில் சாந்தத்தில் ஒடுங்கி விடுவதாகச் சொல்லியிருக்கும். அந்த சாந்தத்திலே நம்மைச் சேர்க்கத்தான் சங்கீதம் ஏற்பட்டிருக்கிறது. சியாமளா என்று ஸங்கீத மூர்த்தியாகப் பராசக்தி இருக்கிறபோது அவளுடைய



வாசல் கோலத்தின் மேல் ஆரத்தி நீரை நிர்தாட்சண்யமாய்க் கொட்டினார்கள்.

''வலது கால்! வலது கால்!'' அவசர அவசரமான கூச்சல்களுக்கிடையே ராமநாதனின் கைப்பிடித்து உள்ளே நுழைந்தாள் லக்ஷ்மி.

கசங்கிய ரோஜா இதழ்களும் புதுப் பட்டும் மணத்தது. யாரோ நாதஸ்வர டேப்பை அணைத்தார்கள்.

''இனிமே லக்ஷ்மி உங்காத்துப் பொண்ணு.''

''ஆஹா! உங்களை மாதிரி கலைக் குடும்பத்துச் சம்பந்தம் எங்களுக்குக் கிடைச்சதே...''

உபசார வார்த்தைகள் தீர்ந்து போக அப்பா, அம்மா விடைபெற்றார்கள்.

லக்ஷ்மியையும் ராமநாதனையும் பட்டுப் பாய் விரித்து உட்காரச் செய்தார்கள். உரிமையோடு உறவினர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

''அவளைப் பாடச் சொல்லுங்கோ'' மாமியார் சமையலறையிலிருந்தபடியே கூச்சல் போட்டார்.

''ப்ளீஸ்! அது மட்டும் முடியாது!'' என்று முகம் மாறிப் போய்ச் சொன்னவளை வியப்புடன் பார்த்தான் ராமநாதன்.

உள்ளம் அப்படியே குழைந்திருக்கிறது : (ம்ருதுள ஸ்வாந்தாம்). அவள் பரம சாந்தையாக இருக்கிறாள் (சாந்தாம்) என்று காளிதாஸன் 'நவரத்னமாலா'வில் சொல்கிறார். உள்ளக் குழைவு என்பது ப்ரேமை, கருணை. ஸங்கீதத்தினாலே ஆத்ம சாந்தம் உண்டான பிறகு, ஸகலமும் அந்த ஆத்மாவே என்பதால் எல்லாவற்றிடமும் அன்பு பொங்குவதைத்தான் சாந்தாம், ம்ருதுள ஸ்வாந்தாம் என்று கவி சொல்கிறார். இந்த்ரிய இன்பமாயில்லாமல், ஆத்மானந்தத்தில் சேர்ப்பதாலேயே ஸங்கீதம் இப்படிப்பட்ட ப்ரேமையுள்ளத்தை உண்டாக்குகிறது. நினைத்துப் பார்த்தாலே மனம் குளிர்கிறது. அம்பிகை வீணையில் சப்த ஸ்வரங்களையும் மீட்டியபடி, அந்த சீங்காரத்திலேயே சொக்கிப் பரம சாந்தையாக இருக்கிறாள்; அவளுடைய ஹ்ருதயம் புஷ்பம் மாதிரி மிருதுளமாக ஆகி கருணை மதுவைப் பொழிகிறது. இதை நினைக்கும்போது பக்தர்களுக்கும் மனம் குழைகிறது. பக்தியும் அன்பும் சாந்தமும் தன்னால் ஏற்படுகின்றன. வர்ணனாதீதமான சாந்தத்தில், ஆனந்தத்தில் முழுகியிருக்கிற ஸங்கீத அம்பிகை நமக்கும் சாந்தம், ஆனந்தம், அன்பினால் குழைந்த மனம் முதலியவற்றை அனுக்கிரஹிக்கிறாள்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஒரு வார காலத்துக்கு மாமியார் சலிக்காமல் சொல்லித் தோற்றாள் : ''அம்மா லக்ஷ்மி, சுவாமி விளக்கு ஏத்தி வச்சுப் பாடு...''

அன்று சலிப்பு முற்றிப் போயோ என்னவோ, வெளியே புறப்பட்டுப் போனாள். கல்யாண விருந்தினர்கள் விடைபெற்றுக் காலியாய் இருந்தது வீடு.

ராமநாதன் வரும் நேரம்.

ஸ்கூட்டர் சப்தம் கேட்டது. அவன்தான்!

உள்ளே நுழைந்ததும், ''அம்மா இல்லையா?'' என்றான்.

''ஒரு மணி நேரம் ஆகும்னு சொல்லிட்டுப் போனா...''

''விளக்கேத்தியாச்சா...?''

''ம்'' - இவனும் பாடச் சொல்லுவானோ...?

''வா! இப்படி உட்காரு...''

சோபாவில் பக்கத்தில் தட்டிக் கூப்பிட்டான்.

ஆறு மாதங்கள் ஓடி விட்டன. எத்தனையோ சந்தர்ப்பங்களில் ரகுராமனுடன் தனியாக இருக்கக் கிடைத்தது. எல்லோரும் கேட்பதை அவன் கேட்கவேயில்லை.

'ஒரு பாட்டுப் பாடேன்; சின்னதா...' ஊம்ஹூம் ஒருமுறை கூட கேட்கவில்லை.

இதனால் தனக்கு நிம்மதியா? சந்தோஷமா? லக்ஷ்மிக்குத் தீர்மானமாகத் தெரியவில்லை. ஆனாலும் 'அவன் மட்டும் ஏன் கேட்கவில்லை...?' என்று மனத்துக்குள் குடைந்தது.

அன்று மாலை அவனிடமே கேட்டாள்.

''நீங்க மட்டும் என்னைப் பாடச் சொல்லவேயில்லையே...? உங்களுக்குப் பாட்டுப் பிடிக்காதா...?''

''ரொம்பப் பிடிக்கும்...''

''பின்னே...?''

''எனக்குத் தெரியும்...''

''என்ன தெரியும்...?''

''உன் பயம் தெரியும் - சி. கே. பத்மாஸினியோட பெண்ணாச்சே என்கிற பயம். ஆனால், நான் உன்னை அதுக்காகக் கல்யாணம் பண்ணிக்கலை...''

''பின்ன எதுக்காகப் பண்ணின்டீங்க...''

''உனக்காக... எனக்காக.''

தலைகுனிந்திருந்தவள் அவனைச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

''நான் இப்போ பாடறேன் - உங்களுக்காக....''

'தயாரானி தயராணி தாசரதி ராம...' லக்ஷ்மி தாளம் போட்டுக் கொண்டு தன்னை மறந்து பாடினாள்.



இசை 'பட' வாழ்கிறோம்

முதலில் மேகத்தில் மிதப்பது போன்ற உணர்வூட்டும் மேற்கத்திய இசை. அசரீரியாக ஒரு குரல் :

'திஸ் இஸ் சோளா ஷெராடன்; திஸ் லைன் இஸ் என்கேஜ்ட் சில கணங்கள் காத்திருக்க முடியுமா.... ப்ளீஸ்...'

மீண்டும் மிதப்பலான இசை ஒலிக்க, கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு பற்களை நறநறவென்று கடித்தபடி போன் ரிசீவரில் பிடியை இறுக்குகிறேன்.

எங்கே போனாலும் இந்த எலக்ட்ரானிக் சங்கீதத்திடமிருந்து தப்பிக்க முடியாது! அதிகாலையில் உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்குள் நுழைந்தாலும் சரி, பின் மாலையில் மெரீனாவில் நடந்தாலும் சரி,

'திஸ் கார் இஸ் ரிவர்ஸிங்' அடென்ஷன் ப்ளீஸ், என்ற எலக்ட்ரானிக் எச்சரிக்கையைத் தொடர்ந்து 'ப்ளூ டான்யூப்' மெட்டைக் கேட்டே ஆக வேண்டும். அதைக் கூட சகிக்கலாம். சில கார்களில் ரகுபதிராகவ ராஜாராம் ஒலிப்பதை என்னென்பது? ஒருவேளை காந்திஜியின் இந்தியா இன்று ரிவர்ஸில் போய்க் கொண்டிருப்பதை உணர்த்தத்தானோ!'

சங்கீதம் சாந்தப்படுத்தும், ரத்த அழுத்தத்தைக் குறைக்கும், மூளை இயக்கத்தைத் தூண்டும், நாலு கால் பிராணிகளின் பால் உற்பத்தியைப் பெருக்கும், செடிகளை, வளரச் செய்யும்.... என்றெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் அடுக்குகிறார்கள்.

இந்த ஆராய்ச்சியாளர்கள் இன்றைய டெலிபோனில் பேசி அறியாதவர்களாக இருக்க வேண்டும். ஜூலை மாதத்துக் கொதிக்கும் வெயிலில் முக்கியமான போன் செய்து விட்டு, மறுமுனை நபருக்காகக் காத்திருக்கும் போது, 'ஜிங்கில் பெல்ஸ்'ஐயும் 'வி விஷ் யூ எ மெர்ரி கிறிஸ்துமஸ்'ஐயும் கணக்கற்ற முறைகள் கேட்பவர்களின் மூளை தற்கொலைக்கல்லவா தூண்டப்படும்!

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன் கைதிகளிடம் கூட கடைசி விருப்பம் என்ன என்று கேட்டு நிறைவேற்றுகிறார்கள். ஆனால் இந்தியன் ஏர்லைன்ஸுக்கு இத்தகைய கருணையில் நம்பிக்கை கிடையாது. செக் இன் செய்து விட்டு பாத்ரூமுக்குப் போய் விட்ட பிரயாணி திரும்பி வந்து விமானம் ஏறும் வரை, பிளேனில் உள்ளவர்கள் பாட்டு கேட்டே ஆக வேண்டும். யானையின் வயிற்றுக்குள் உள்ள உணவு ஜீரணமாகும் ஓசையை ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பியது போன்ற இசை....



நாமென்ன விமானத்திலா போகப் போகிறோம் என்று இந் நாட்டின் சராசரிகள் மகிழ்ந்து விடவும் முடியாது, ரயில் வேகமாக நேரத்துக்குப் போய்ச் சேருகிறதோ இல்லையோ, பிளாட்ஃபாரத்தில் குன்னக்குடியின் ஜிகு ஜிகு டிடு டிடு வயலின் இசையை நீங்கள் கேட்டே ஆக வேண்டும். அது இல்லையெனில் ''நிர்மா நிர்மா'' உங்களைத் துவைத்து அலசி விடும், நிச்சயம்.

ஊர் விட்டு ஊர் போக வேண்டாம், பக்கத்து வீட்டுக் காலிங் பெல்லை அடித்துப் பாருங்கள். மாமி குளித்து முடித்துப் புடைவையுடுத்திக் கதவு திறக்க வரும் வரை அது கச்சேரி செய்வதைக் கேட்டாக வேண்டும்.

ஆம், திரும்பின பக்கமெல்லாம் இசை (பாடாய்ப்) படத்தான் வாழ்கிறோம்!

ஆதாரம் : மெட்ராஸ் மியூஸிங்ஸ்



சிவகாமியின் சபதம்

இருபத்தேழாம் அத்தியாயம்

வெற்றி வீரர்

சோழ நாட்டைச் சேர்ந்த திருவெண்காடு என்னும் கிராமம் திமிலோகப் பட்டுக் கொண்டிருந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி நரசிம்மவர்மர் அன்று அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப்போகிறார்; தம் ஆருயிர்த் தோழரான வீர தளபதி பரஞ்சோதியையும் அழைத்து வரப்போகிறார் என்னும் செய்தி வந்ததிலிருந்து அந்த ஊரார் யாரும் பூமியிலேயே நிற்கவில்லை.

இரண்டு நாளைக்கு முன்பு பாண்டிய சைனியத்துக்கும் பல்லவ சைனியத்துக்கும் கொள்ளிடக் கரையில் நடந்த பெரும் போரைப் பற்றி அந்தக் கிராமவாசிகள் கேள்விப்பட்டிருந்தார்கள். பாண்டியன் ஜயந்தவர்மன் தோல்வியடைந்து புறமுதுகிட்டு ஓடியதைப் பற்றியும் அறிந்திருந்தார்கள். அந்த யுத்தத்தின் காரணமாக, கொள்ளிட நதியின் தண்ணீர்ப் பிரவாகம் இரத்த வெள்ளமாக மாறி ஓடியதை நேரில் பார்த்தவர்கள் வந்து அவர்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். பாண்டிய சைனியம் பல்லவ சைனியத்தைவிடப் பெரியது என்பதும், மாமல்லர், பரஞ்சோதி இவர்களின் வீர சாகசச் செயல்களினாலேயே பாண்டிய சைனியம் தோல்வியடைந்து சிதறி ஓடியது என்பதும் எல்லாரும் அறிந்த விஷயங்களாயின.

அப்பேர்ப்பட்ட வீராதி வீரர்கள் வருகிறார்கள் என்றால், அந்தக் கிராமவாசிகள் தலை தெரியாத ஆனந்தத்தில் மூழ்கியிருந்ததில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

ஏற்கெனவே அந்தக் கிராமவாசிகளுக்கு இன்னொரு வகை அதிர்ஷ்டம் கைகூடியிருந்தது. பத்துத் தினங்களுக்கு முன்பு திருநாவுக்கரசர் பெருமான் அவ்வூருக்கு விஜயம் செய்து சைவத் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். ஆலயப் பிராகாரங்களில் அப் பெரியார் தம் திருக் கைகளினால் புல் செதுக்கும் திருப்பணியை நடத்தியதுடன், மாலை நேரங்களில் ஆலய மண்டபத்தில் தம் தேனிசைப் பாகரங்களைச் சீடர்களைக் கொண்டு பாடுவித்து வந்தார்.

அவ்விதம் சிவானந்தத்திலும் தமிழின் பத்திலும் ஆழ்ந்திருந்தவர்களுக்கு, சக்கரவர்த்தி திருக்குமாரரும் அவருடைய வீர தளபதியும் வரப்போகும் செய்தி மேலும் குதூகலத்தை உண்டாக்கிற்று. திருநாவுக்கரசரைத் தரிசிப்பதற்காகவே மாமல்லரும் பரஞ்சோதியும் வருவதாக ஒரு வதந்தியும் பரவியிருந்தது.

ஆனால், நமசிவாய வைத்தியர் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உண்மையில் அவர்கள் வருகிற காரணம் இன்னதென்று தெரிந்திருந்தது. பரஞ்சோதியின் அருமைத் தாயார் அந்த வீட்டிலேதான் இருந்தாள். பரஞ்சோதிக்கு வாழ்க்கைப்படுவதற்காகக் காத்திருந்த பெண்ணும் அந்த வீட்டிலேதான் இருந்தாள். அப்படியிருக்கும்போது, தளபதி பரஞ்சோதியும் அவருடைய தோழரும் திருவெண்காட்டுக்கு வருவதற்கு வேறு காரணம் எதற்காகத் தேட வேண்டும்?

எனவே, அந்தக் கிராமத்தில் மற்ற எந்த வீட்டையும் விட நமசிவாய வைத்தியரின் வீட்டிலே குதூகலமும் பரபரப்பும் அதிகமாயிருந்ததென்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

சாதாரணமாய்ச் சாந்த நிலையில் இருப்பவரான நமசிவாய வைத்தியர் அன்று வீட்டுக்குள்ளிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளேயும் நூறு தடவை போய் வந்து கொண்டிருந்தார். அவருடைய மனை

அமரர் கல்கி

யான் தன் மகள் உமையாளை ஆடை ஆபர ணங்களால் அலங்கரிப்பதில் அன்று காட் டிய சிரத்தை அதற்குமுன் எப்போதும் காட்டியதில்லை. உமையாளின் தம்பியும் தங்கைகளும் அவளைப் பரிகாசம் செய் வதில் மிகவும் தீவிரமாயிருந்தார்கள். உமை யாளின் உள்ளமோ, பெரும் புயல் அடிக் கும் போது கொந்தளித்து அலை வீசும் கடலை ஒத்திருந்தது.

பரஞ்சோதியின் அன்னை கண்ணீரும் கம்பலையுமாய்த் தன் ஏக புத்திரனை எதிர் பார்த்த வண்ணமிருந்தாள்.

இங்கு இப்படி இருக்க, திருவெண் காட்டுக்கு ஒரு யோசனை தூரத்தில் வந்து கொண்டிருந்த மாமல்லர், பரஞ்சோதி இவர்களுக்குள்ளே மாமல்லரிடமே உற்சா கம் அதிகம் காணப்பட்டது. பரஞ்சோதி யின் முகத்தில் சோர்வு அதிகமாயிருந்த துடன் அவருடைய குதிரை அடிக்கடி பின் னால் தங்கியது. அவரை மாமல்லர் அவ் வப்போது பரிகாசம் செய்து விரைவு படுத்தினார். 'இது என்ன தளபதி! உம்மு டைய குதிரை ஏன் இப்படிப் பின்வாங்கு கிறது? உம்முடைய அவசரம் அதற்குத் தெரியவில்லையா, என்ன? குதிரைகளை வேணுமானால் மாற்றிக் கொள்ளலாமா?' என்றார். உம்முடைய முகம் ஏன் இவ்வ ளவு பிரகாசமாயிருக்கிறது? இதென்ன, நீர் உம்முடைய காதலியைக் காணப் போகி றீரா? அல்லது கொலைக் களத்துக்குப் போகிறீரா? பயப்படாதீர்! நான் நல்ல வார்த்தை சொல்லி உமையாள் உம்மை அதிகமாகக் கண்டிக்காமல் பார்த்துக் கொள் கிறேன்' என்று கேலி செய்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக் கடைசியில் பரஞ் சோதியால் பொறுக்க முடியாமல் போகவே, அவர் கூறியதாவது: ''ஐயா என் னுடைய மன நிலையை அறிந்து கொள்ளா மல் புண்ணில் கோலிடுவதுபோல் பேசுகி றீர்கள். உண்மையாகவே எனக்கு இங்கு வருவதற்கு விருப்பம் இல்லை. நீங்கள் வற்புறுத்திய போது இணங்கிவிட்டேன். ஏன் இணங்கினோம் என்று இப்போது வருத்தமாயிருக்கிறது. உங்களுக்குப் புண் ணியமாய்ப் போகட்டும். இப்போதாவது நான் திரும்பிப் போவதற்கு அநுமதி கொடுங்கள். தாங்கள் எனக்காகச் சென்று என் தாயாரைப் பார்த்து, நான் சௌக் கியமாயிருக்கிறேன்; ஆனால், அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லை. ஆகையால், அவரைப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு வராமல் நின்றுவிட்டேன் என்று சொல்லி விடுங்கள்!''

இவ்விதம் உணர்ச்சி ததும்பிய குரலில் பரஞ்சோதி கூறியதைக் கேட்டு மாமல்லர் சிறிது திடுக்கிட்டார். 'தளபதி! உம்முடைய தாயாருக்கு நீர் என்ன வாக்குறுதி கொடுத் தீர்? அதை ஏன் நிறைவேற்ற முடிய வில்லை?' என்று கவலை கொண்ட குர லில் வினவினார்.

''பிரபு! எதற்காக நான் பிறந்த ஊரையும் வீட்டையும் விட்டுக் கிளம்பினேன் என்று தங்களுக்குச் சொன்னேனே, அது ஞாபக மில்லையா? என்னுடைய மாமன் நம சிவாய வைத்தியர் தம்முடைய மகளை- கல்வி கேள்விகளில் சிறந்த உமையாளை - நிரட்சரகுட்சியான எனக்குக் கட்டிக் கொடுக்கப் பிரியப்படவில்லை. அதற்காக, கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகருக்குப் போய் வாகீசப் பெருமானின் திருமடத்தில் சேர்ந்து படித்துச் சகலகலா வல்லவனாகத் திரும்பி வரும் எண்ணத்துடன் புறப்பட் டேன். ஆனால், நடந்தது என்ன? போனது போலவே நிரட்சரகுட்சியாகத் திரும்பி வந் திருக்கிறேன். திருநாவுக்கரசர் பெரு மானைக் கண்ணாலேகூடப் பார்க்க வில்லை....'' என்று பரஞ்சோதி சொல்லி வந்தபோது, நரசிம்மவர்மர் கலகலவென்று சிரித்தார். ''பல்லவ குமாரா! தங்களுடைய சிரிப்பு என் உள்ளத்தில் நெருப்பாய் எரி கிறது! வடக்குப் போர் முனையிலிருந்து சக்கரவர்த்தி என்னைத் தங்களிடம் அனுப் பியபோது தங்களை எனக்குக் கல்வி கற்பிக் கும் படியாகச் சொல்லியனுப்பினார்! ஆனால், தாங்கள் எனக்குக் கல்வி கற்பிக்க வும் இல்லை; நானாக ஏட்டைக் கையில் எடுப்பதற்கும் விடவில்லை; எப்போதா வது சிறிது நேரம் இடைத்தால், அந்த நேரத் தில் ஆயனரின் குமாரியைப் பற்றிப் பேசிப் பொழுது போக்கிவிட்டீர்கள்! ஆ! இராஜ குலத்தினரைப்போல் சுயநலக்காரர்களை நான் கண்டதில்லை!' என்று சோகம் ததும்பிய குரலில் பரஞ்சோதி சொல்ல, அதைக் கேட்ட குமார சக்கரவர்த்தி இன் னும் உரத்த சத்தத்துடன் சிரித்தார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் திரு வெண்காட்டை அடைந்த போது கிராமத் தின் முகப்பில் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்புக் காத்திருந்தது. அப்போது மாமல்லருக்கு முன்னொரு நாள் மண்ட பப்பட்டுக் கிராமத்தில் நிகழ்ந்த வர வேற்புக் காட்சியும், அன்று ஆயனரும் சிவகாமியும் முக்கியமாக வரவேற்புக் குரியவர்களாக இருந்ததும், தம்மை இன் னாரென்று தெரிவித்துக் கொள்ளாமல் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றதும் ஞாபகம் வந்தன.

ஆஹா! அதற்குப் பிறகு எத்தனை எத்தனை சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன! இதற்குள்ளாகக் கண்ணபிரான் மண்டபப் பட்டுக் கிராமத்துக்குச் சென்று, கொள்ளிடக்கரைச் சண்டையைப் பற்றியும் பாண்டியன் புறமுதுகிட்டு ஓடியதைப் பற்றியும் சொல்லியிருப்பான். சிவகாமி எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பாள்! எவ்வளவு ஆர்வத்துடன் தம்முடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்? இந்தத் தடவை அவளும் மற்றக் கிராமவாசிகளுடனே வந்து தம்மை வரவேற்பாளா?

மாமல்லர் இத்தகைய மனோராஜ்ய பகற் கனவுகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில்,

''குமார சக்கரவர்த்தி நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!''

''கங்க மன்னனையும் மதுரைப் பாண்டியனையும் போரில் புறங் கண்ட வீர மாமல்லர் வாழ்க!''

''வீராதி வீரர் தளபதி பரஞ்சோதி வாழ்க!'' என்பது போன்ற ஆகாசமளாவிய கோஷங்கள் அவருடைய பகற் கனவுகளைக் கலைத்துத் திருவெண்காட்டுக் கிராமத்துக்கு அவர்கள் வந்து விட்டதைத் தெரியப்படுத்தின.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

பட்டிக்காட்டுப் பெண்

வரவேற்பு வைபவங்கள் எல்லாம் முடிந்த பிறகு நமசிவாய வைத்தியரின் வீட்டுக்குள்ளே மாமல்லரும் பரஞ்சோதியும் பிரவேசித்தார்கள்.


பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி திடீரென்று தங்கள் சின்னஞ்சிறு இல்லத்துக்குள் பிரவேசிக்கவே, அந்த வீட்டாரெல்லோரும் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். தளபதிக்குரிய வீர உடை தரித்திருந்த காரணத்தினால் பரஞ்சோதியை நிமிர்ந்து பார்த்துப் பேசக்கூட அவர்களுக்குக் கூச்சமாயிருந்தது. பரஞ்சோதிக்கோ அதைவிடக் கூச்சமாயிருந்தது.

கூடத்தில் போட்டிருந்த ஆசனம் ஒன்றில் யாரும் சொல்லாமல் தாமே மாமல்லர் உட்கார்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். நிலைமையை ஒருவாறு அறிந்து கொண்டார். கண்களில் கண்ணீர் ததும்ப நின்ற மூதாட்டிதான் பரஞ்சோதியின் தாயார் என்று ஊகித்துத் தெரிந்து கொண்டு, ''எங்கள் வீர தளபதியைப் பெற்ற பாக்கியசாலியான தாயைத் தரிசிக்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவோ ஆவலாயிருந்தது. அந்த பாக்கியம் இன்று கிட்டிற்று!'' என்று சொல்லிவிட்டு பரஞ்சோதியைப் பார்த்து, ''தளபதி! இது என்ன? அன்னைக்கு நமஸ்காரம் செய்யும். தொண்டை மண்டலத்துக்குப் போனதனால் மரியாதை கூட மறந்து போய்விட்டதென்றல்லவா நாளைக்கு எல்லாரும் குறை சொல்லுவார்கள்?'' என்றார்.

உடனே பரஞ்சோதி முன்னால் சென்று அன்னையின் பாதங்களில் நமஸ்காரம் செய்தார். நமஸ்கரித்த குமாரனை வாரி எடுத்து உச்சி முகர வேண்டுமென்ற ஆசை அந்த அம்மாளுக்கு எவ்வளவோ இருந்தது. ஆனால் குமார சக்கரவர்த்தி அங்கு வீற்றிருந்ததும், தன் குமாரன் போர்க்கோல உடை தரித்திருந்ததும் அவளுக்குத் தயக்கத்தை உண்டு பண்ணிற்று. பிறகு, நமசிவாய வைத்தியருக்கும் பரஞ்சோதி நமஸ்காரம் செய்துவிட்டுத் திரும்பி வந்து மாமல்லரின் பக்கத்திலே அமர்ந்து உச்சி மோட்டைப் பார்த்தார்.

நமசிவாய வைத்தியர், மாமல்லரை நோக்கி, ''இந்தக் குடிசைக்குத் தாங்கள் வந்தது எங்களுடைய பாக்கியம்!'' என்றார்.

மாமல்லர் அவரை நோக்கி, ''ஓகோ! நமசிவாய வைத்தியர் என்பது தாங்கள் தானோ? தங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். தங்கள் குமாரி என் சிநேகிதரை ரொம்பவும் பயப்படுத்தி வைத்திருக்கிறாள் போலிருக்கிறது. அதோ அந்தக் கதவண்டை நிற்பவள்தானே தங்கள் புதல்வி? பார்த்தால் வெகு சாதுவாகத் தோன்றுகிறாள். ஆனால் பல்லவ சைனியத்தின் தலைசிறந்த தளபதியை, - வாதாபியின் யானைப் படையைச் சிதற அடித்த தீரரை, - கங்க நாட்டானையும்,பாண்டியராஜனையும் புறமுதுகிடச் செய்த மகாவீரரை; - ரொம்பவும் பயப்படுத்தியிருக்கிறாள். இனிமேலாவது அப்படியெல்லாம் செய்ய வேண்டாமென்று தங்கள் குமாரியிடம் சொல்லுங்கள். பரஞ்சோதியை இங்கே அழைத்து வருவதற்கு நான் என்ன பாடுபட வேண்டியிருந்தது, தெரியுமா? கையைப் பிடித்துப் பலாத்காரமாய் அழைத்து வரவேண்டியிருந்தது. அம்மா! தாங்களே கேளுங்கள், தங்கள் புதல்வர் இங்கே வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாரா, இல்லையா



என்று! கேளுங்கள், அம்மா!'' என்று மாமல்லர் கூறியபோது பரஞ்சோதியின் அன்னை மகனை அன்பும் கர்வமும் ததும் பிய கண்களால் பார்த்து, ''குழந்தாய்! மாமல்லர் பிரபு சொல்வது உண்மையா? எங்களையெல்லாம் வந்து பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்றாள்.

''ஆம், அம்மா! பல்லவ குமாரர் உண் மையைத் தவிர வேறு எதுவும் சொல்லுவதில்லை. ஆனால் ஏன் எனக்கு இங்கு வந்து உங்களையெல்லாம் பார்க்கப் பிடிக்கவில்லையென்று அவரையே கேளுங்கள்!'' என்றார் பரஞ்சோதி.

அன்னை கேட்க வேண்டுமென்று வைத்துக் கொள்ளாமல் மாமல்லரே சொன்னார்: ''தங்கள் அருமை மகன் காஞ்சிக்குப் போய்க் கல்வி கற்றுப் புலவராகத் திரும்பி வருகிறேன் என்று தங்களிடம் வாக்குறுதி, கூறிவிட்டுப் புறப்பட்டாராம். அந்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லையாம். போனபோது எப்படிப் போனாரோ அப்படியே திரும்பி வந்திருக்கிறார். அதனால் உங்களையெல்லாம் நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாயிருக்கிறதாம். எப்படியிருக்கிறது கதை?''

இவ்விதம் மாமல்லர் சொன்னதும் பரஞ்சோதியின் தாயார் மகனுக்கு அருகில் வந்து உட்கார்ந்து அவனுடைய முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே, ''அப்பா! குழந்தாய்; நீ படித்தால் என்ன, படிக்காவிட்டால் என்ன? ஏதோ சிவபெருமான்



அருளால் நீ உயிரோடு நல்லபடியாய்த் திரும்பி வந்தாயே அதுவே எனக்குப் போதும். அந்நாளில் உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வந்த அண்ணாவிமார்களை நீ அடித்து விரட்டினாயே, அதற்காகவெல்லாம் நான் உன்னை எப்போதாவது கோபித்ததுண்டா?'' என்றாள். இதைக் கேட்ட மாமல்லர் சிரித்துக் கொண்டே சொன்னதாவது :

''என்ன? என்ன? உபாத்தியாயர்களை அடித்து விரட்டினாரா உங்கள் மகன்! நல்ல வேளை! நான் பிழைத்தேன்! இந்தச் சாதுப் பிள்ளைதான் என்னைத் தனக்குப் படிக்கக் கற்றுக் கொடுக்கும்படி தொந்தரவு செய்தார். அவர் சொல்



''சங்கீதத்தினாலே தாவரங்கள் நன்றாக வளரும்னு கேள்விப்பட்டதிலேருந்து நம்ம குரு ஆலமரத்தின் கீழே உட்கார்ந்து சாதகம் பண்ணுவதை ஏன் நிறுத்தி விட்டார்?''

''மடமடன்னு விழுதுகள் வளர்ந்து அவருடைய கழுத்தைச் சுற்றி நெருக்கி ஏன் சங்கீதத்தையும் சாகித்யத்தையும் கொலை செய்யறேன்னு கேட்டுடப் போகிறதேன்னு பயம்தான்!''

- ஜம்புநாத்

வது உண்மை என்று எண்ணிக் கொண்டு நான் பாடம் கற்பிக்க ஆரம்பித்திருந்தேனானால் என்னையும் அப்படித்தானே அடித்துத் துரத்தியிருப்பார்? பிழைத்தேன்!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தார் நரசிம்மவர்மர்.

பரஞ்சோதி அவரைப் பரிதாப நோக்குடன் பார்த்துக் கூறினார் : ''பிரபு! இது ஏதோ சிரிப்பதற்குரிய விஷயமாக நினைக்கிறீர்கள். உண்மையில் அப்படியல்ல. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு ஆகையால், என் தாயார் நான் கல்வி கல்லாமல் திரும்பி வந்திருப்பதைப் பொறுக்கிறாள். ஆனால் என் மாமானைக் கேளுங்கள். படிப்பில்லாத இந்த மூடனுக்கு அவர் தமது மகளைக் கட்டிக் கொடுப்பாரா என்று கேளுங்கள்!......''

நமசிவாய வைத்தியரும் அந்தப் பரிகாசப் பேச்சில் கலந்து கொள்ள எண்ணி ''என்னைக் கேட்பானேன்? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணையே கேளுங்களேன்? அவளுக்குச் சம்மதமாயிருந்தால் எனக்கும் சம்மதந்தான்!'' என்றார்.

அச்சமயம் ஏதோ கதவு திறந்த சத்தம் கேட்கவே எல்லாரும் அந்தப்பக்கம் நோக்கினார்கள். உமையாள் கதவைத் திறந்து கொண்டு உள் அறைக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

''எல்லாரும் சேர்ந்து பரிகாசம் செய்தால், குழந்தை என்ன செய்வாள்?'' என்று உமையாளின் தாயார் முணு முணுத்தாள்.

பிறகு நமசிவாய வைத்தியர், சக்கரவர்த்தி குமாரரைப் பார்த்து, ''பரஞ்சோதியின் பராக்கிரமச் செயல்களைக் குறித்து அடிக்கடி கேள்விப்பட்டுக் கொண்டுதானிருக்கிறோம். அவனால் இந்தச் சோழ நாடே பெருமை அடைந்திருக்கிறது. மறுபடியும் இந்தப் பக்கம் எப்போது வருவானோ என்னவோ என்று எல்லாரும் ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். ஏதோ எங்கள் அதிர்ஷ்டம் இவ்வளவு சீக்கிரத்தில் அவன் இங்கு வரலாயிற்று. அவனோடு தாங்களும் விஜயம் செய்தது, எங்கள் பூர்வ ஜன்ம தவத்தின் பலன் என்றுதான் சொல்ல வேண்டும். புலிக்கரசராகிய தாங்கள் வந்திருக்கும் சமயத்தில் நாவுக்கரசர் பெருமானும் இவ்வூருக்கு வந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட நல்ல சந்தர்ப்பம் மறுபடி எங்கே கிடைக்கப் போகிறது? இப்போதே ஒருநாள் பார்த்துச் சுப முகூர்த்தத்தில் விவாகத்தை நடத்தி விடுவோம். உமையாளையும் உங்களுடனேயே அழைத்துப் போய் விடுங்கள்!'' என்று நமசிவாய வைத்தியர் கூறி நிறுத்தினார்.

அப்போது மாமல்லர், ''பார்த்தீரல்லவா தளபதி! எப்படியும் உமக்குக் கல்வி கற்பித்துப் புலவராக்கி விடுவது என்று வைத்தியர் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகிறது. வேறு எந்த உபாயமும் பயன் படாமற் போகவே, அவருடைய மகளைக் கொண்டே உமக்குக் கல்வி போதிக்கத் தீர்மானித்திருக்கிறார். ஆகா! கடைசியாக, நீர் அடித்துத் துரத்த முடியாத உபாத்தியாயர் ஒருவர் உமக்கு ஏற்படப் போகிறாரல்லவா?'' என்றதும் ஸ்திரீகள் உள்பட எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

பிறகு, குமார சக்கரவர்த்தி நமசிவாய வைத்தியரைப் பார்த்து, ''ஐயா! அதெல்லாம் முடியாது. பல்லவ சாம்ராஜ்யத்தின் வீர தளபதிக்குத் தலைநகரத்திலே சக்கரவர்த்தியின் முன்னிலையிலேதான் கல்யாணம் நடைபெற வேண்டும். இது என் தந்தையின் ஆக்ஞை. காஞ்சிக்கு நாங்கள் போனவுடனே ஆள் விடுகிறோம். எல்லாரும் வந்து சேருங்கள். இன்னும் ஒரு விஷயமும் சொல்லி வைக்கிறேன். அப்படி ஒரு வேளை உங்களுடைய குமாரி கல்வி கேள்விகளில் வல்ல புலவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் அதற்கும் வழி இருக்கிறது. காஞ்சியில் எங்கள் குலகுரு ருத்ராச்சாரியார் இருக்கிறார். வயது தொண்ணூறுதான் ஆகிறது. தாடி ஒரு முழ நீளத்துக்குக் குறையாது. அவர் அறியாத கலையோ அவர் படியாத ஏடோ ஒன்றும் கிடையாது. அவரை வேண்டுமானாலும் உங்கள் புலமை மிகுந்த மகளைக் கல்யாணம் செய்து கொள்ளச்

செய்கிறேன்!'' என்று பலத்த சிரிப்புக்க கிடையே கூறி விட்டு, ''தளபதி! வாரும், போகலாம்! திருநாவுக்கரசரைத் தரிசித்து விட்டு வரலாம்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

மாமல்லரும் பரஞ்சோதியும் நாவுக் கரசர் பெருமானை அவர் தங்கியிருந்த திரு மடத்தில் பார்த்துவிட்டுத் திரும்பி வந்த வுடன், பரஞ்சோதியின் தாயார் அவரு டைய கையைப் பிடித்துக் கொண்டு, ''இங்கே வா, தம்பி! ஒரு சமாசாரம்!'' என்று உள் அறைக்கு அவரை அழைத்துக் கொண்டு போனாள்.

அங்கே தரையில் படுத்துத் தேம்பிக் கொண்டிருந்த உமையாளைக் காட்டி, ''பார்த்தாயா உன்னுடைய பரிகாசப் பேச்சு இந்தப் பெண்ணை என்ன பாடுபடுத்தி யிருக்கிறது! இப்படிச் செய்யலாமா, அப்பா!'' என்றாள்.

பரஞ்சோதி மனம் இளகியவராய், ''ஐயோ! இது என்ன பழி; நான் ஒன்றும் பரிகாசம் செய்யவில்லையே?'' என்றார்.

''செய்ததையும் செய்துவிட்டு இல்லை என்று சாதியாதே! இந்தக் குழந்தை என்ன சொல்லுகிறாள் தெரியுமா? நீ காஞ்சிப் பட்டணத்துக்குப் போய் அரண்மனை உத்தி யோகமும் சக்கரவர்த்தியின் சிநேகிதமும் சம்பாதித்துக் கொண்டாயாம். இந்தப் பட்டிக் காட்டுப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டம் இல்லை யாம். அதனாலேதான் இப்படியெல்லாம் பேசுகிறாயாம்!''

''ஐயோ! அப்படி இல்லவே இல்லை, அம்மா!''

''இல்லையென்றால் நீயே இந்தப் பெண்ணுக்குச் சமாதானம் சொல்லித் தேற்று. நான் எவ்வளவோ சொல்லியும் இவள் கேட்கவில்லை!'' என்று கூறிவிட்டு, பரஞ்சோதியின் தாயார் வெளியேறினாள்.

அன்னையின் கட்டளையைச் சிரமேற் கொண்டு பரஞ்சோதி உமையாளைத் தேற்றத் தொடங்கினார். ஆனால் உமை யாள் அவ்வளவு சீக்கிரம் தேறுகிறதாகக் காணவில்லை. வெகு நேரம் பரஞ்சோதி தன்னைத் தேற்ற வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டதாகத் தோன்றியது. தேறுவது போல் ஒருகணம் இருப்பாள், மறு கணத் தில் மறுபடியும் விம்மவும் விசிக்கவும் தொடங்கி விடுவாள்.

உமையாள் பட்டணத்து நாகரிகம் அறி யாத பட்டிக்காட்டுப் பெண்தான். ஆன போதிலும் தன்னுடைய மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உபாயம் அவளுக்குத் தெரிந்திருந்தது. பரஞ்சோதி சீக்கிரம் வெளியில் போவதற்கு முடியாத வண்ணம் வெகுநேரம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியத்தை அவள் உண்டு பண்ணிக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு நீளமான நாடகத்துக்கும் ஒரு முடிவு உண்டு அல்லவா? அவ்விதம் இந்தப் பொய்ச் சோக நாடகத்துக்கும் முடி வான மங்களம் பாட வேண்டிய சமயம் வந்த போது உமையாள் பரஞ்சோதியிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாள்; தன் னையே அவர் மணந்து கொள்ள வேண்டும் என்பதாகத்தான்.

அவ்வாறு சத்தியம் செய்து கொடுத்த பின் பரஞ்சோதி கூறினார் : 'ஆனால், உமா! ஒன்று சொல்கிறேன், நம் கல்யாணம் உன் தந்தை சொன்னது போல் அவ்வளவு சீக்கிர மாக நடைபெறாது. வெகு காலம் நீ காத் திருக்க வேண்டியிருக்கலாம். என் சிநேகிதர் மாமல்லருக்கு எப்போது திருமணம் நடக் கிறதோ, அப்போதுதான் நமது கலியா ணமும் நடைபெறும். அவருக்கு முன்னால் நான் இல்லறத்தை மேற்கொள்ள மாட் டேன்!''

''தங்களுக்காக அவசியமானால் யுக யுகமாக வேண்டுமானாலும் காத்திருக் கிறேன்!'' என்றாள் உமா.

(தொடரும்)





அய்யலு

ஆட்டம் பாதி; அய்யலு தைத்த ஆடை பாதி!

பொன் இழைகளைக் கொண்டு நெகிழ நெய்தது போன்ற வலை வலையான துணி...

''இதுல ஆறு மீட்டர் இருக்குங்க; இதோ இந்த வெள்ளைத் துணி, உள்ளுக்குக் குடுக்கறதுக்கு. பாம்பு டான்ஸுக்கு டிரெஸ் தைக்கணும். நாங்க பத்தாம் தேதி மலேசியாவுக்குத் திரும்பிப் போறோம்...''

''ம்...''

''என்னங்க, தைச்சுத் தரணுமே...''

''ம்...? ம்... அளவு எங்கே?''

''அளவு இல்லீங்களே... சுமார் பத்து வயசுப் பாப்பாவுக்குத் தையுங்க. கொஞ்சம் லூசாவே தையுங்க...''

''மொதல்ல ஒரு பாம்பு வேணுமே...''

''...!?''

''இது மாதிரி...'' - பாம்பு டிரெஸ்ஸில் உள்ள ஒரு பெண்ணின் படம் நீட்டப்படுகிறது.

''இது எங்கே கிடைக்கும்?''

''தேனாம்பேட்டை - காங்கிரஸ் கிரவுண்ட்கிட்டே... ச ரி கை ப் பொட்டு வேலைப்பாடு...''

''இதை வாங்கிட்டு வந்தா தைச்சுட லாங்களா...? பத்தாம் தேதிக்குள்ள...?''

''ம்... வாங்கிட்டு வந்தாத்தான் சொல்ல முடியும்...''

''**நா**ங்க நாளைக்கு ராத்திரி கிளம்பறோம்... கொஞ்சம் அவசரமா தைச்சுத் தரணுமே...'' - பச்சையில் அரக்குக் கரை போட்ட காஞ்சிபுரம் புடைவை நீட்டப்படுகிறது.

''ம்ஹூம்... மயிலாப்பூர் போங்க...''

''அதெப்படிங்க நீங்க தைப்பீங்கன்னு நம்பித்தான் ஐயாயிரம் போட்டு காஞ்சிபுரம் எடுத்தோம். மைலாப்பூர் டெய்லர்கிட்டே குடுக்கறதாயிருந்தா தர்மாவரமே எடுத்திருப்போம்.''

''ம்... இதைத் திருப்பிட்டு தர்மாவரமே எடுத்துடுங்க...''

நாட்டிய உடை தைக்கும் வல்லுனர் அய்யலுவின் கடையில்தான் மேற்படி உரையாடல்களைக் கேட்க நேர்ந்தது. நாட்டியக் கலைஞர்கள் நட்டுவனாரின் சொல்லுக்கட்டுக்கு ஆடுவது போக, அய்யலுவிடம் மல்லுக்கு நின்று அவர் ஆட்டுவிக்கிறபடியும் ஆட வேண்டுமோ... என்று வியப்பு ஏற்படுகிறது.

அய்யலுவைச் சொல்லிக் குற்றமில்லை. அவ்வளவு 'டிமாண்ட்' அவருக்கு. ஆழ்வார்பேட்டையிலுள்ள அவர் கடையில் விடிய விடியக் காத்திருந்து புது காஸ்ட்யூமுடன் மறுநாள் வெளிநாடு புறப்பட்ட அனுபவம் பிரபல நாட்டியமணிகள் பலருக்கு உண்டு.

''வேறு யாரிடமாவது கொடுத்துத் தைக்கலாமுங்க, ஆனால் இவர்கிட்டே கிடைக்கற க ச் சி த மா ன ஃபிட்டிங்


கிடைக்காதே...'' என்றார் தம் மகள்களின் நாட்டிய உடுப்பு தைக்கக் கொடுக்க வந்திருந்த ஒரு தந்தை.

இத்தனைக்கும் அய்யலுவின் ஏர்கண்டிஷன்ட் தர்பார் மிகச் சிறியது. சுமார் பத்தடிக்குப் பத்தடிதான் - அதில் பின் பகுதியை ஃபிட்டிங் ரூமாகத் தடுத்து, முன் பகுதியில் சுவரையொட்டிய மடக்குப் பலகை இருக்கைகள் அமைத்து, மையப் பகுதியில் தரையில் உட்கார்ந்திருக்கிறார் அய்யலு. ஐந்தாறு மரப் படிகள் - அதன் முடிவில் பரண் போன்ற அமைப்பில் நான்கு தையல் மிஷின்களை, உதவியாளர்கள் குனிந்த தலை நிமிராமல் கடகடகடவென்று ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். டிரான்ஸிஸ்டரில் சப்தமாய்த் திரைகானம்.

டெக்னிக் கலரில் பட்டுச் சுருள்கள், சரிகைத் துண்டங்கள் புடைசூழ பழங்காலத்துக் கணக்குப் பிள்ளை மேஜை போன்ற குள்ள டேபிளில் சிவப்பு நிற தர்மாவரம் பட்டுத் துணியை விசிறி மடிப்பு மடித்து ஒட்டுத் தையல் போடுகிறார் அய்யலு. கைக் கெட்டும் தூரத்தில் நூல் பந்து; இலகுவாய் இழுத்துப் பேச, வசதியான மடக்கு ஸ்பிரிங் முனையில் பழைய கறுப்பு டெலிபோன்.



அன்றைய உடையில் ருக்மிணி தேவி



இன்றைய உடையில் ஸ்ரீலதா விஸ்வநாதன்

டெலிபோன் தொந்தரவும் வாடிக்கையாளர் கெஞ்சலும் சற்றே ஓய்ந்த அந்த அரிய கணத்தில் அவரைப் பிடிக்கிறோம்.

''கொஞ்சம் பேசணுங்க...''

''ம்... ரேடியோவைக் கம்மி பண்ணுங்க.....'' - மேல் நோக்கி உத்தரவு.

''எவ்வளவு வருஷமா இந்தத் தொழில்...?''

''ம்......... ரொம்ப வருஷம்...''

''ஒரு இருபது வருஷம்...?''

''உம்... முப்பது...''

''யார்கிட்டே கத்துக்கிட்டீங்க...?''

''அம்பேத்கார்...''

''அவர்...? சினிமா காஸ்ட்யூமரா...?''

''உம்...''

''முப்பது வருஷத்துக்கு முன்னாலிருந்த நாட்டிய உடைக்கும் இப்போ இருக்கறதுக்கும் என்ன வித்யாசம்...?''

''இப்ப ரொம்ப குறைவு...''

''என்ன...?''

''ஒரு கச்சேரிக்கு ஒண்ணோ ரெண்டோ தான்...''

''முன்னே...?''

''புரோகிராம் மூணு மணி நேரம்; ஆண்டாள், குறத்தி.... இன்னும் நிறைய ஐட்டம், தனித்தனியா தைச்சுக்கிட்டாங்க. இப்ப அதெல்லாம் 'ஓரியன்டல்'னு யாரும் ஆடறதில்லை; கிளாஸிகல்தான். நேரமும் கம்மி டிரெஸ்ஸூம் கம்மி...''

''அதுனால உங்க தொழில் பாதிக்கப் பட்டிருக்கா...?''

''உம்... இல்லை. இப்போ ஆடறவங்க அதிகம்...''

''உடை தைக்கற முறையில என்ன வித்தியாசம்...?''

''முன்னே எல்லாம் 'லூஸ்' காஸ்ட்யூம். இப்போ வேலையும் டைட்; ஃபிட்டிங்கும் டைட்!''

''அப்புறம்...?''

''உம்... இப்போ எல்லாத்துக்கும் பிரஸ் பட்டன். சீக்கிரம் மாத்த... சிலையைப் பார்த்து டிசைன்...''

''அப்படியா...? என்ன சிலை...?''

''எத்தனையோ - இதோ பாவை விளக்கு...''

கால் பைஜாமாவில் படிப்படியாய்ச் சரிகைப் பட்டை வைத்துத் தைத்த போட்டோ காண்பிக்கிறார்.

ஆல்பத்தை வாங்கிப் புரட்ட, பல பிரபலங்களின் படங்கள்.

''எல்லா பெரிய டான்ஸர்களும் உங்க கிட்டேதான் தைக்கறாங்களோ?''

''உம்... எம்.பி.யா இருந்தாங்களே அவங்களுக்கு இருபது வருஷம் தைச்சேன்...''

''வைஜயந்திமாலா...?''

''ம்... புரோகிராமுக்கெல்லாம் கூடவே போவேன்...''

''வேறு யார்...?''

அய்யலு தைத்து முடித்த சிவப்பு தர்மாவர விசிறி மடிப்பை லாகவமாய் மேல் தளத்துக்கு விட்டெறிந்தபடி சொல்கிறார்:

''டி.வி. சீரியலுக்குக் கொஞ்சம் எங்கிட்டேயும் கொடுத்தாங்க...''

''யாரு? பத்மா சுப்ரமண்யமா...?''

''ம்...''

''ஹேமமாலினி...?''

''ம்... அவங்களுக்கும் குடுத்திருக்கேன்...''

''தொழில் லாபகரமா இருக்கா...?''

''உம்... ரொம்ப லாபம்னு இல்லை...''

''என்ன கஷ்டம்...?''

''தைக்கப் பழகிக்கிட்டா உதவி ஆட்கள் தனியாப் போயிடறாங்க; சிஷ்யங்க தனியாப் போய் டான்ஸ் கிளாஸ் எடுக்கற மாதிரி...''

(அப்பா... ஒரு முழு நீள வாக்கியம்!)

''வரோங்க...''

''ம்...'', இடது தோளில் சட்டையில் குத்தி வைத்திருக்கும் ஊசியை எடுத்துப் புது நூல் கோர்க்கிறார் அய்யலு. டியூப் லைட் வெளிச்சத்தில் தடுமாற்றமின்றி முதல் முயற்சியிலேயே வெற்றி... நரைத்த அவர் தலையைப் பார்த்துக் கேட்கிறோம்...''

''கண் பார்வை நல்லா இருக்கே...?''

''உம்... கடவுள் அருள்...'' என்கிறார் அய்யலு.

- நமது நிருபர்கள்

படம் : யோகா



கோட்டு வாத்தியம்

❑ ரவிகிரண் வாசிக்கும் இசைக் கருவியான கோட்டு வாத்தியத்தை 'சித்ரவீணை' என்று அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாம். காப்பிய காலத்திலேயே ''செங்கோட்டு யாழ்'' என்று ஒரு இசைக் கருவி இருந்திருக்கிறது. 'கோடு' அல்லது 'குச்சி'யால் வாசிக்கப்படும் யாழ் என்று பொருள். ஸ்வரஸ்தானத்திற்காக மெழுகில் பதிக்கப் பட்ட பித்தளை ஃப்ரெட்டுகள் (FRET) வீணையில் உண்டு. அவ்வகை ஃப்ரெட் அமைக்கப்படாத வீணையில் கட்டையைத் தந்திகள் மீது நகர்த்தி இசைக்கப்படும் கருவியே கோட்டு வாத்தியம்; காரணப் பெயரைக் கோட்டை விட்டு விட்டார் களே!

- வி. ரகுராமன்



காதலெனும் வானவில்

பகபகவென்று உணர்வலைகள் பொங்கிப் பொங்கி எழுந்தன. நல்ல வசதியான வாழ்க்கையை உதறிவிட்டு இந்தியாவுக்குத் திரும்ப உத்தேசித்ததற்கு அவள் தான் காரணம் என்பது படு அபத்தமாகத் தோன்றிற்று. இந்தியாவை மறக்க முடியாததால் அப்பா திரும்பி வந்திருக்கலாம். அவளுக்கும் அதற்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும்?

நாகராஜன் தெரியாமல் பேசுகிறார் என்று மீரா நினைத்துக் கொண்டாள். அவளுக்கும் மஹேஷுக்கும் எந்தப் பிரச்னையும் இருந்ததில்லை. அமெரிக்க குழந்தைகளுக்கும் தங்களுக்கும் இடையே எந்த வித்தியாசத்தையும் உணர்ந்ததில்லை. படிப்பில் மோசமில்லை-நிறைய சிநேகிதர்கள். நல்ல சிநேகிதர்கள். எரிக் பேக்கரைப் போல ஒரு நண்பன் எங்கே கிடைப்பான்? வாரா வாரம் இப்பவும் கடிதம் எழுதுகிறான் - 'உன்னை ரொம்ப மிஸ் பண்ணுகிறேன் எப்பொழுது அமெரிக்கா வருவாய்' என்று அவன் கடிதத்தைப் படிக்கும் போதெல்லாம் கண்ணில் நீர் தளும்புகிறது; அமெரிக்காவுக்குக் கிளம்பிப் போய் விட வேண்டும் போல் இருக்கிறது. மேல் படிப்பு படிக்க அங்குதான் செல்ல வேண்டும் என்று உறுதி ஏற்படுகிறது. நாகராஜன் சொன்னதில் ஏதேனும் உண்மை இருக்குமானால் அமெரிக்காவுக்குச் சென்று படிக்க அப்பாவின் சம்மதம் கிடைக்காது. இங்கு திரும்பியதும் அப்பாவும் ஒன்றும் சுலபமாக இந்திய வாழ்வுடன் ஒன்றிவிடவில்லை. தன்னை ஒரு இந்தியன் என்று அடையாளம் காட்டிக் கொள்ளச் சற்று அதிகமாகவே சிரமப்படுகிறார் என்று அவள் பரிதாபப்பட்டதுண்டு.

வாஸந்தி 7



"திரௌபதி மானபங்கத்தைப் பற்றி இன்று நடக்கப் போற காலட்சேபத்திற்கு லேடீஸ் கூட்டம் நிறைய வரும்னு எப்படி சொல்றே?"

"காலட்சேபத்தை ஸ்பான்சர் செய்யப் போறது கிமல் சில்க்ஸாம். துகிலுரியும் கட்டத்தின் போது பாகவதர் ஒவ்வொரு புடைவையின் கலர், டிசைன், தரத்தை விஸ்தாரமாக வர்ணிக்கப் போகிறாராம்!"

- ஜம்புநாத்

வீட்டை அடைந்தபோது அப்பா ஆபீஸிலிருந்து வந்து விட்டிருந்தார். வேஷ்டி அணிந்து ஹிந்துவில் தன்னை மறைத்துக் கொண்டிருந்தார். டேப்பில் கே.வி. நாராயணஸ்வாமி கரஹரப்பிரியாவில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்.

"ஹாய் டாட்!"

ஹிந்துவைக் கீழே இறக்கி, "வாம்மா" என்றார் ஸ்ரீனிவாசன் புன்னகையுடன். "டான்ஸ் க்ளாஸ் போயிருந்தியா?"

"என்ன சீக்கிரம் வந்துட்டியே?" என்ற அம்மாவைப் பார்த்து "ஆமாம், நந்தினி வராததாலே சீக்கிரம் கிளம்பிட்டேன்," என்றாள். நந்தினியைப் பற்றி அறிந்திருந்த அம்மா சிரித்து, அப்பாவைப் பார்த்து "அந்தப் பெண் பாவம் ரொம்ப நிதானம்" என்று விட்டு "நீ பாலைக் குடி" என்றாள் மீராவிடம்.

சமையலறைக்குச் சென்று டம்ப்ளரில் பாலை எடுத்துக் கொள்ளும்போது, கூடத்திலிருந்து "நந்தினி ஏன் வரல்லே?" என்றாள் அம்மா.

மீரா பால் டம்ப்ளருடன் கூடத்துக்கு வந்து அவர்கள் எதிரில் அமர்ந்து கொண்டாள். "அதைப் பத்தி அப்புறம் சொல்றேன். அப்பா, வாஷிங்டன்லே நாகராஜன்னு ஒருத்தரை உங்களுக்குத் தெரியுமா?" என்றாள்.

"ஆமாம். எதுக்குக் கேக்கறே?"

"இன்னிக்கு அவரைப் பார்த்தேன் லலிதாங்கியோட. 'சீனிவாசனுடைய பெண்ணா, எனக்கு ஸ்ரீனியை நல்லாத் தெரியும்'னார்."

"இந்தியாவுக்கு வந்திருக்கானா?" என்று அப்பா புன்னகை செய்தார். "லலிதாங்கியை அவனுக்குத் தெரியுமா?"

"லலிதாங்கியுடைய பாய்ஃப்ரெண்ட் அவர்."

"உளறாதேடி மீரா" என்றாள் அம்மா. பிறகு அப்பாவைப் பார்த்துப் புகார் சொல்லும் விதத்தில் "இவளுக்கு இதேதான் வேலை" என்றாள். "பேச்சிலே விவஸ்தையே இல்லாம போச்சு. முருகேசன் இவளுக்கு பாய்ஃப்ரெண்ட். பொன்னுச்சாமி எனக்கு பாய்ஃப்ரெண்ட், அன்னிக்கு அந்த மீனாட்சியுடைய அம்மா வந்திருக்கா, அவளுக்கும் -"

அதற்குள் மீராவுடன் சேர்ந்து கொண்டு அப்பாவும் பெரிதாகச் சிரித்தார். மீரா சிரித்துக் கொண்டே சொன்னாள்:

"ஏன் இருக்கக்கூடாதா? ஆனா அதெல்லாம் தமாஷுக்குச் சொன்னது. இந்த நாகராஜன் லலிதாங்கிக்கு பாய்ஃப்ரெண்ட் என்கிறது நிஜம்."

"எப்படித் தெரியும்? அவ உங்கிட்டச் சொன்னாளா?" என்றாள் அம்மா பரிகாசமாக.

"அதெல்லாம் சொல்லணுமா என்ன? அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கற பார்வையிலேயே தெரியறது. லவ் பண்றது. லலிதாங்கியை இவ்வளவு சந்தோஷமா நான் பார்த்ததேயில்லே. இன்னிக்கு யாருமே திட்டு வாங்கல் லேன்னா பார்த்துக்கோ!"

அப்பா யோசனையுடன் பார்க்க, அம்மா சிரித்தாள்.

"லலிதாங்கிக்கு நாற்பது வயசு இருக்காது?"

"ஏம்மா, நாற்பது வயசுக்கு முந்திதான் காதலிக்கணுமா?"

அம்மா அவளுக்குப் பதில் சொல்லாமல் சீனிவாசனிடம் மெல்லிய குரலில் கேட்டாள். "அந்த நாகராஜனுடைய வைஃப் செத்துப் போயிட்டா இல்லே?"

ஆமாம் என்பதுபோல் அப்பா தலையை அசைத்தார். "இந்த லலிதாங்கி எப்படி ஃப்ரெண்டானா?" என்று சிரித்தார். "அவனுக்கு டான்ஸ், பாட்டு இதிலெல்லாம் இன்ட்ரெஸ்ட் உண்டுன்னு எனக்குத் தெரியாது. அவனை நம்ப வீட்டுக்கு வரச் சொன்னியா?"

"சொன்னேன், ரொம்ப அபத்தமா அவர் பேசினாலும்."

அப்பா சிநேகிதமாகச் சிரித்தார். "என்ன சொன்னான்?"

"ஸ்ரீனி இந்தியாவிலே சந்தோஷமா இருக்கானா? உனக்காகத்தான் அமெரிக்காவை விட்டுக் கிளம்பினான்னு சொன்னார்."

திரை விழுந்தது போல் அம்மாவும் அப்பாவும் மௌனமானது விநோதமாக இருந்தது. கையிலிருந்த பால் டம்ப்ளரைச் சமையலறை 'ஸிங்கில்' போட்டுவிட்டு மீண்டும் அவர்கள் எதிரில் அமர்ந்து சிரிக்காமல் நேரிடையாகக் கேட்டாள்.

"ஏம்ப்பா அவர் சொன்னது நிஜமா?"

கார்பெட்டைத் தீவிரமாகப் பார்த்துக்

கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் நிமிர்ந்து ''இன்னும் வேற என்ன சொன்னாள்?'' என்றார்.

''வேற ஒண்ணும் சொல்லல்லே. அவர் சொன்ன காரணம் சரியா?''

''எஸ் அண்ட் நோ!'' என்றார் அப்பா பலவீனமான புன்னகையுடன்.

''அப்படின்னா? இந்தியாவுக்காக நீங்க ஏங்கிப் போனதனாலேதான் வந்தோம்னு நா நினைச்சேன்.....''

''அதுவும் உண்மைதான்'' என்றார் அவர் சங்கடத்துடன். ''இந்தியாதான் நமக்குப் பாதுகாப்பானதுன்னு எனக்கு அங்கே தோணிப் போச்சு.''

''எனக்குப் புரியல்லே, நீங்க பேசறது'' என்று அவள் முணுமுணுத்தாள்.

அம்மா பேசாமல் ஒரு பார்வையாளர் போல் அமர்ந்திருந்தாள்.

''உனக்குப் புரியறது கஷ்டம்'' என்றார் அப்பா சோகமாக. ''நீ அங்கேயே பிறந்து வளர்ந்தவள் - மனசளவிலே இப்பவும் அமெரிக்கன். அமெரிக்காவிலே இருக்கிற வாழ்க்கை முறையைப் பத்தி உனக்கு ஒரு குழப்பமும் இருக்காது. நான்தான் குழம்பிப் போனேன். பயந்தேன், நான் பயந்தது தப்பா சரியான்னு புரியல்லே, இங்கே கிளம்பி வந்தது முட்டாள்தனம்னு இங்க வந்த புதுசிலே ரொம்பத் தவிச்சேன். இப்பக் குழப்பமில்லே, தவிப்பில்லே.''

அவர் இத்தனை உணர்ச்சி வசப்பட்டுப் பேசி அவள் பார்த்ததில்லை. மனத்தளவில் இவர் உண்மையிலேயே ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்க வேண்டும் என்ற உணர்வு அவளை ஆச்சரியப்படுத்திற்று.

''இப்பவும் எனக்குப் புரியல்லே அமெரிக்காவைவிட்டு நாம ஏன் வந்தோம்னு.''

அப்பா கையிலிருந்த ஹிந்துவைப் பார்த்தபடி ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசுவது போல் பேசினார்.

''அந்தக் கலாசாரத்தைக் கண்டு பயந்து போனேன். அதுதான் காரணம்.''

நாகராஜனின் பேச்சை விட இது அபத்தமாகத் தோன்றிற்று. ''நாகராஜன் நான்தான் காரணம்னு சொன்னார்.''

''ஒரு விதத்திலே அவன் சொன்னது சரிதான். உனக்காகத்தான் கிளம்ப முடிவு செஞ்சேன். உனக்கு வயசு ஏற ஏற அந்தக் கலாசாரத்திலேந்து உன்னைக் காப்பாத்தணும்னு தோணிப்போச்சு.''

அவள் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தாள். இப்படிப்பட்ட எண்ணங்கள் இவருக்கு இருக்கும் என்று அவள் நினைத்ததில்லை. காட்! இவருக்கும் நந்தினியின் அம்மாவுக்கும் வித்தியாசமில்லை!

அவளுக்குக் குபீரென்று அடிவயிற்றிலிருந்து துக்கமும் கோபமும் சுருண்டு எழுந்தன. ஒரே விநாடியில் அவளுடைய நம்பிக்கையைத் தகர்த்ததுபோல் இருந்தது. அவள் விருட்டென்று எழுந்தாள். சுபாவமான அவசரத்துடன், ''உங்க பயமும் முடிவும் சுயநலமானது. நியாயமில்லாதது. நீங்க வளர்ந்ததுக்கும் எனக்கும் சம்பந்தமில்லே. என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நீங்க தீர்மானிக்க முடியாது. இந்தப் ப்ளஸ்டு பரீட்சை முடிஞ்சதும் நான் அமெரிக்கா போயிடுவேன். நீங்க என்னைத் தடுக்க முடியாது!''

''நில்லு மீரா, நா சொல்றதை நிதானமாக் கேளு!''

அவள் நாலே எட்டில் மாடிப் படிகளைக் கடந்து தன் அறைக்குச் சென்று கதவைப் படீரென்று சாத்தி கட்டிலில் குப்புறப் படுத்தாள். அழுகை வெடித்தது. பிரவாகமாய்க் கண்ணீர்ப் பெருகிற்று. மிக மோசமாக ஏமாற்றப்பட்டது போல் தோன்றிற்று.

மெல்ல மெல்ல அழுகையும் கோபமும் குறைந்ததும் அவள் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தாள். 'வயது ஏற ஏற பயம் தோண ஆரம்பிச்சது.' எதைக்கண்டு பயம்? அவள் டேட்டிங் போக ஆரம்பிப்பாள் என்றா? எரிக் பெக்கரைக் கண்டு பயமா? அமெரிக்கப் பையன்களுடன் டேட்டிங்



- ஜம்புநாத்



''சீசன்லே வித்துவான்கள் நடத்தப் போற பட்டி மன்றத்தை ஒரு சபாவில் ஏற்பாடு செய்யப் போறாங்கன்னு சொன்னியே தலைப்பு என்ன?''

''வித்துவான்களுக்கு அதிகம் எரிச்சல் ஊட்டுவது சபையோரின் பேச்சா அல்லது குறட்டையா?''

\- ஜம்புநாத்

செல்ல நிறைய இந்திய அப்பா அம்மாக்கள் சம்மதிப்பதில்லை என்று அவளுக்குத் தெரியும். அதற்காகக் குடி பெயர்ந்து இங்கு வருவது எத்தனை அபத்தம்! தன் மேல் அப்பாவுக்கு நம்பிக் கையில்லை என்ற நினைப்பு அவளைத் துக்கப் படுத்திற்று. இதற்காகவே நான் அமெரிக்காவுக்குத் திரும்பிப் போவேன் என்று வீம்பு எழுந்தது. அவள் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு ஹோம்வர்க் செய்து முடிக்கவும், பாடங்களைப் படிக்க வும் அமர்ந்தாள். இரவுச் சாப்பாட்டுக்காக அம்மாவும் அப்பாவும் பல முறை கூப்பிட் டும் சாப்பிடப் போகாமல் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுத்தாள்.

தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத் திருக்கையில் மகாபாரதப் பாத்திரங்கள் போல் இதுவரை அவள் இங்கு சந்தித் திருப்பவர்கள் எல்லாரும் நினைவுக்கு வந்தார்கள். இந்தச் சூழல் எந்த வகையில் பாதுகாப்பானது என்று அவளுக்குப் புரிய வில்லை. கல்யாணமாகாதவளையும் ஏசுகி றார்கள். விவாகரத்தானவளையும் ஏசுகி றார்கள், வம்பு பேசும் பெரியவர்களின் கண்ணில் மண்ணைத் தூவும் இளைஞர்கள் - பொய்கள், ஏமாற்றல்கள் - வர்க்க வித்தி யாசங்கள், ஜாதிவித்தியாசங்கள். முரு கேசனை ஒரு நாள் சோபாவில் உட்கார்த் திப் பேசினதற்கு அம்மா குய்யோ முறையோ என்று கத்தினாள். திடீரென்று அத்தைப் பாட்டி தாத்தாவின் நினைவு வந்தது. சூர்ய வெளிச்சம் போல் இருப்ப வர்கள் கூட மகன் காதலித்த பெண்ணை வேறு ஜாதி என்பதால் ஏற்கவில்லை. எத்தனைக் கருணையற்ற சமூகம் இது - இது எப்படிப் பாதுகாப்பான இடம்? இன்றைய மனநிலையில் எல்லாம் வெறுத்தது. அரை குறையாக வந்த தூக்கத்தில் கனவுகள் சிதறல்களாக வந்தன. காதல் செய்ய அனு மதிக்காத இடம் அது; இங்கே வந்து விடு என்றான் எரிக். காதல் என்பதும் வெறுப்பு என்பதும் ஒரே மனத்தின் பாவனைகள் என்றான் ஹரி. சொர்க்கம் என்பதும் நரகம் என்பதும் மனத்தின் பாவனைகள் என்பது போல......

கதவை யாரோ விடாமல் தட்டியதில் அவளுக்கு விழிப்பு ஏற்பட்டது. வெயில் நீளமாக அறையில் நுழைந்திருந்தது. தூக் கம் கலையாமலேயே கதவைத் திறந்த போது அப்பா நின்றிருப்பதைப் பார்த்ததும் முந்தைய மாலையின் ஞாபகம் வந்தது.

''குட்மார்னிங் கண்ணம்மா!'' என்றபடி அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவர் உள்ளே நுழைந்தார். ''நேத்து நான் உன்னை 'அப்செட்' பண்ணிட்டேன், ஸாரி.'' என் றார். ''எனக்கு என் நிலையைச் சரியா விளக்கத் தெரியல்லே. அதுதான் பிரச்னை. என்னிக்காவது என்னை நீ புரிஞ்சுப்பே.....''

''அப்பா ப்ளீஸ், அதைப்பத்திப் பேச வேண்டாம்.''

அவர் அவளை ஆற்றாமையுடன் பார்த் தார். ''இன்னிக்குப் பேச வேண்டாம்னா சரி, பேசல்லே. ஆனா இப்படி சாப்பிடாம உடம்பைக் கெடுத்துக்காதே.''

அவள் பதில் சொல்லாமல் பாத்ரூமுக் குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண் டாள். அப்பா இப்படி வந்து மன்னிப்புக் கேட்டது மனசுக்கு மெல்லிய சமாதா னத்தைக் கொடுத்தது. ஆனால் இன்று எந்த சொற்பொழிவையும் கேட்கும் மனநிலை யில் அவள் இல்லை.

இன்று ஞாயிற்றுக்கிழமை. வீட்டிலிருப் பதைவிட வெளியில் செல்வது மேல் என்று தோன்றியவுடன், பல்தேய்த்து உடனே குளித்துத் தயாராகி கீழே வந்தாள். அப்பா பூஜை அறையில் இருந்தார். சாப்பாட்டு மேஜை மேல் இருந்த இட்டிலி சட்டினியை எடுத்துச் சாப்பிட்டு, சமையலில் ஈடுபட் டிருந்த அம்மாவிடம் ''நா ஹரியைப் பார்க்கப் போறேன்'' என்றுவிட்டு வெளி யேறினாள். மனசு திடீரென்று எதிலும் ஒட்டாமல் மோனத்தில் ஆழ்ந்து விட்ட தாகத் தோன்றிற்று.


ஆழ்வார்பேட்டையில் ஹ ரி யி ன் வீட்டை அடைந்தபோது அவன் அன்று மாதிரியே வராந்தாவில் அமர்ந்திருந்தான். அருகில் சென்றதும் ''மீராவா?'' என்றான்.

''எப்படித் தெரிஞ்சுது?'' என்றாள் அவள் வியப்புடன்.

''உன் வாசனை'' என்று அவன் சிரித் தான். ''உன் அமெரிக்க வாசனை.''

(தொடரும்)

இன்னிசை ததும்பும் கிண்ணங்கள்



"ஊட்டியில் ஒரு ஜலதரங்கக் கச்சேரி. வழக்கமாய் மேடையில், கச்சேரிக்கு முன்பு என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள ஒரு அரை மணியாகும். மேடையில் உட்கார்ந்து, ஜலதரங்கக் கிண்ணங்களில் தண்ணீர் ஊற்றி, ஸ்ருதி சேர்த்து வரிசைப்படுத்த வேண்டும்! அன்று திடீரென ஒரு பிரச்னை. எந்த கிண்ணத்தில் தண்ணீர் ஊற்றித் தட்டிப் பார்த்தாலும் சுருதி சுத்தமாக இல்லை. காரணம் ஊட்டி குளிரில் தண்ணீர் படு 'ஜில்'லென்று இருந்ததுதான். எப்படி சமாளிப்பது என்று சிந்தித்த போது, ஒரு ஐடியா உதயமானது. சுடச் சுடக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரச் சொன்னேன். அடுத்த சில நிமிடங்களில் மேடையில் ஒரு ஸ்டவ் ஆஜர். வென்னீர் போட்டு, அதைக் கிண்ணத்தில் ஊற்றித் தட்டினபோது 'கணீர்' என்ற நாதம். ஒரு புறம் மேடையிலேயே வென்னீர் கட்டுக் கொண்டிருக்க, அன்றையக் கச்சேரி 'ஜாம் ஜாம்' என்று நடந்தேறியது" என்கிறார் ஜலதரங்க வித்வான் ஆனையாம்பட்டி கணேசன்.

இவருடைய தகப்பனார் ஆனையாம்பட்டி சுப்பையர் ஜலதரங்கப் புலி! அவரிடம் ஜலதரங்கம் கற்றுக் கொண்டவர்கள்தான் கணேசனின் மூத்த சகோதரர்களான குப்புசாமியும், தண்டபாணியும். தகப்பனாரும், சகோதரர்களும் காலமான பின் ஒருநாள் கணேசன் காஞ்சி பரமாச்சாரியாரைத் தரிசனம் செய்யப் போனார். பரமாச்சாரியார் "ஜலதரங்கம் வாசி!" என்ற போது, "நான் கற்றுக் கொண்டது வாய்ப் பாட்டும் வயலினும் தான்; ஜலதரங்கம் தெரியாதே" என்று கணேசன் கூற, "இல்லை! ஜலதரங்கம் உன் ரத்தத்தில் ஊறினது. வாசி! வரும்!" என்று ஆணை யிட்டார். "அப்பா, அண்ணாக்கள் ஆசி, ஆச்சாரியாள் அனுக்கிரகம். நான் இன்று ஜலதரங்கம் வாசித்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறார் ஆனையாம்பட்டி கணேசன். இவர் தம் கச்சேரிகளுக்குப் பயன்படுத்துபவை, இவருடைய தகப்பனார் பயன்படுத்திய ஜலதரங்கக் கிண்ணங்கள்தான். நூற்றிரண்டு ஆண்டு பழையவை!

சமீபத்தில் ஒரு கல்யாண ரிசப்ஷனில் கணேசனின் ஜலதரங்கக் கச்சேரி. ரிசப்ஷனுக்கு வந்த பாலமுரளிகிருஷ்ணா, இரண்டு மணி நேரம் உட்கார்ந்து கச்சேரியை

ரசித்துப் பாராட்டினாராம். ''அசுரத்தனமா வாசிக்கிறே! எப்படிய்யா கத்துண்டே!'' என்றாராம். ''நீங்க ஹார்மோனியம் கத்துக் கலையா? அப்படித்தான்'' என்றாராம் கணேசன்!

அறுபத்தி நான்கு கலைகளுள் ஒன்றாய்க் குறிப்பிடப்படும் ஜலதரங்கம் பற்றிக் கணேசன் கூறுகிறார் :

பதினெட்டு முதல் இருபத்தைந்து கிண்ணங்கள் வரை வித்வான்கள் தம் விருப்பப்படி கச்சேரிகளில் பயன்படுத்துகிறார்கள். வலது கோடியில் உள்ள சிறிய கிண்ணத்தின் விட்டம் நாலு அங்குலம். படிப்படியாய் அளவு பெரிதாகி, இடது கோடியில் உள்ள கிண்ணம் பன்னிரண்டு அங்குலம் விட்டம் இருக்கும். கிண்ணங்களை வித்வான்கள் தம் முன்பு, அரை வட்ட வடிவில் வைத்துக் கொள்வது, சௌகரியம் கருதித்தான். ஜலதரங்கம் வாசிக்கும் குச்சி, பிரம்பு அல்லது மூங்கிலாலானது. அதன் நீளம் சுமார் ஒரு அடி. வெவ்வேறு பருமன் கொண்ட குச்சிகளை வித்வான் ஒரே கச்சேரியில் பயன் படுத்துவதுமுண்டு. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? ஜலதரங்க வித்வான்களுடைய வலது கையை விட, இடது கைக்குத்தான் வேலை அதிகம்!

கிண்ணத்தின் முக்கால் அளவுக்குத்தான் தண்ணீர் ஊற்றிக் கொள்ள வேண்டும். கிண்ணம் நிரம்பத் தண்ணீர் ஊற்றினால் வேகமாய் வாசிக்கிற பொழுது தண்ணீர் சிதறி, பிரச்னையாகிவிடும். அதேபோல, பிடித்துக் கொண்டிருக்கும் குச்சியின் நுனியினால் கிண்ணத்தைத் தட்டாமல், இரண்டு அங்குலம் தள்ளித்தான் தட்ட வேண்டும். இல்லையெனில் கிண்ணமே கவிழ்ந்து விடும் அபாயம் உண்டு. கிண்ணத்தின் சைஸ், தண்ணீரின் அளவு, தட்ப வெட்பம், தட்டும் குச்சியின் பருமன் இவையனைத்தும் கச்சிதமாக அமையும் போதுதான் சுருதி சுத்தம் கிடைக்கிறது.

''ஏன்? உன்னோட மூணாவது மருமகளை மட்டும் சண்டைக்கு இழுக்க மாட்டேங்கறே?''

''ஒரு முன் ஜாக்கிரதைதான்! அவளோட அப்பா 'துப்பாக்கி தொழிற்சாலை' வச்சிருக்காராம்!''

- கவிட் ரவி



சைனாக் களிமண், ஜப்பான் களிமண் இவற்றால் செய்யப்பட்ட கிண்ணங்கள் தாம் ஜலதரங்கத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நம் நாட்டுப் பீங்கான் கிண்ணங்கள், ஜலதரங்கத்துக்கு அத்தனை சிலாக்கியமானவையல்ல. நாகூரில்தான் ஜலதரங்கக் கிண்ணங்கள் நிறையக் கிடைக்கின்றன.

கடைக்குச் சுருதிப் பெட்டி சகிதம் போய், பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வரச் செய்து, ஒவ்வொரு கிண்ணத்திலும் ஊற்றி, சுருதிப் பெட்டியைப் போட்டுக் கொண்டு கிண்ணங்களைத் தட்டிப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதற்குள்... அப்பப்பா! நூறு கிண்ணங்களைப் பரிசோதனை செய்து பார்த்தால், இரண்டு கிண்ணங்கள் தேறும். கஷ்டப்பட்டு, தேர்ந்தெடுத்த கிண்ணத்தின் விலை கேட்டால், கடைக்காரர், கிராக்கி பண்ணிக் கொண்டு, எட்டு ரூபாய் கிண்ணத்தை எண்பது ரூபாய் சொல்லுவார்!

ஜலதரங்கத்தின் கிண்ணங்களை உடையாமல் பாதுகாப்பது என்பதும் சிரமமான காரியம். கிண்ணங்களுக்கு இடையே வெல்வெட் துணி வைத்து, ஸ்பாஞ்சு கொடுத்துத் தயாரித்த ஸ்பெஷல் பையில் எடுத்துச் செல்ல வேண்டும். இரண்டு பைகள் பிடிக்கும்; இருபது கிலோவுக்கும் மேல் கனக்கும்!

ஜலதரங்கத்துக்கு உரிய அங்கீகாரம் தரப்படவில்லையே என்ற குறையும் கணேசனுக்கு இருக்கிறது :

''ஜலதரங்கம் கற்றுக்கொள்வது அத்தனை சுலபமில்லை. நிறையப் பேர் கற்றுக் கொள்ள ஆர்வமாய் இருக்கிறார்கள்; ஆனால், கற்றுக் கொடுக்கத்தான் வித்வான்கள் அதிகம் இல்லை. இருக்கிற வித்வான்களையாவது மியூஸிக் அகாடமி, கலாக்ஷேத்திரா போன்ற அமைப்புகள் அழைத்து ஆதரித்து, இந்தக் கலை மறைந்து விடாதிருக்க ஆவன செய்ய வேண்டும்.

''என்னுடைய பெரிய ஆதங்கம் என்னவென்றால் இன்று எல்லா சபாக்களுமே ஜலதரங்கத்தை மறந்தே போய்விட்டன என்பதுதான். நான் ஏதோ எனக்குச் சங்கீத சீஸனில் சான்ஸ் தரவில்லை என்ற காரணத்தால் புலம்புவதாய் யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. ஜலதரங்கத்துக்குரிய அந்தஸ்த்து தரப்பட வேண்டும் என்றுதான் கேட்கிறேன்'' என்கிறார் கணேசன்.

- பேட்டி, கட்டுரை :

எஸ். சந்திரமௌலி

தங்கமான தங்கச்சி

"என்னங்க, படம் பார்த்தீங்களே! எப்படி இருந்தது?"

"அதையேன் கேட்கறே போ! கொன்னுட்டாங்க."

"அப்படியா?"

"ஆமாம். எடுத்தவுடனேயே ஒரு சாவு. கட்டட வேலையில சித்தாளா இருக்கிற கமலா காமேஷ் சாரத்துலயிருந்து உருண்டு விழுந்து அடிபட்டுச் செத்துப் போறாங்க."

"அப்புறம்?"

"இதுக்கு நடுவில, அந்தம்மாவுக்கு மருந்து வாங்கிட்டு வருகிறதுக்காக ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வர்ற அவங்க மகன் ஆட்டோ ரிக்ஷாவில் அடிபடறான்."

"ஐயையோ! அவனும் செத்துப் போயிடறானா?"

"இல்லையில்லை. அவன் செத்துட்டா எப்படி? அவன்தானே கஷ்டப்பட்டு, வளர்ந்து, பின்னால கதாநாயகன் ஆகிறான்!"

"அப்புறம்?"

"அந்தப் பையனையும் அவன் (தங்கமான) தங்கச்சியையும் - அது ஒரு கைக்குழந்தை - காப்பாத்தற பொறுப்பைப் பக்கத்துப் போர்ஷன்காரங்க ஏத்துக்கறாங்க."

"அப்புறம்?"

"கணவன், மனைவி, ஒரு பெண்..... இவ்வளவு பேர்தான் அந்தக் குடும்பம். அவங்களோட இந்தக் குழந்தைங்களும் சேர்ந்துக்கறாங்க. ஆனா....."

"என்னங்க ஆனா?"

"அடுத்தாப்பல, அந்தப் பக்கத்துப் போர்ஷன் அம்மாவும் திடீர்னு செத்துப் போயிடறாங்க."

"த்சு... த்சு... எதுனாலங்க?"

"அதெல்லாம் தெரியாது. திடீர்னு செத்துப் போயிடறாங்க. அவ்வளவுதான்."

"அப்புறம்?"

"அந்தப் பையன் வளர்ந்து பெரியவனாகி, நியாயம் - தர்மம் - பரோபகாரம் - இரக்கம்... இப்படி சகல கல்யாண குணங்களும் நிறைஞ்ச லட்சியக் கதாநாயகனா ஆயிடறான். தொழில் : டாக்சி டிரைவர்."

"ம்...."

"வில்லனோட மகளுக்கும் கதாநாயகனுக்கும் 'இது' ஏற்பட்டுடுது. அப்புறம், வில்லனுக்கு ஒரு மகன். அவனுக்கும் அவன் சினேகிதனுக்கும் என்ன வேலை தெரியுமா?"

"சொல்லுங்க. நீங்கதானே படம் பார்த்தீங்க."

"பகிரங்கமா ஊர்ப் பெண்களை நடுரோட்டுல மான பங்கப்படுத்தறது."

"ஜனங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?"

"ஊச்... இப்படி மானபங்கப்பட்ட பொண்ணுங்க தூக்கு மாட்டிக்கிட்டுச் செத்துடுவாங்க. கதாநாயகனோட தங்கச்சிக்கும், கடைசியில, இந்தக் கதி நேர்ந்துடுது."

"ஐயையோ!"

"பொங்கியெழுகிறதுதானே கதாநாயகனோட லட்சணம்! அவ்வளவுதான்... சிறிப் பாய்ஞ்சு வில்லனையும் அவன் துணைவர்களையும் துவம்சம் பண்றான். கிளைமாக்சில, வில்லனோட ஆள் கதாநாயகனோட முதுகில கத்தியால சதக். அதே கத்தியை உருவிக் கதாநாயகன் வில்லன் அண்ட் கம்பெனியை சதக். அவனும் காலி, மத்தவங்களும் காலி. கதையில சம்பந்தப்பட்ட எல்லாருமே க்ளோஸ்."

"அப்புறம்?"

"இதுக்கு மேலயும் அப்புறம்... அப்புறம்னு கேட்டியானா, உன்னை நான் என்ன பண்ணுவேன்னே தெரியாது... ஜாக்கிரதை!"

(படம் பார்த்த கணவனுக்கும் அதைப் பார்த்திராத அவன் மனைவிக்குமிடையே நடைபெற்ற உரையாடல்.)

- சி. ஆர். கே.



போட்டிக் கதை - 16



குருமூர்த்தியைச் சீராளன் சந்திக்கும் போதெல்லாம் கேட்கிற முதல் கேள்வி, ''என்ன, எப்படி இருக்கிறார் உங்க பிளாட்பார சித்தர்?''

குருமூர்த்தியின் முகத்தில் நண்பனின் கேள்வி ஒரு பெருமிதத்தை ஏற்படுத்தும். நீண்ட நாள் கழித்துச் சீராளன் அதே கேள்வியைக் கேட்ட போது, குருமூர்த்தியின் முகத்தில் ஒரு கடுகடுப்பு பரவியது போல் தோன்றியது. 'அவன் மனசுக்குள் ஆறு மாதச் சரித்திரம் ஓடலாயிற்று.

அவனுக்கும் பிளாட்பார சித்தருக்கும் அறிமுகம் ஏற்பட்டதே ஒரு விசித்திரமான விஷயம்.

குருமூர்த்திக்கு ஒரே ஒரு பிள்ளை, அனந்து. பிளஸ் டூ பரீட்சையில் ஆயிரத்து நூறு மார்க் வாங்கி அப்பாவைப் பூரிக்கச் செய்தான். குருமூர்த்தியும் தன் பையனுக்குப் பொறியியல் கல்லூரியில் நிச்சயமாக இடம் கிடைத்து விடும் என்று மகிழ்ச்சியில் இருந்தான். ஆனால் அவன் நினைத்தது போல சுலபமாக இடம் கிடைப்பதாக இல்லை. ஆயிரத்து இருநூறுக்கு ஆயிரத்து நூறு சர்வ சாதாரண மார்க் போலவும், முற்பட்ட வகுப்பினராயிருப்பதால் இன்னமும் ஒரு ஐம்பது மார்க் இருந் திருந்தால் கிடைக்கக் கூடும் என்பது போலவும் இழுபறியாயிருந்தது. அப்படியே கிடைத்தாலும் சென்னையில் கிடைக்காது என்று வேறு சொல்லி விட்டார்கள்.

குருமூர்த்தி, எரிச்சலுடனும் கவலையுடனும் பெரிய இடங்களில் எல்லாம் டாக்ஸிக்கும் ஆட்டோவுக்கும் செலவு செய்தவாறு சிபாரிசுக்கு அலைந்தான். சிபாரிசுக்கு நடந்த களைப்பை விட, பையன் கஷ்டப்பட்டு இவ்வளவு மதிப்பெண் வாங்கியும், இந்த மாதிரி அவரையும் இவரையும் சிபாரிசுக்காகத் தொங்க வேண்டிய தலையெழுத்தாகி விட்டதே என்ற வருத்தமும் கஷ்டமுமே அதிகமாயிருந்தது.

இட விஷயமாக அரசாங்க அதிகாரி ஒருத்தரைப் பார்க்கப் போவதாகப் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தான். முதல் நாள் பேசிக் கொண்டிருந்த போது அதிகாரி சொன்னதெல்லாம் நினைவு வந்தது.

அதிகாரி பணத்துக்கு அடி போடுகிறாரா? என்று தெளிவாகத் தெரியவில்லை. ஐயாயிரம் வரை என்றால் கூடப் பரவாயில்லை; கொடுத்துடலாம். பத்தாயிரம் பன்னிரண்டாயிரம் அதுவும் நல்ல மதிப்பெண் பெற்ற பிறகு...

''சார்'', என்று அப்போதுதான் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அவனுக்கு வெகு சமீபத்தில் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்திருந்தான். குளிக்காத அழுக்கு தெரிந்

மிருணாளினி

தாலும் முகத்தைப் பொறுத்தவரை வெகு பளிச். நெற்றியில் திருநீறு துலங்கியது. எதிரே ஒரு துணியை விரித்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

பிளாட்பாரத்தில் சப்பணம் கால்

''எங்கே தராரு கடவுள்? அதனால் என்ன சொல்றேன்னா, நீ நல்லாச் சாமி கும்பிடு, இவுரு புள்ளாண்டானுக்குக் காலேஜிலே இடம் கிடைக்கணும்னு. சும்மாதானே உட்கார்ந்திட்டிருக்கிறே? மன

பிளாட்பார சித்தர்

போட்டு அவன் உட்கார்ந்திருந்த தோரணையும் இருந்த இடத்திலிருந்தே சார் என்று குரல் கொடுத்தவிதமும் குருமூர்த்திக்கு எரிச்சலூட்டின.

காலங்காலையில் அவனவன் எத்தனைப் பிரச்னையோடு சாகிறான். இவன் என்னவென்றால் துரை மாதிரி துணியை விரிச்சுப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டு கவலையில்லாமல் - முகத்தில் சிரிப்புடன்.

பஸ் வருவதற்கு நேரமாயிற்று. குருமூர்த்தியை ஓர் ஓரச் சிரிப்புடன் அந்தப் பிச்சைக்காரன் பார்த்தவாறு இருந்தான். அவனை ஏதாவது சாடவேண்டும் போலிருந்தது குருமூர்த்திக்கு. ''ஏய்யா பெரீவரே, காலையிலே ஜம்முன்னு உட்கார்ந்திட்டியே இப்படி?''

''என்னமோங்க, உங்களாட்டம் இரண்டு பேர் தர்மம் பண்ணுவாங்கன்னு தான்.''

''உன் பேரு என்னய்யா?''

''மாயாண்டிங்க''

''பிச்சை எடுக்கறதுதான் வேலையா?''

''முன்னே ஃபிட்டரா இருந்தேங்க. லாக் அவுட்லே தள்ளிட்டாங்க.''

''அதெல்லாம் சரி, சாமி கும்பிடுவியா?''

''அய்யோ கும்பிடுவேனுங்க,'' இரண்டு கையையும் பக்தியுடன் கன்னத்தில் போட்டு அபிநயித்தான்.

''இங்கே பாரு. நான் ஒரு வேலையா ரொம்பக் கஷ்டத்தில் இருக்கிறேன்.''

''அப்படீங்களா?''

''என் பையனுக்குக் காலேஜிலே அட்மிஷன் கிடைக்கணும்.''

''நல்லாக் கிடைக்குமுங்க. மகராசனா யிருப்பீங்க.''

''எங்கேய்யா கிடைக்குது? நாயாட்டம் அலையறேன். பெரிய படிப்பு. இஞ்சினியரில்லே, அது . அங்கே ஸீட் கிடைக்கணும் என் பையனுக்கு.''

''தாராளமாகக் கிடைக்குமுங்க. கடவுளு தருவாருங்க.''

சுக்குள்ளே வேண்டிக்கோ, இப்படிப் பலாவர் பிள்ளைக்கு அவன் பேரு அனந்து என்ன பேரு சொல்லு?''

''அனந்த்.''

''அதேதான். நீ மனசுக்குள்ளாற நல்லா வேண்டிக் கொள் - ஐயாவோட பிள்ளை அனந்து என்கிறவனுக்கு இன்ஜினியர் கல்லூரியில் இடம் கிடைக்கணும். சாமி கடவுளே இடம் கிடைக்கணும்னு நல்லா வேண்டிக்கோ. சும்மா உட்கார்ந்திட்டிருக்கிற நேரமெல்லாம் மனசுக்குள்ளே இப்படிச் சாமி கும்பிட்டுகிட்டே இருக்கணும். இடம் மட்டும் கிடைத்துடட்டும். இருபது ரூபாய் உனக்குத் தரேன்.''

''இருபது ரூபாயா?''

''ஆமாம் இருபது ரூபாய்!''

மாயாண்டி அந்தக் கணமே கையை ஆசீர்வாதம் பண்ணுகிற மாதிரி உயர்த்தி, ''அய்யோ, நல்லாக் கிடைக்குமுங்க, கட்டாயம்



இன்ஜினியர் கிடைக்குங்க,'' என்றான்.

மாயாண்டியின் வாக்கு பலித்தே விட்டது. பதினைந்து நாளில் அனந்துவுக்கு இன்ஜினியரிங் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது. அந்த அரசாங்க அதிகாரியின் சிபாரிசோ, பையனின் மதிப்பெண்களின் நியாயமான வெற்றியோ எதுவோ வேலை செய்து, இடம் கிடைத்து விட்டது.

குருமூர்த்தி இந்த மகிழ்ச்சிச் செய்தியை மறுநாளே மாயாண்டியிடம் தெரிவிக்க பஸ் ஸ்டாண்ட் பக்கம் போனான்.

தயாராகக் கையில் வைத்திருந்த இருபது ரூபாயை அவனிடம் நீட்டி, ''பெரியவரே, பையனுக்கு ஸீட் கிடைச்சிட்டுது. உன் வாய் முகூர்த்தம் பலிச்சுதுய்யா, ரொம்ப சந்தோஷம்,'' என்றான்.

ரூபாயைப் பெரிய மலர்ச்சியுடன் வாங்கிக் கொண்ட மாயாண்டி, ''கிடைச்சுடும்னு சொன்னேனுங்களே. கடவுள் குடுப்பாருங்க. மகராசன்...'' ஒரு கையை ஆசி வழங்குவது போல ஆட்டினான்.

''இந்தாய்யா பெரிவரு, ரூபாய் கிடைச்சுதுன்னு தண்ணி கிண்ணி அடிக்க... அந்தப் பழக்கம் எல்லாம் உண்டா?''

''அய்யய்யோ அதெல்லாம் கிடையாதுங்கோ'' ஓர் இளிப்புடன் கூறினான் மாயாண்டி.

குருமூர்த்திக்கு ஒரு மைத்துனன் உண்டு. அவன் பெயரும் குருமூர்த்திதான். ஆனால் கணவன் பெயரைச் சொல்லித் தம்பியைக் கூப்பிடப் பிடிக்காத குருமூர்த்தியின் மனைவி அவன் பெயரை ''ருகு'' என்று மாற்றி விட்டாள்.

''ருகுதான் பாவம் அழுதுட்டுப் போகிறான். பாங்கி லோன் இன்னும் வரலையாம்,'' என்றாள் குருமூர்த்தியின் மனைவி.

மைத்துனன் சொந்தத்தில் ஒரு டைப் ரைட்டிங் நிலையம் தொடங்குவதற்கு மும்முரமாக முயன்று கொண்டிருந் தான். குறைந்தது பதினையாயிரமாவது வேண்டியிருந்தது. பாங்கியின் தலைமையகம் வரை பலரைச் சந்தித்துத் தினமும் போராடி வந்தான். ஆனால் கடன் கிடைப்பது தள்ளிப் போய்க் கொண்டேயிருந்தது.

''நானும் வேண்டாத தெய்வமில்லை,'' என்று ருகு அங்கலாய்த்துக் கொண்டான்.

பையனுக்குக் கல்லூரியில் இடம் கிடைத்த விஷயம் பற்றி விரிவாகக் கூறினான் குரு.

''அத்தான், இருபது ரூபாயில்லை. ஐம்பதாக நான் தர்றேன். ஆகட்டும்,'' என்றான் ருகு உணர்ச்சிவசப்பட்டு.

அடுத்த முறை மாயாண்டி தனியாக அகப்பட்ட போது பிடித்துக் கொண்டான் குரு.

''இங்கே பாருய்யா. மாயாண்டி, என் மைத்துனர் ஒருத்தர் ரொம்ப நல்லவரு. அவர் ஒரு டைப் அடிக்கிற ஸ்கூலு ஆரம்பிக்கணும். அதுக்கு லோன் கிடைக்காம கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கிறார். நீ நல்லா சாமி கும்பிடுய்யா, எப்படியாச்சும் லோன் சாங்ஷன் ஆகணும்னு.''

''ஆகுங்க, ஆயிடுங்க... நீங்க கவலையே படாதீங்க. நல்லா ஆகுங்க என் வாயிலே நல்ல வாக்குதாங்க வரும்.''

''அதெல்லாம் சரிதான். லோன் சாங்ஷன் ஆச்சன்னா உனக்கு ஐம்பது ரூபாய் தருவாராம். சாமியை நீ நல்லாக் கும்பிடுய்யா.''

''அய்யய்யோ, ரொம்ப நல்லா கும்பிடறேங்க,'' குருமூர்த்தி அட்வான்ஸ் போல அவனிடம் இரண்டு ரூபாயை எடுத்துத் தந்தான். ''என்ன சொல்லிக் கும்பிடணும்... எங்கே, சொல்லு பார்க்கலாம்.''

''ஐயாவுக்கு லோனு பாங்கிலே தரணும்.''

''எனக்கில்லே. என் மைத்துனனுக்கு அதாவது மச்சானுக்கு.''

''ஸரி, ஸரி, அய்யாவோட மச்சானுக்கு லோனு பாங்கி தரணும்.. கிடைக்குங்க. கடவுளு தருவாருங்க.''

அடுத்த வாரமே ருகுவுக்கு பாங்கிலிருந்து நிதி உதவி கிடைத்து விட்டது.

''ஏண்டா, அந்த சித்தர்கிட்டே ஐம்பது ரூபாயையும் அப்படியே கொடுத்தால் வேட்டு விட்டுடுவான். வேணும்னா ஒரு சட்டை வேட்டியா வாங்கித் தந்து விடலாமா?''

''இல்லை அத்தான். நாம எப்படி வேண்டிக்கிட்டோமோ அப்படித்தான் தரணும். ரூபாயாவே கொடுத்துடறேன். அவரு எப்படியோ செலவழிச்சுக்கட்டும்.''

''இந்த வரனையே நம்ம பெண்ணுக்கு முடிச்சிடலாங்க.''

''எதனால் இவ்வளவு உறுதியாச் சொல்றே...?''

''இதுவரைக்கும் வந்தவங்களிலேயே இந்தப் பையன்தான் டிபனைத் தின்னுட்டுத் தட்டையும் சுத்தமா அலம்பி வச்சிட்டுப் போயிருக்கான்.''

- வி. கி. குமார்



தின் அனுபவத்தையும், தன் மைத்துன னுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், குரு மூர்த்தி தன் காரியாலயத்தில் எல்லோரிட மும் சொல்லிக் கொண்டிருப்பது வழக்க மாகி விட்டது. அவனுடைய காரியால யத்தில் அவன் மேஜைக்கு நேர் எதிரே லேடி டைப்பிஸ்ட் ஓர் அம்மாள் இருப் பாள். எப்போதும் முகத்திலே சோகம். அவள் வீட்டுக்காரருக்கு மதுரையில் பள்ளிக்கூட ஆசிரியர் வேலை. மதுரையி லிருந்து சென்னைக்கு மாற்றிக் கொண்டு வர அவரும் எப்படி எப்படியோ முயன்றும் முடியாமலேயே இருந்து வந்தது.

அந்தப் பெண் பார்வதி ஒரு நாள் லஞ்ச் சமயம் குருமூர்த்தியிடம் தயக்கத்துடன் வந்து, ''குரு சார், நீங்க யாரோ ஒரு சித்தரைப் பற்றிச் சொல்லிகிட்டிருப்பீங் களே, அவர் எங்கே சார் இருக்கார்? என் வீட்டுக்காரர் டிரான்ஸ்பர் விஷயமாக அவ ரைப் பார்த்துட்டு வரலாம்னு பார்க்கி றேன்,'' என்றாள்.

குருமூர்த்திக்குப் பெருமையாயிருந்தது. ''எங்க பிளாட்பார சித்தர்தானே? வாங்க ளேன். கூட்டிட்டுப் போறேன். காரியம் முடிச்ச பிறகு உங்களுக்குத் தோணறதைக் கொடுங்க. பாவம், சாதாரண ஆள்தான். ஆனாலும் ஒரு வாக்கு இருக்கு. ஏதோ ஒரு சக்தி இருக்கு.''

இரண்டு வாரத்தில் பார்வதியின் கண வனுக்கு மாற்றல் கிடைத்து விட்டது. அவ ளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விட குரு மூர்த்திக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியே அதிகம்.

'நாம் சரியான ஆளைத்தான் கண்டுபிடித் திருக்கிறோம். உண்மையில் விஷயமுள்ள ஆள்தான் நம்ம பிளாட்பாரத்து ஆள்' என்று எண்ணிக் கொண்டான்.

ஒரு நாள் குருமூர்த்தியிடம் மாயாண்டி தலையைச் சொறிந்து கொண்டு ''சார், உங்க கம்பெனியில் ஒரு வாட்ச்மேன் வேலை வாங்கிக் குடுத்துடுங்க சார். நான் பாட்டுக்குச் செய்துகிட்டிருப்பேன். வவுத்துக்குக் கஷ்டமாயிருக்குங்க என்றான்.''

குருமூர்த்தி சொல்லியிருந்தால் நிச்சயம் அவனுக்கு வாட்ச்மேன் வேலை கிடைத் திருக்கும். ஆனால் குரு சொல்லவில்லை. ''பார்க்கறேனய்யா'' என்று சொன் னானே தவிர சித்தரைப் போய் ஒரு வாட்ச் மேனாக ஆக்குவதாவது என்று யாரிடமும் மாயாண்டிக்குச் சிபாரிசு செய்யவில்லை.

''உங்க சித்தரைப் பற்றி இவ்வளவு சொல்றீங்க. என் முட்டி வலி போகணும்னு கேட்டுப் பாருங்களேன்,'' என்று ஒருநாள் குருமூர்த்தியின் மனைவி சொன்னாள்.

என்ன நல்ல காலமோ, இத்தனை நாள் தடவிய எண்ணெய்களின் சக்தியாலோ என்னவோ மூட்டு வலி மறுவாரம் மிகவும் குறைந்து போய் விட்டது. அவளுக்கே

சித்தர் மேல் நம்பிக்கை வந்து விட்டது.

அவளுடைய பங்குக்கு அவள் அக்கம் பக்கத்தில் சித்தரின் பெருமையை அழகாக விவரித்ததன் விளைவாகத் தெருவிலிருந்த இரண்டொரு பெண்மணிகள் குறிப்பிட்ட பஸ் ஸ்டாண்டுக்குப் போய்க் காணிக்கை செலுத்தி மாயாண்டியைப் பார்த்து விட்டு வந்தனர்.

மாயாண்டி இப்படியாகப் பிளாட்பார சித்தர் என்று பிரபலமாகி விட்டான்.

குருமூர்த்தி பெருமூச்சு விட்டான். நண்பன் சிராளன் கேட்டான். ''ஏண்டா குரு, நீ கண்டுபிடிச்ச சித்தர் ஓகோன்னு வந்துட்டார்னு நீ சந்தோஷப்பட வேண்டியதுதானே?''

''ஆள் ரொம்பக் கர்வமாயிட்டான். முன்னெல்லாம் பார்த்தால் கும்பிடு போடுவான். இப்போ துரை தலையை மட்டும் தான் ஆட்டறார்.''

''உண்மையில் மகிமை வந்துட்டது போலிருக்கு.''

''பஸ் ஸ்டாண்டிலே நேற்று நிற்கிறேன். என்னைக் கொஞ்சமும் தெரியாதவனாட்டம் அ வ ன் பாட்டுக்கு யார்கிட்டேயோ பேசிக்கிட்டிருக்கிறான். கையைப் பெரிசா ஆட்டி ஆசீர்வாதம் பண்றான். நான் ஒருத்தன் நிற்கிறதே அவனுக்குத் தெரியலை. ஆள் டெரிலின் சட்டை போட்டிருக்கான். யார் கொடுத்தார்களோ. முகத்திலே சோற்றுக்களை ஊறிட்டுது. கூட்டம் நிறையச் சேருது போலிருக்கு.''

காரியாலயத்தில் வேலை மும்முரத்திலும் கூட குருமூர்த்தி மாயாண்டியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். ஆறே மாசத்தில் எத்தனை மாறுதல்!

வயிற்றில் சுரீர் என்று வலி ஏற்பட்டது. கொஞ்ச நாளாகவே மத்தியானம் பதினொன்றரை வாக்கில் இப்படி ஒரு வலி. வாயில் ஒரு மாதிரி எச்சில் ஊறும். சாப்பிட்டவுடனேயே அதே மாதிரி வலி.

''அல்சராயிருக்கும்'' என்றார் டாக்டர். ''சில சோதனைகள் செய்ய வேண்டும், ஆபீசுக்கு இரண்டு நாள் லீவ் போட்டு விட்டு வாருங்கள்,'' என்று சொல்லியிருந்தார். காரியாலயத்திலும் சில நண்பர்களுக்குத் தெரியும்.

''சார்,'' என்று யாரோ கூப்பிட்டார்கள். அவர் மேஜை எதிரே இருக்கும் டைப்பிஸ்ட் பார்வதிதான்.

டிபன் பாக்ஸில் ஏதோ கொண்டு வந்திருந்தாள்.

''என்ன சார், வயிற்று வலியா?''

''ஆமாம்மா. லேசாக.''

''கொஞ்சம் பஞ்சாமிர்தம் கொண்டு வந்திருக்கேன். சாப்பிடுங்கள் சரியாகி விடும்.''

''அய்யய்யோ... அது வேறு ஏதாவது பண்ணி வைக்கப் போகுது.''

''நீங்க சாப்பிடுங்களேன். அரை மணியில் உங்க வலி பறந்துடும் பாருங்க. யார் தந்த பஞ்சாமிர்தம்கிறீங்க? நம்ம பிளாட்பாரம் சித்தர் தந்தது. என் வீட்டுக்காரருக்குக் கூட இந்த மாதிரி கம்ப்ளெய்ண்ட் தான். மதுரையிலே தனியாக ஓட்டலிலே சாப்பிட்டு வ யி றே கெட்டுடுத்து. டாக்டர் கிட்டேயெல்லாம் காட்டியிருக்காரு. நடக்கலை. நான் உங்க பிளாட்பார சித்தர் கிட்டே கூட்டிட்டுப் போனேன். பஞ்சாமிர்தம் பண்ணிக் கொண்டு வரச் சொன்னார். தொட்டுக் கொடுத்தார். ஒரு வாரம் சாப்பிட்டதிலே இப்போ வலியே இல்லை. சித்தருக்கு ஒரு வேட்டி துண்டு எடுத்துத் தந்தோம். கையைக் காட்டுங்க சார்.''

ம ன சு க் கு ள் குமுறினாலும், 'டேய் மாயாண்டி நீ ஜெயிச்சுட்டேடா,' என்று கையைக் காட்டினான். பார்வதி அதில் இரண்டு ஸ்பூன் பஞ்சாமிர்தத்தைப் பயபக்தியோடு போட்டாள். ஒரு சொட்டு கீழே தரையில் விழுந்தது. தன் புடைவைத் தலைப்பால் அவசரமாகத் துடைத்தாள். ''சித்தர் பிரசாதம் யார் காலிலும் படக் கூடாது,'' என்று தண்ணீர் விட்டு மறுபடி துடைத்தாள்.

குருமூர்த்திக்குக் கூட பஞ்சாமிர்தம் விழுங்கிய பிறகு வயிற்று வலி தேவலை போலிருந்தது!



''எது எதுக்கு 'டெண்டர்' விடற துன்னு விவஸ்தையே இல்லாம போயிடுச்சே?''

''அப்படி என்ன நடந்துருச்சு?''

''பொதுக் கூட்டம் முடியும் போது உண்டியல் குலுக்கறதுக்குப் போய் நம்ம தலைவர் 'டெண்டர்' விட்டிருக்காருன்னாப் பார்த்துக்கோயேன்!''

- கவிட் ரவி

யூரேகா ஃபோர்ப்ஸ் நிறுவனத்தின் நட்புக்குரிய நபரிடம் நிகழ்ந்த உண்மையான அனுபவம்.

"இதைவிட எவ்வளவு சுத்தமாக இருக்க முடியும் என்பதை இந்த நல்ல மனிதர் உணர்த்தும்வரை, என் வீடு சுத்தமாக இருப்பதாகவே நான் எண்ணியிருந்தேன்!"



தினமும் யூரேகா ஃபோர்ப்ஸ் நிறுவனத்தின் நட்புக்குரிய நபர் நவீன தூய்மை மற்றும் சுகாதாரத்தின் நற்பயன்களை குடும்பங்கள் அறிந்து கொள்ள உதவுகிறார்.

நீங்களும் அவரை வரவேற்கலாம். வசதியான உங்கள் வீட்டில் அவர் யூரோக்ளீன் மைட்டி வேக் தூய்மை முறையை இயக்கிக் காட்டுவார். மற்றும் கண்ணுக்குப் புலப்படாத தூசு மற்றும் அழுக்குகளிலிருந்து வீட்டைத் தூய்மையாக வைக்கும் எளிதான வழிகளை விளக்குவார்.


அக்வாகார்ட் ஆன்லைன் வாட்டர் ஃபில்டர்-கம்-ப்யூரிஃபையரின் ஸ்விட்சை இயக்கியதும் தூய பாதுகாப்பான குடிநீர் பெறும் வழியையும் உங்களுக்குக் காட்டுவார்.

யூரேகா ஃபோர்ப்ஸ் நிறுவனத்திலிருந்து வரும் நட்புக்குரிய நபரின் பேச்சில் நம்பிக்கை தொனிக்கும். இது இயற்கையே. ஏனெனில், இந்தியாவில் உள்ள இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் மற்றும் வெற்றியுடன் திகழும் விற்பனை நிறுவனத்தின் உறுப்பினர் ஆவார். இந்நிறுவனம், விற்பனைக்குப் பின் நம்பகமான சேவை பின்பலத்தைக் கொண்டது.

உங்கள் வீட்டிற்குள் ஒரு முறை வந்ததும், அவர் எடுத்துக் கொள்ளும் நேரம் 30 நிமிடங்களுக்கு மேலாகாது.

இப்பொழுதே அவரை அணுகலாம். உங்கள் குடும்பத்தின் நலத்திற்காக.

எழுத வேண்டிய முகவரி:
யூரேகா ஃபோர்ப்ஸ் லிட்., த.பெ. எண் 936, ஜி.பி.ஓ. பம்பாய்-400 001.



யூரோக்ளீன்	அக்வாகார்ட்	யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்
அனைத்துப்போகத் தூய்மை முறை வேகயம் க்ளீனரை விட மேலானது.	ஆன்லைன் வாட்டர் ஃபில்டர்-கம்-ப்யூரிஃபையர்.	நவீன தூய்மை மற்றும் சுகாதாரத்தில் முன்னோடிகள்.

TRITON/91/EFL/159 TM



☛ லட்சுமி கோபாலசுவாமி

'ஷோ' வழங்கும்

இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?

இந்த வருடம் சாட்சாத் புரட்சித் தலைவி கையால் டாக்டர் எம்.ஜி.ஆர் விருது பெறப் போகிறவர் நாட்டியமணி லட்சுமி கோபாலசுவாமி. மியூசிக் அகடமியின் இளைஞர் விழாவில் பங்கேற்கும் ஒரு ஜூனியர் கலைஞருக்குத் தரப்படும் விருது அது! வழக்கமாக முடிவு விழாவன்று வழங்கப்படும் இவ்விருது 'செல்வி'யின் வருகை கருதி இவ்வாண்டு ஆரம்ப விழாவின் போதே வழங்கப்படவுள்ளது.

அன்று அகாடமிக்குச் செல்பவர்கள் வி.ஐ.பி. வருகைக்காகக் காத்திருக்கும் நேரத்தில் மறந்தும் அரசியல் பேசிவிட வேண்டாம். செக்யூரிட்டி செமத்தியாக இருக்கும். தடா சட்டத்தின் கீழ் தடாலென்று பிடித்தாலும் பிடித்துவிடுவார்கள்.

இளைஞர்களுக்கே 'ரிசர்வேஷன்' செய்யப்பட்ட இன்னொரு விருது கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் வழங்கும் இசைப் பேரொளி. விலைவாசிக்கேற்ப இராக்கிப் படி உயர்கிறதே - இவ்வாண்டு விருதோடு பத்தாயிரம் ரூபாய் பண முடிப்பும் தரப் போகிறார்கள். பெறப்போகிறவர் : சுதா ரகுநாதன். கிருஷ்ண கான சபையில் காலைக் கச்சேரி செய்யப் போகும் இந்த இசைப் பேரொளி அகாடமி வழங்கிய பிரமோஷனை ஏற்கவில்லை! மாலைக் கச்சேரியில் காலி நாற்காலிகளுக்காகப் பாடுவதை விட மதியக் கச்சேரியில் நிறைந்த சபைக்குப் பாடுவதே மேல் என்று கருதினாரோ என்னவோ!

தமிழிசைச் சங்கத்தின் இசைப் பேறிஞர் விருதைப் பெறப்போகும் மகாராஜபுரம் சந்தானம் கிருஷ்ண கான சபாவில் இந்த வருஷம் பாடவில்லை.... இருங்கள், இருங்கள். ஏதோ சிண்டு முடிகிற சமாசாரம் என்று அவசரப்பட வேண்டாம் கிருஷ்ண கான சபா அறக்கட்டளைக்காக பிரம்மாண்டமான நாரத கான சபா அரங்கில் சந்தானம் பாடவிருக்கிறார். அதே நாள், அதே நேரம் மாண்டலின் சீனு கி.கா.சபை அரங்கில் இசை மழை பொழிவார். திண்டாட்டம் ரசிகர்களுக்குத்தான். இங்கே போவதா? அங்கே போவதா? என்று.....

கிருஷ்ணகான சபையில், இரண்டு மணிக் கச்சேரிகளில் வெளியூர்க் கலைஞர்களுக்கு வாய்ப்புத் தந்திருப்பதாகச் சொல்லும் காரியதரிசி,' இந்த வருடம் எந்த வடக்கத்தி வித்வானும் இங்கே பாடவில்லை' என்கிறார். (நாற்பதாயிரமாவது தந்தால்தான் பாட முடியும் என்றாராம் ஒரு பேகம்!)

கி.கா.சபை இவ்வாண்டு நிருத்திய சூடாமணி வழங்கிக் கௌரவிப்பது பால சரஸ்வதியின் மகள் லக்ஷ்மியை. இவர் புகைப்படத்தைப் பார்த்த ஒரு நிருபர் 'நீர் பாலா படத்தையே கொடுத்து ஏமாற்றுகிறீர் ஓய்...!' என்று காரியதரிசியைச் சாடினார். பாலா சீனியர், பாலா ஜூனியர் என இருவர் படத்தையும் பிரசுரித்திருக்கிறோம்.

மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் தனது "சங்கீத கலா நிபுண" பட்டத்துக்கு இவ்வாண்டு வீணை வித்வான் பிச்சுமணியைத் தேர்ந்தெடுத்திருக்கிறது எனில், பாலமுரளி கிருஷ்ணா இவ்வாண்டின் "சங்கீத கலா சிகாமணி"; இவரைக் கௌரவிப்பது இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைடி. அகாடமியின் சொற்பொழிவாளர் பட்டியலில் பாலமுரளிக்கும் இடமுண்டு. ஆனால் அவர் தலைப்பு எதுவும் கொடுக்கவில்லை. 'பொது மக்கள் என்ன தலைப்பு பற்றிப் பேசச் சொல்கிறார்களோ அன்றே அப்பொழுதே பேசுகிறேன்....' என்று சவால் விட்டிருக்கிறார். விலைவாசி உயர்வு, காவிரிப் பிரச்னை, தடா சட்டம் என்று ரசிகர்கள் தர்மசங்கடப்படுத்தாமல் இருக்க வேண்டும்.

கூட்டாயம் கூட்டம் சேர்க்கப் போகும் நிகழ்ச்சிகளுள் சில:

- கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் மற்றும் கிருஷ்ண கான சபையில் யேசுதாஸ்

☛ சுதா : பிரமோஷன்



☛ நேதுனூரி : என்ன பேசுவா



எம்.ஜி.ஆர். விருது

● தேசிய ஒற்றுமை, அமைதி விழாவில் எம்.எஸ்.வி.யின் மெல்லிசை நிகழ்ச்சி (டி.வி. கோபாலகிருஷ்ணன் ஏற்பாடு)

● கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸில் அனூப் ஜலோட்டாவின் கஜல் நிகழ்ச்சி. (இது ஆரம்ப விழாவன்று நடக்கவிருப்பதால் பேச்சு முடிந்து பாட்டு ஆரம்பிப்பது எப்போ என்பதையும் தெளிவாக அறிவித்து விட வேண்டும்!)

● அகாடமியில் ஹேமமாலினியின் 'ராமசரித மனஸ்' நாட்டிய நாடகம்

● நாரத கான சபையில் மேற்படி மிஸஸ் தர்மேந்திராவின் 'துர்க்கா' நாட்டிய நாடகம்.

கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸில் கண்ணதாசன் கவிதைகள் பற்றிய பட்டி மன்றம் எனில் அகாடமியில் 'நாடோடி இசையிலிருந்து சாஸ்திரீய சங்கீதம் வரை' - காரைக்குடி டாக்டர் கே.எஸ். சுப்பிரமண்யம் வழங்கும் வீடியோ காட்சி. கச்சேரிகளல்லாது இதர நிகழ்ச்சிகள் மூலமும் புதுமை புகுத்தும் முயற்சி மேலும் மேலும் அதிகரித்து, கச்சேரிகளை ஓரம் கட்டிவிடாமல் இருந்தால் சரி.

அகாடமி சொற்பொழிவாளர்களுள் பன்னிரண்டு பேர் டாக்டர் பட்டம் பெற்றவர்கள். அதாவது ஆய்வு செய்து பி.எச்.டி. பெற்றவர்கள். மானாவாரியாக டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருக்கும் இந்நாளில் இதை விளக்கி வலியுறுத்திச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. ''தேவார, திவ்யப் பிரபந்த காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டின் கர்நாடக இசை வரை அலசுவார்கள்'' என்கிறார் செயலர் டி. எஸ். பார்த்தசாரதி.

அகாடமி இந்த வருஷம் சங்கீத கலாநிதி விருது கொடுப்பது நேதுனூரி கிருஷ்ணமூர்த்திக்கு. அன்னமாச்சாரியாரின் கீர்த்தனைகளைப் பிரபலமாக்கியதில் முக்கிய பங்குண்டு நேதுனூரிக்கு. 'ஆனால் திருப்பதி தேவஸ்தான இசைக்கல்லூரி முதல்வராகும் வரை அவருக்கு அக் கிருதிகள் பற்றி அவ்வளவு உயர்வான அபிப்பிராயமே இருக்கவில்லை' என்கிறார் நேதுனூரியின் நெருங்கிய நண்பர். ஆனால் ஆச்சர்யம் என்னவெனில் அப்படிப்பட்டவரையே தேவஸ்தானத்துக்குள் அழைத்துக் கொண்டு மனம் மாறச் செய்ததுடன் அன்னமாச்சாரி கீர்த்தனைகளைப் பிரபலப்படுத்தவும் கருவியாக்கிக் கொண்ட தெய்வ சித்தம் தான். அன்னமாச்சாரி கீர்த்தனைகள் பிரபலமானதற்கு எம்.எஸ்.ஸும் முக்கிய காரணம் என்று அடக்கத்துடன் நேதுனூரி கூறுகிறார். அதிகம் பேசாத இவர் அகாடமியில் என்ன பேசுவார் என்று பலருக்கு ஆவல்.

சென்ற வருடம் போலவே இந்த வருடம் கபாலி ஃபைன் ஆர்ட்ஸ் நிகழ்ச்சிகளின் 'கலெக்ஷன்' நல்ல காரியங்களுக்குப் போகும் - 'உதவும் கரங்களும்' 'ஸ்பாஸ்டிக் சொஸைடி'யும் பயன் பெறும்.






◄ பாலா....

◄ ......லக்ஷ்மி

பொள்ளாச்சி நா. மகாலிங்கம் தலைமையில் இயங்கும் ராமலிங்கர் பணிமன்றமும் மியூசிக் அகடமி தலைவர் டி.டி. வாசுவும் இணைந்து 'தேவார மூவர் இசை விழா'வை டிசம்பர் ஆரம்பத்திலேயே நடத்தி விட்டனர். ''தமிழிசை இயக்கம் வளர, சில ஆண்டுகளுக்கு முன் பாடுபட்ட பெரியவர்களின் கனவு நனவு ஆகிறது என்பதை, மியூசிக் அகாடமி அரங்கில் தமிழிசை விழா நடக்கிற இந்த நிகழ்ச்சி நிரூபிக்கிறது'' என்று அமைச்சர் இராம வீரப்பன் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். புரட்சித் தலைவி ஆட்சியில்தான் இப்படிப் பட்ட அதிசய சாதனைகள் நடக்கும் என்று அவர் சொல்லாததுதான் அதிசயம்!

- நமது நிருபர்

வட்டமேஜை



மல்லிகை மணக்கும் மதுரையிலா...?

◆ தமிழ்நாட்டின் இரண்டாவது பெருநகரமான மதுரையில் நிலவும் இன்றைய அரசியல் சூழ்நிலையை உள்ளங்கை நெல்லிக்கனியாகப் படங்களோடு, இரண்டே பக்கங்களில் சுவையாகத் தந்திருப்பது அருமை!

ஈரோடு, சி. நாச்சிமுத்து.

◆ மதுரை மாநகரின் மையப் பகுதியில் உள்ள கூடல் அழகர் பெருமாள் கோவில் தெப்பக்குளம் பற்றி ஒரு வரி கூட இல்லாதது கண்டு ஏமாற்றமடைந்தேன். இதைச் சுற்றிக் கடைகள் வைத்துள்ள காய்கறி வியாபாரிகளும், மற்ற நடைபாதை வியாபாரிகளும் குளத்தை எவ்வளவு நாசப்படுத்த முடியுமோ, செய்து, அந்தப் பகுதியையே நாறவைத்துக் கொண்டிருக்கிறார்கள். கூடலழகர் கோவில் சார்பாக நடைபெறும் தெப்ப உற்சவமும் இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறவில்லை.

சிதிலமடைந்துள்ள கோவில்களைப் பராமரிப்பதற்காக முதல்வர் முயற்சிகள் எடுத்து வருகிறார். அத்தோடு சிதலமடைந்துள்ள, கோவில்களுக்குச் சொந்தமான தெப்பக் குளங்களையும் பராமரிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆலடிபூர், வெள்ளகால் இரா. கந்தையா.

◆ மதுரை மாநகரச் சிறப்பிதழ் என்பதால் மதுரையில் ஆட்டோ ஓட்டுபவர்கள் கட்டணம் என்ற பெயரில் கொள்ளையடிப்பதைக் குறிப்பிட்டிருந்தீர்கள். இது தமிழ்நாடு முழுவதும் நடக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. எடுத்ததற்கெல்லாம் யூனியன் தொடங்கும் கேரளத்திலேயே மீட்டர் பொருத்தி நியாயமான கட்டணத்தைத்தான் வசூலிக்கிறார்கள்.

தூத்துக்குடி, என். சம்பத்.

◆ தமிழ் இலக்கியங்களிலும், இன்றைய சினிமாப் பாடல்களிலும் பெருமையுடன் பாடப்படும் வைகையைக் கல்கியில் புகைப்படத்தில் பார்த்து அதிர்ந்து போனேன்! மல்லிகை மணக்கும் மதுரையில் இன்னொரு கூவமா? மதுரை மக்களே இனிமேலாவது உங்கள் கண்கள் திறக்கட்டும்.

பொள்ளாச்சி, ஏ. சி. பிரபு.

◆ பால்ராஜுக்குக் கரங்கள் 2, விரல்கள் 25 என்று செய்தி வந்துள்ளது. கால் விரல்களையும் சேர்த்துத்தான் இருபத்தைந்து.

மதுரை, டாக்டர். இரா. இரவிச்சந்திரன்.

◆ "பேண்ட் பாக்கெட்டில் ஒரு சிகரெட் பேக்கட்" சிறுகதை நெஞ்சைத் சு(தொ)ட்டது! சிகரெட் பாக்கெட்டின் மீது மண்டை ஓடு பிராண்ட் படம் போட்ட ஓவியர் பாராட்டுக்குரியவர்.

தஞ்சை - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

◆ அரசியல் ஆதாயம் கருதி தமிழக முதல்வருக்கு 'டாக்டர்' பட்டம் தர ம. கா. பல்கலைக் கழகம் முன்வந்ததைக் கார்ட்டூனில் கண்டு வருத்தப்பட்ட எனக்கு, அதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த School of Biological Sciences செய்து வரும் நற்பணி பற்றிய செய்தி மகிழ்ச்சியை அளித்தது. நற்பணி செயல்களைக் 'கல்கி' கண்டு கொள்ளாமல் இருப்பது இல்லை என நினைத்துக் கொண்டேன்.

மதுரை - 20, சி. மகேஷ்.

◆ "விழியின் சோகக் கதை" படித்தேன். உள்ளத்தில் ஆழ்ந்த வேதனைதான் ஏற்பட்டது. பெற்றோர் இல்லாத குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையே கேள்விக்குறியாக இருப்பதுடன், மலரும் முன்பே கருகி விட வாய்ப்பும் உள்ளதைக் கட்டுரை தெளிவாகக் கூறுகிறது! இப்படிப்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு நல்வாழ்வு கொடுக்கும் 'நண்பன்' அமைப்பு வாழ்க!

ஈரோடு, ஈ. டி. விஜயகுமார்.

◆ 'ஏழு கடலா?' கட்டுரையில் என்னை விட வயதிலும், அனுபவத்திலும், திறமையிலும் சிறந்த ஆசிரியர் வெங்கடசாமி அவர்களை என்னுடன் இணைத்து ஒரே கட்டுரையாக எழுதியிருக்கிறீர்கள். அவருடைய பாணி தனி, என்னுடைய பாணி தனி. என்றாலும் இன்று நான் நன்றாக வரைகின்றேன் என்றால் அதற்கு அவர்தான் காரணம்.

மதுரை, எம்.ஜி. ரஃபீக் அகமது.

◆ 1.12.91 கல்கியை எடுத்தவுடன் கண்களில் ஒற்றிக் கொண்டேன். எங்கம்மா மீனாட்சியம்மன் தேர் வலம் நேரில் பார்ப்பது போல் அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருந்தது. நன்றிகள் பல. ஆமாம், தற்போது எடுத்த படம் எதுவும் இல்லையா? போலீஸ் சிவப்புத் தொப்பியும் ஆப் பேண்ட்டுமாக உள்ளார்களே!!

நொச்சிப்பட்டி, மனோகரன்.

◆ 'கல்கி' 17.11.91 இதழ் "அப்பாவுக்கும் பொறுப்பு" என்ற கட்டுரை நல்ல பயன்தரும். குழந்தைகள் மருத்துவர் என்ற முறையில் மேலும் ஒரு கருத்து : பெரும்பாலும் தாய் தனியாக நோய்வாய்ப்பட்ட குழந்தைகளைப் பரிசோதனைக்கு அழைத்து வருகிறாள். அவள் பதற்ற நிலையில் இருப்பதால் டாக்டர் கூறும் அறிவுரைகளை நன்கு செவிமடுத்து நிறைவேற்ற இயலாது இருக்கிறாள். அதனால் பெற்றோர் இருவருமே குழந்தையுடன் மருத்துவ ஆலோசனை பெற வர வேண்டும்.

திருச்சி, டாக்டர். கே. அழகப்பன்.

NAVAJEEVAN SOCIAL WELFARE CENTRE

(REGD)

SRI KANCHI SANKARA MUTH

P.O. TIRUMALA HILLS (VIA) TIRUPATHI.

PIN - 517 504

ஸ்ரீ வெங்கடேஸ்வர கோடிநாம எழுத்து வேள்வி - 1991

திருப்பதி திருமலை புண்ணிய க்ஷேத்திரத்தில் 'நவஜீவன் சேவா கேந்திரம்' சார்பாக 15 Aug. 91 to 23 Nov. 91 வரை நடைபெற்ற ஸ்ரீ வெங்கடேச கோடிநாம எழுத்து வேள்வியில் பக்தியுடன் பங்கு கொண்ட எல்லா ஆஸ்திக அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

23.11.91 சனிக்கிழமையன்று திருமலை ஸ்ரீ காஞ்சி சங்கர மடத்தில் நடைபெற்ற ஸ்ரீ வெங்கடேச கோடி நாம யக்ஞ பூர்ணாஹுதி சமயத்தில் பக்தர்கள்/ யாத்ரீகர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஸ்திகர்களின் S.V.K. எண்கள் கீழ் வருமாறு.

1. FTT - FREE TRIP TO TIRUPATI (FOR 100 MEMBERS)

1. 9002,	2. 7488,	3. 104,	4. 7532,	5. 6776,	6. 7885,	7. 3789,
8. 5964,	9. 4567,	10. 4523,	11. 9556,	12. 9011,	13. 5272,	14. 3844,
15. 1822,	16. 8702,	17. 3909,	18. 6507,	19. 9252,	20. 8006,	21. 8751,
22. 3145,	23. 650,	24. 5778,	25. 653,	26. 4392,	27. 1993,	28. 6019,
29. 145,	30. 210,	31. 6713,	32. 5956,	33. 517,	34. 4174,	35. 8660,
36. 6176,	37. 7371,	38. 2058,	39. 2566,	40. 9301,	41. 2353,	42. 2141,
43. 4735,	44. 1470,	45. 2840,	46. 3169,	47. 9256,	48. 7369,	49. 6772,
50. 8776,	51. 3891,	52. 8521,	53. 8758,	54. 4305,	55. 4714,	56. 3530
57. 7043,	58. 2997,	59. 6908,	60. 3485,	61. 5567,	62. 2785,	63. 6341,
64. 3933,	65. 5259,	66. 2383,	67. 7552,	68. 4690,	69. 4662,	70. 5245,
71. 5339,	72. 7229,	73. 3389,	74. 5068,	75. 3638,	76. 5612,	77. 4443,
78. 8517,	79. 6514,	80. 8052,	81. 6958,	82. 731,	83. 8360,	84. 4841,
85. 8381,	86. 3990,	87. 4234,	88. 3463,	89. 3352,	90. 898,	91. 4580,
92. 7733,	93. 600,	94. 5823,	95. 8267,	96. 7288,	97. 7359,	98. 8713,
99. 7518,	100. 9165.					

2. FGTM - FREE GOLD TIRUMANGALYAM (FOR 9 MEMBERS)

1. 6943,	2. 550,	3. 3470,	4. 3189,	5. 7685,	6. 7678,	7. 624,
8. 7279,	9. 127.					

3. FGM - FREE GROUP MARRIAGE (FOR 9 MEMBERS)

1. 4708,	2. 102,	3. 8846,	4. 5951,	5. 7056,	6. 5821,	7. 7029,
8. 7633,	9. 9316.					

4. FTK - FREE TRIP TO KASHI (FOR 9 MEMBERS)

1. 5871,	2. 3000,	3. 1168,	4. 3436,	5. 4585,	6. 4843,	7. 5950,
8. 8457,	9. 7937.					

''ஓம் நமோ ஸ்ரீ வெங்கடேசாய''



வாஷிங்டன் வைரம்

26

ரகுராமன் மீண்டும் கண் விழித்தபோது அங்கு கறுப்பு ஆள் இல்லை. பளபளக்கும் கத்தி இல்லை. குறுக்குச் சந்து இல்லை. அவன் தலையைப் பதம் பார்த்த செங்கல் சுவர் இல்லை.

'நான் இன்னும் உயிருடனா இருக்கிறேன்?' என்று தன்னையே பலமுறை கேட்டுக் கொண்டான். இடது தோளில் பலமான கட்டுப் போடப்பட்டிருந்தது. நெற்றியைச் சுற்றியும் ஒரு கட்டு. பின் தலை 'விண் விண்' என்று வலியை உணர்த்தியது.

புரிந்தது. 'ஏதோ ஒரு ஆஸ்பத்திரியில் இருக்கிறேன்' என்று அமைதியாக மூச்சு விட ஆரம்பித்தான். தன்னைச் சுற்றி யார் இருக்கிறார்கள் என்று பார்த்தான்.

ராபர்ட் வார்னர் சிரித்துக் கொண்டே நின்றிருந்தான்.

''கத்திக்குத்திலிருந்து உன்னைக் காப்பாற்ற முடியவில்லை. ஆனால் மரணத்திலிருந்து காத்து விட்டோம்'' என்றான் ராபர்ட்.

''எப்படி?'' என்று கேட்கப் புருவங்களைக் கூட ரகுராமனால் உயர்த்த முடியவில்லை. அவன் கேட்காமலேயே ராபர்ட் தொடர்ந்தான்.

''நான் உங்களைப் பாதுகாக்கும்படி என் ஆபீஸ் ஏஜண்ட் ஒருவனை அனுப்பியது உங்களுக்குத் தெரிந்திருக்காது. நீங்கள் முதன் முதலில் என்னிடம் விவரம் சொன்னபோதே அந்த ஏற்பாட்டைச் செய்து விட்டேன்'' என்று விவரித்தான் ராபர்ட்.

ரகுராமனைத் தாக்கிய கறுப்பு ஆள் விசாரணையில் இருப்பதாயும், அவன் வழிக்கு வந்து விடுவான் என்பதையும் ராபர்ட் சொன்னான். தன்னைக் காப்பாற்றிய ஏஜண்டுக்கு நன்றி தெரிவிப்பதாக ரகுராமன் மிகுந்த சிரமப்பட்டுக் கூறினான்.

ராபர்ட் வார்னரின் கையைப் பிடித்துக் கொண்டு ''தேங்க்யூ, ராபர்ட்'' என்று சொன்ன போது ரகுவுக்குத் தொண்டையை அடைத்தது.

எஃப்.பி.ஐயிடம் பிடிபட்ட கறுப்பு அமெரிக்கன், ராபர்ட் வார்னர் ஆபீஸிலிருந்து ஒரு முறை போன் செய்ய அனுமதிக்கப்பட்டான். எல்லா குற்றவாளிகளும் பிடிபட்டு விசாரணைக்குக் கொண்டு வரப்படும்போது அவர்கள் வக்கீலுக்கு ஏற்பாடு செய்ய ஒரு சந்தர்ப்பம் தருவது முறை. அந்த ஆள் கூப்பிட்டது வக்கீலை இல்லை. வக்கீலுக்கு ஏற்பாடு செய்யுமாறு ரிச்சர்ட் மூருக்கு அவன் போன் செய்தான்.

ரிச்சர்ட் மூர் ஆத்திரமடைந்தான். தன்னுடைய ஆள் அதிகாரிகளிடம் அகப்பட்டதால் தன்பாடு தகராறு என்பதை அறிந்தான். எஃப்.பி.ஐ எந்த நேரத்திலும் அவனைத் தேடி வரலாம். அந்தக் கறுப்பு ஆள் நிச்சயம் எல்லா விவரங்களையும் சொல்லி விடுவான் என்று கருதி, வைரமூர்த்திக்கும் போன் செய்தான்.

நிர்மலாவை எந்தத் தடையுமில்லாமல் கடத்தித் தந்த அந்த ஆள் இப்போது எஃப்.பி.ஐயிடம் மாட்டியிருக்கிறான் என்பது வைரமூர்த்திக்கு மிகமிக ஏமாற்றம் அளித்தது. ஏமாற்றம் எரிச்சலாகி, எரிச்சல் பயமாகிக் கவலையாக உருவெடுத்தது.

ரகுராமனை வேறு காணோமே!

ராபர்ட்டின் ஆள், அந்தக் கறுப்பு அமெரிக்கனைத் திடுக்கிடவைத்துக் கைது செய்து அழைத்துப் போனது மட்டுமே தெளிவாகியது. ரகுராமனை அந்தக் கறுப்பு ஆள் கொல்ல முயன்றதும், ரகுராமன் ஒரு ஆஸ்பத்திரியில் இருப்பதும் பற்றிய விவரங்கள் ரிச்சர்ட்டுக்கும் வைரமூர்த்திக்கும் தெரியவரவில்லை. இவர்களுக்கு

வாசன்

ஆச்சர்யம் அளித்த இன்னொரு விஷயம், எஃப்.பி.ஐ. அவர்களைத் தேடி வரவில்லை என்பதுதான்!

'ரகுராமன் மறைவை வைத்தியநாதன் - பூர்ணத்துக்குச் சொல்லி பயமுறுத்தலாமே!' என்று தோன்றியது. போன் செய்து ரங்கதுரைக்கு விஷயத்தைச் சொன்னார். 'ரகுராமனை ஓரிடத்தில் அடைத்து வைத்திருப்பதாய்ச் சொல்' என்று ரங்கதுரைக்குத் திட்டம் சொன்னார்.

இதை அறிந்த வைத்தியநாதனும் பூர்ணமும் மிகவும் வருத்தப்பட்டனர். ரங்கதுரை எது சொன்னாலும் செய்வதாய்த் திரும்பத் திரும்ப வாக்களித்தனர். ரகுராமனை மட்டும் எதுவும் செய்துவிட வேண்டாம் என்று கெஞ்சினர்.

இந்த ஏற்பாட்டை முடித்த வைரமூர்த்தி 'ரிச்சர்ட் மூர் என்ன செய்வான்?' என்று யோசித்தார். தன்னிடம் முப்பதாயிரம் டாலர் கேட்டு பயமுறுத்துகிறானே! ஒரு வேளை சிறைத் தண்டனைக்குப் பயந்து எஃப்.பி.ஐ. யிடம் ரிச்சர்ட் உளறிவிட்டால்...? அல்லது நம்மை ஏமாற்றிவிட்டு அவனே ஹோப் வைரத்தை அடித்துக் கொண்டு போய் விட்டால்?

இன்னும் ஒரு நாள்.... ஒரே நாள்.....

'ஹோப் வைரம் தன் கைக்கு வந்து விடும்!

இந்திய நாட்டிலிருந்து பல கைகள் மாறி வந்த ஒளி மிக்க அந்த நீல வைரக்கல் தன் கைகளுக்கு வந்தே விடும்!

அது ரிச்சர்ட் மூர் போன்ற பேராசைக்காரர்களால் தடைப்படக் கூடாது. அவன் தான் முக்கியமானவன். அவன் மனம் மாறினால் அது அவருக்குக் கிடைக்கவே கிடைக்காது.

வைரமூர்த்தி தமது சிவப்பு 'வோல்வோ' காரில் ஏறி ரிச்சர்ட் மூரிடம் பேசலாம் என்று புறப்பட்டார். அவர் கவனம் ஓரளவுதான் தெருவில் இருந்தது. ரிச்சர்ட் மூர், 'ஹோப்' வைரம், நாளைக்கு என்ன செய்ய வேண்டும் இதையே தீவிரமாகச் சிந்தனை செய்து கொண்டிருந்தார்.

அவருக்குப் பின்னால் டாக்சியில் அவரைத் தொடர்ந்து வரும் ஆளை அவர் கவனிக்கவில்லை.

டாக்சியில் இருந்த ஆள் கறுப்பாக இருந்தான். இந்தியன். நல்ல உயரம் கூட. மீசையை எடுப்பாக வெட்டி விட்டிருந்





லதாஜியுடன் ஜகஜித் சிங்

லதாஜியின் கஜல் காணிக்கை

எழுபதுகளின் இறுதியில் ஹிந்தி சினிமா இசையில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. பெரும்பாலான திரைக் கதைகள் டிஷூம் டிஷூம் பாணியில் அமைந்திருந்ததால் ரம்மியமான இசைப் பாடல்களுக்கு வாய்ப்பில்லாமல் இருந்து வந்தது. இந்தச் சமயத் தில்தான் ஜகஜித் சிங் பாடிய கஜல் காசெட்டுகளும் இசைத் தட்டுகளும் பிரபலமாயின. சினிமா இசை ரசிகர்கள் நாடிய இனிமையை அவை அளித்தன.

கஜல் என்பது ஓர் இலக்கணப்படி எழுதப் படும் இசைப் பாடல்... அதில் கவிதையின் கனத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டதால் ஹிந்துஸ்தானி இசை வல்லுனர்கள் கச்சேரி மேடைகளில் அதை அதிகம் பாடாமலே இருந்து வந்தனர் - வார்த்தைகளுக்குப் பிராதான்யம் கொடுத்தால் இசையின் உணர்வு பூர்வமான வெளிப்பாடு பாதிப்புக்குள்ளாகும் என அவர்கள் நம்பினார்கள்.

ஜகஜித் சிங்கும் சித்ராவும் இணைந்து பாட ஆரம்பித்த பிறகு கஜல்கள் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தன.

இப்போது லதா மங்கேஷ்கர் ஜகஜித் சிங்குடன் இணைந்து 'சஜ்தா' (காணிக்கை) என்ற கஜல் காஸெட்டை எச். எம். விக்காகப் பாடிப் பதிவு செய்துள்ளார்கள். அதில் இடம்பெறும் பதினாறு கஜல்களுள் நான்கினை இருவரும் இணைந்து பாடியிருக்கிறார்கள்.

வெகுஜன ரசனையைக் கருத்தில் கொண்டு ஏராளமான இசைக் கருவிகளின் பின்னணியில் தான் கஜல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜகஜித் - சித்ராவால் பிரபலமான பிறகு தலைக்குத் தலை எல்லா சராசரிகளும் கஜல்கள் பாட ஆரம்பித்து விட்டார்கள். அதனால் எச். எம். வி. லதாவைப் பாடச் சொல்லிக் கேட்ட போது மிகவும் தயங்கினார் அவர். மீட்டிங் மேல் மீட்டிங் நடத்தி ஒருவழியாக லதாஜியின் ஒப்புதல் பெற்றதை எச். எம். வி. யின் வெற்றி என்பதை விட கஜல்களின் வெற்றி என்றே கூற லாம்!

தான்.

அவன் யார்? ஏன் வைரமூர்த்தியைத் தொடரவேண்டும்? வைரமூர்த்திக்கு எந்த வித சந்தேகமும் வர அப்போது வாய்ப்பில்லாமல் இருந்தது.

ரிச்சர்ட் வசித்த வீடு வாஷிங்டன் டி.சி. யின் கிழக்குப் பகுதியில் இருந்தது. வீட்டு வாசலில் சிவப்பு 'வோல்வோ'வை நிறுத்தினார் வைரமூர்த்தி. ஹாரனை ஒரு முறை தட்டினார். முப்பதாயிரம் டாலர் ரிச்சர்டைத் தம் பின்னால் வரவழைக்கும் என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தான் ரிச்சர்ட் மூர்.

ரிச்சர்ட் காரில் ஏறிக் கொண்டதும், வைரமூர்த்தி காரை 'யூனியன் ஸ்டேஷன்' இரயில் நிலையத்துக்கு ஓட்டினார். மறு நாள் திட்டத்தில் 'யூனியன் ஸ்டேஷன்' முக்கிய இடம் பெறப்போவதை எண்ணி, கடைசியாகத் திட்டத்தை ஒத்திகை பார்ப்பது போல அங்கே போனார் வைரமூர்த்தி.

அவர்களைத் தொடர்ந்து தூரத்தே டாக்சி வந்து கொண்டிருந்தது. அதில் கறுத்த இந்தியன் இருந்தான். அவன் முகத்தில் புன்சிரிப்பு. வைரமூர்த்தி தன்னிடம் மாட்டும் நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து சிரித்தான்.

27

ரிச்சர்ட் மூர் அன்று காலையில் 'ஸ்பெஷல் டியூடி' என்று வரவழைக்கப் பட்டான். 'நம்பிக்கையான சிலர் மட்டுமே வேண்டும். ரிச்சர்ட் மூர் அதில் ஒருவராக இருக்கட்டும்' என டேவிட் பாமர் கேட்டதாக சூப்பர்வைசர் ரிச்சர்ட் மூருக்குச் சொன்னான்.

ரிச்சர்ட் மியூசியத்துக்கு வந்த போது காலை ஏழு மணி. உள்ளே நுழைவதற்கு முன்பே தூரத்தில் வந்து கொண்டிருந்த சிவப்பு 'வோல்வோ' காரைக் கவனித்தான். தன் கையிலிருந்த பையில் எல்லாம் தயாராய் வைத்திருந்தான்.

மியூசியத்துக்குள் நுழைந்ததும் நேராக டேவிட் பாமர் இருந்த ஆபீசுக்கு வருமாறு சொல்லியிருந்தார்கள். ரிச்சர்ட் அங்கே போன போது, ஏற்கெனவே டேவிட் பாமர், மைக்கேல் லிண்டன் மற்றும் ஐந்து காவலர்கள் கூடி இருந்தார்கள்.

ரிச்சர்ட் போய் உட்கார்ந்ததும் டேவிட் பாமர் விவரங்களைச் சொன்னார்.

''இன்னும் முப்பது நிமிடங்களில் 'ஹோப்' வைரத்தை இங்கிருந்து எடுத்துப் போகப் போகிறோம். இந்த மிக முக்கியமான செயலுக்கு நீங்கள் காவல் பாதுகாப்பு'' என்று விவரித்தார்.

KEERTHANA

AUDIO CASSETTES

Classical Collection

MAHARAJAPURAM SANTHANAM
- All Time Favourites
- Sings For You

BOMBAY SISTERS
- Jayadeva's Ashtapadhi
- Devi Krithis
- Oothukadu Songs
- Live in USA
- Bharathiyar Songs
- Utsava Sampradhaya Krithis
- Arunachala Kavirayar Songs
- Popular Thillanas
- Papanasam Sivan Songs
- Enchanting Devi Krithis
- Gopalakrishna Bharathi Songs
- Popular Varnams
- Favourite Shiva Krithis
- Thalattu Padalgal
- Marriage Songs

D.K. PATTAMMAL
- Papanasam Sivan Songs
- Marriage Songs

RADHA JAYALAKSHMI
- Pancharathna Krithis
- Ganamrutham
- Krithi Maala

D.K. JAYARAMAN
- Kamalamba Navavarna Krithis
- Panchalinga Kshetra Krithis
- Pancharathna Krithis

T.V. SANKARANARAYANAN
- Golden Hour Concert
- Golden Classicals

T.N. SESHAGOPALAN
- All Time Classics
- Classical Melodies

NAMAGIRIPETTAI KRISHNAN
- Enchanting Nadhaswaram Recital
- Nadhaswaram

M.P.N. SETHURAMAN
M.P.N. PONNUSWAMY
- Nadhaswaram
- Scintillating Nadhaswaram

M.S. GOPALAKRISHNAN
- Violin Melody

KUNNAKUDI VAIDYANATHAN
- Pancharathna Krithis
- Music Festival Live 1988
- Hits of K.B. Sundarambal
- Hits of M.K. Thyagaraja Bhagavathar
- Vibrant Violin
- The Genius Of Kunnakudi Vaidyanathan

N. RAMANI (FLUTE)
- Homage To Guru "Mali"
- Music Festival Live 1988
- Haunting Melodies

GAYATHRI (VEENA)
- An Evening With Gayathri
- All Time Melodies

A.K.C. NATARAJAN
- Clarionet

TAS/342

Available at all leading Music Shops

Produced and Marketed by

KEERTHANA RECORDING COMPANY

25A, Ramaswamy Street, T.Nagar, Madras 600 017. Ph.: 444866

TOP ARTISTES - TOP MUSIC ONLY FROM KEERTHANA

'ஹோப்' வைரம் எங்கே எடுத்துச் சொல்லப்படுகிறது என்பதை டேவிட் சொல்லவில்லை. ஆனால் அது மற்ற நகைகளுடன் இன்னொரு மியூசியத்துக்குப் போகாது என்பதை மட்டும் சொன்னார்.

காவலர் ஆறுபேருடன் மைக்கேலும் டேவிடும் இரண்டாம் மாடியை அடைந்தனர். கதவைத் திறந்து கொண்டு 'ஹோப்' வைரம் இருந்த இடத்திற்குப் போனார்கள்.

டேவிட் சாவிகள் பலவற்றைப் போட்டு வைரம் இருந்த அலமாரியைத் திறந்தார். மைக்கேல் விண்டன் கை உறைகள் போட்டிருந்தார். பச்சிளம் குழந்தையை எடுப்பதைப் போல் 'ஹோப்' வைரம் பதிந்த மாலையை எடுத்து அதற்காகக் கொண்டு வந்த பிரீஃப் கேஸில் வைத்துப் பூட்டினார். 'பிரீஃப் கேஸ் பிடியிலிருந்து சிறு சங்கிலியைத் தன் கையில் விலங்கு போல் மாட்டிக் கொண்டு, சங்கலியைப் பூட்டினார். சாவியை டேவிட் பாமரிடம் கொடுத்தார். இருவரும் வெளியே நடந்தார்கள்.

காவலர்களில் நால்வர் அவர்களுடன் நடக்க, மற்றவர்கள் அறையைப் பூட்டி விட்டுப் பின் தொடர்ந்தனர். டேவிடும் ஸிமக்கேலும் நிதானமாகவே நடந்தார்கள். மாடிப் படிகளில் இறங்கும் போதும் அவசரப்படவில்லை. விசாலமான படிகள். நான்கு பேர் பக்கத்துப் பக்கத்தில் இறங்கி நடக்கலாம்.

கடைசிப் படியிலிருந்து ஹாலில் இறங்கியதும் டேவிட் இடது புறம் திரும்பினார்; மைக்கேலும் திரும்பவே, ரிச்சர்ட் மூர் கொஞ்சம் பின் தங்கினான். சுவரில் இருந்த சுவிட்சைத் தட்டி, கீழ்த் தளத்தில் இருந்த விளக்குகளை அணைத்தான். ஏற்கெனவே பையில் வைத்திருந்த கண்ணீர்ப் புகை குண்டை வீசினான். சில விநாடிகளில் அங்கு புகை சூழ்ந்தது. அதற்குள் தன் மூக்கு, கண் இவைகளுக்குப் பாதுகாப்பாக முகமூடியை அணிந்து கொண்டான். மற்ற அனைவரும் தவித்துக் கொண்டிருந்த போது, டேவிட் பாமரிடமிருந்து சாவியை எடுத்து, மைக்கேல் கையில் கட்டியிருந்த சங்கிலியைத் திறந்தான். அவரிடமிருந்து 'பிரீஃப் கேஸை'ப் பறித்துக் கொண்டு ஓடினான். அங்கிருந்து கான்ஸ்டிடியூஷன் அவென்யூ வாசலுக்கு ஓடிப்போக 50 விநாடிகள் ஆகும். திரும்ப 50 விநாடிகள். கண்ணீர்ப் புகை நிமிடக்கணக்காக வேலை செய்யும். ரிச்சர்ட் மூர் 'பிரீஃப் கேஸை' வைரமூர்த்தியிடம் தந்துவிட்டுத் திரும்பி வந்து உள்ளே ஓடினான். முகமூடியை எடுத்து விட்டுத் தானும் கொஞ்சம் அவதிப் பட்டான். தட்டுத் தடுமாறி ஒரு காவலர் சுவிட்சைத் தட்டிய போது பரவிய வெளிச்சத்தில் ரிச்சர்ட் மூர் உள்பட எல்லோரும் கண்களைக் கசக்கிக் கொண்டு நின்றார்கள்.

(தொடரும்)

THE GINSENG HEALTH

உங்களால் முடியும்!



பகிர்ந்து வாழ்வதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, ஒன்று கூடி இன்பமாகக் கழிந்த நாட்கள் இவையெல்லாம் நினைவிருக்கிறதா? ஆம், அந்நாட்களில் உள்ளம் நாடியதற்கேற்ப உடல் ஒத்துழைத்தது.

அந்நாட்களைத் திரும்பப் பெற வேண்டுமா? உபயோகியுங்கள் **வினோஃபிட்** ஜின்செங்*

வினோஃபிட்-ல் கொரியாவின் ஜின்செங் மற்றும் இன்றியமையாத மூலிகைச் சாறுகள் சேர்ந்துள்ளதால் உடலின் இரத்த ஓட்டம், ஜீரண சக்தி மற்றும் இன்றியமையாத உறுப்புகளின் செயலாற்றம் மேம்படுத்தப்படுகிறது. மேலும், சோர்வு குறைந்து உடலில் சக்தி அதிகரிக்கிறது.

இதைத்தவிர, **வினோஃபிட்** சருமத்தை எழிலடையச் செய்து, நோய்களை எதிர்க்கும் திறனை உடலிற்கு அளித்து மூளையின் செயலாற்றலை அதிகரிக்கிறது.



* வினோஃபிட் ஜின்செங் கேப்ஸ்யூல் மற்றும் டானிக் சகல மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

"வாழ்க்கையை முழுமையாக வாழத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற இலவச வினோஃபிட் ஜின்செங் பிரசுரத்தைப்பெற கீழ்கண்ட கூப்பனைத் தெளிவாக, பெரிய அச்செழுத்துக்களில் நிரப்பி செய்து தபால் பெட்டி எண் 5581, சென்னை-600 014, என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(பெரிய அச்செழுத்துக்களில் எழுதவும்)

பெயர்: ....

முகவரி ....

....

நகரம்: .... பின்: ....

வினோஃபிட்
ஜின்செங்

வோக்ஹார்ட் வழங்கும் தரமான தயாரிப்பு

வாழ்வில் துடிப்புணர்வுடன் வாழ.

TRITON/91/WL/173/TM



"மாதங்களில்



மார்கழி நான்.

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஸ்வீட்களில் சிறந்தது கிராண்ட் ஸ்வீட்ஸ்.

இனிப்புகள்:— மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள்:— தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில்கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— கருவேப்பிலைபொடி, பருப்புப்பொடி, இட்லிபொடி, ரசப்பொடி, சாம்பார்பொடி, உறுகாய்பொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.





தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

கடலலையில் எங்கள் சிறிய தோணி; கலையுலகில் எங்கள் புதிய பாணி

பார்ட்னர் கிருஷ்ணமூர்த்தியின் வாதத்தில், அவருடைய நோக்கில் நியாயம் இருந்திருக்கலாம். ஆனால் என் அளவில் அது ஒரு சிருஷ்டி கர்த்தாவின் கரங்களைக் கட்டிப் போடுவது போல் தோன்றியது. ''வீனஸு''க்கு மட்டும்தான் படம் பண்ண வேண்டும் என்ற கருத்தை என்னால் ஏற்க முடியவில்லை'' என்ற நான் தொடர்ந்து, ''சகட்டு மேனிக்குப் பிறருக்குப் படம் பண்ண மாட்டேன்; வருகிற வாய்ப்புக்களில் மிக முக்கியமானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து ஒப்புக் கொள்கிறேன்'' என்றேன்.

கிருஷ்ணமூர்த்தி சற்று யோசித்து விட்டு இதற்குச் சம்மதமளித்தார். ஆனால் பிரச்னை இத்துடன் முடிந்து விடவில்லை. அடுத்த படத்துக்கான கதை தேடலின் போது நான் கூறிய 'கிளாஸிகல் டச்'சுடன் கூடிய கதைகளை அவர் ஏற்கவில்லை. ஜனரஞ்சகமான கதைகளைக் கூறும்படி கேட்டார். தயாரிப்பாளர் என்ற முறையில் வர்த்தக ரீதியான வெற்றிக்கு அவர் பேச, எனக்கோ முழுக்க முழுக்க வர்த்தக ரீதியான படங்களை எடுக்க மனம் வரவில்லை. தயாரிப்பாளராக மட்டுமின்றி சிருஷ்டிகர்த்தாவாகவும் நான் இருந்ததே காரணம்.


கருத்து மாறுபாடு நாளுக்கு நாள் அதிகரிக்க, கடைசியில், ''இனி ஒத்துப் போவது சிரமம்; நண்பர்களாகவே பிரிந்து விடலாம்'' என்று தீர்மானித்தோம்.

பிரிந்து வந்தபின், 'என்ன செய்வது' என்று யோசித்த எனக்கு, ''சினிமாவும் என்னை விடாது; நானும் சினிமாவை விட மாட்டேன்'' என்றுதான் தோன்றியது. எனவே, சொந்தத்தில் புதிய திரைப்பட நிறுவனம் ஆரம்பிப்பது என்று முடிவு செய்தேன். முதல் காரியமாக அதற்கு ஒரு பெயர் சூட்டியாக வேண்டுமே? என் வீட்டின் பெயரையே சூட்டினேன் : ''சித்ராலயா.''

வீட்டுக்குச் ''சித்ராலயா'' என்று ஏன் பெயர் வைத்தேன்? சித்திரம் என்றால் திரைச் சித்திரம் - சினிமா - என்றும் கொள்ளலாம் இல்லையா? அந்தக் கலையை ஒரு புனிதமான ஆலயமாக நான் கருதுகிறேன் என்பதைக் குறிக்கவே ''சித்ராலயா.''

வீட்டின் பெயரே புதிய சினிமா கம்பெனியின் பெயராகவும் விளங்கியது. அதன் முதலாளி...? நான் மட்டும் இல்லை. 'ஸ்ரீதர் யூனிட்' என்று கருதப்பட்ட அனைவருமே அதில் பங்குதாரர் ஆனார்கள். வின்செண்ட், சுந்தரம், திருச்சி அருணாசலம், கோபு இவர்களுடன் நானும் ஒரு பங்குதாரர். என் திரை உலக வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கு இவ்வாறு உரிய கௌரவத்தை அளித்ததோடு, தொடர்ந்து இவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றேன்.

அடுத்த சிந்தனை : நிறுவனத்துக்கு



ஒரு சின்னம் வேண்டுமே? ஆர்ட் டைரக்டர் கங்காவைக் கலந்தாலோசித்தேன். ''சினிமா என்பது ஒரு பெரிய கடல். அதில் பொங்கிச் சரியும் அலைகள் போல லாபமும் நஷ்டமும் மாறி மாறி வரும். திரைப்படம் என்பது ஓர் அழகிய பெண். இந்தப் பெண்ணைப் படகில் ஏற்றி, கடல் அலைகளைச் சமாளித்து, எதிர்த்துச் சென்று கரை சேர்ப்பதுதான் சினிமாத் தொழில்.'' இந்த அர்த்தத்தை உள்ளடக்கியது சித்ராலயா சின்னம்.

சின்னம் (Emblem) தவிர, ஒரு வாசகமும் (motto) தேவையல்லவா? நான் யோசித்து உருவாக்கிய வாசகம் :

''கடலலையில் எங்களது சிறிய தோணி;
கலையுலகில் எங்களது புதிய பாணி''

ஆங்கிலத்தில் இதை இவ்வாறு மொழி பெயர்த்தேன் :

டைரக்டர் ஸ்ரீதர்

வடக்கே 'ஓரம் போ' ஒலிக்காது!


செளராஸியா

ஹிந்தி திரைப்பட உலகு சாஸ்திரிய இசைக் கலைஞர்களை ஒதுக்கி ஓரம் கட்டி விடுவதில்லை. பல படங்களுக்கு இசை அமைக்கும் வாய்ப்பு மரபு வழி வந்த பல முன்னணி ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்களுக்குக் கிடைத்துள்ளது :

- ❑ ரவி சங்கர் : பதர் பாஞ்சாலி, தர்தி கேலால், அனுராதா, கோடான், மீரா... (குல்ஜருடையது)
- ❑ அலி அக்பர் கான் : ஆந்தியான்
- ❑ அல்லா ராகா : சபக், பேவஃபா
- ❑ விலாயத் கான் : மாதோஷ், காதம்பரி,
- ❑ சிவகுமார் சர்மா, ஹரிபிரசாத் செளராஸியா இணைந்து : ஸில்ஸிலா, சாந்தினி.

"We know art is an ocean
We row for novel creation"

இந்த வாசகத்தைப் பங்குதாரர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு அங்கீகரித்தனர். விளம்பரங்களில் பார்த்த அனைவருமே பாராட்டினர்.

எல்லாம் சரி, சித்ராலயாவின் முதல் தயாரிப்பு எது? ஒரு அமரதீபம் போல், ஒரு கல்யாணப் பரிசு போல் இன்னொரு 'சூப்பர் ஹிட்'டாக அந்த முதல் படம் அமைய வேண்டுமே!

அப்போதெல்லாம் பெரும்பாலான படங்களை 'ஸெட்' போட்டுத்தான் எடுப்பார்கள். சில சமயங்களில் அருகில் உள்ள ஊர்களுக்குப் போய் அவுட்டோர் காட்சிகள் சில எடுப்பதுண்டு. நான் யாரும் இதுவரை செய்யாத காரியத்தைச் செய்ய எண்ணினேன். யோசித்தேன் : ''முழுக்க முழுக்க அவுட்டோரிலேயே ஒரு திரைப் படத்தை எடுத்தால் என்ன?''

''ஏகமாய்ச் செலவாகுமே! இது நம் முதல் படமாயிற்றே, தாக்குப்பிடிக்க முடியுமா?'' பார்ட்னர்கள் கவலை தெரிவித்தனர்.

''ஆ ர ம் ப நாட்களை எண்ணிப் பாருங்கள்'' என்று அவர்களுக்குப் பதில் கூறினேன். ''அமரதீபம் எடுக்கப் பல லட்சம் செலவாயிற்று. ஆனால் ஐயாயிரம் ரூபாய் வைத்துக் கொண்டுதானே ஆரம்பித்தோம்?''

நண்பர்கள் சிறிது தைரியம் அடைந்ததும் நான் எனது அடுத்த திட்டத்தை விவரித்தேன் : ''வெளிப்புறப் படப்பிடிப்பு என்றால் ஊட்டி, கொடைக்கானல், பெங்களூர், மைசூர் என்றுதான் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் நமது புதுமையான முயற்சி, முற்றிலும் புதுமையாக அமைய வேண்டுமானால் நாம் காஷ்மீர் போக வேண்டும்!''

''என்ன ஸ்ரீதர் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாய்!''

நான் உறுதியாக இருந்தேன். ''காஷ்மீர் தான்; நான் தீர்மானித்து விட்டேன்.''

''சரியாப் போச்சு! எத்தனை நாள் ஷெட்யூல்? எத்தனை தடவை போய்த் திரும்புவது? நடிக நடிகையரின் ஒத்துழைப்பு கிடைக்குமா? கால்ஷீட் தருவார்களா?''

''இரண்டே மாதம்! சேர்ந்தாற்போல் எல்லா ஆர்ட்டிஸ்டுகளிடமும் கால்ஷீட். நான் தவறாமல் ஷூட்டிங். படம் முடிந்து விடும்.''

எல்லோரும் தலையாட்டினார்கள் - யோசனையாகத்தான்! ''சரி, கதை எழுது'' என்றார் கோபு.

காஷ்மீர் செல்வதென்றால் யாருக்கு ரொம்ப விருப்பம் இருக்கும்? தேன் நிலவுக்குப் போகும் தம்பதிகளுக்குத்தானே? அதுதான் கதை!' நிறைய நகைச்சுவை! படத்தின் பெயர்? வேறென்ன? தேன் நிலவு!

கதாநாயகனாக ஜெமினி, கதாநாயகி வைஜயந்தி மாலா, அவர் அப்போது ஹிந்தியில் பிஸி. என்றாலும் நூதனமான திரைப் படக்கதை பிடித்துப் போனதால் ஒப்புக் கொண்டார்.

அப்புறம் இன்னும் ஒரு புதுமை செய்தேன்! ''நடிக, நடிகையர் எல்லாரும் குடும்ப சகிதம் வரலாம்'' என்று அறிவித்தேன்! எல்லோருக்கும் ஒரே குஷி! என்றாலும் என் தாராளத்துக்குக் காரணம் புரியாமல் வியந்து கொண்டிருந்தனர். நீங்களும்தான் ஏழு நாட்கள் ஆச்சர்யப் பட்டுக் கொண்டிருங்களேன்!

● ●

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.

ஒரு புத்திசாலித்தனமான அடி



ஐடிபிஐ

முதலீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்து முதலீட்டு வரியில் ஆதாயம் பெறுங்கள்.

நிலம், கட்டிடம், ஆபரணங்கள், பங்குகள் போன்ற நீண்டகால முதலீட்டு ஆதாயத்திற்கு வருமான வரி உண்டு. இவ்வரியிலிருந்து விலக்கு பெற, உங்கள் முதலீட்டை முழுமையாக பெற மற்றும் இதிலிருந்து லாபமும் பெற ஐடிபிஐ முதலீட்டு பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்.

- பத்திரங்கள் ஆண்டு முழுவதும் சம விலையில் கிடைக்கும்.
- வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு எண் 54 E ன் கீழ் முதலீட்டு ஆதாய வரிவிலக்கு.
- பிரிவு 80 L ன் கீழ் வருமான வரியில் லாபம்.
- செல்வ வரிச்சட்டம் 1957 பிரிவு எண் 5 (1) (XVIE) கூடவே பிரிவு 5 (1 A) ன் கீழ் ரூ. 5 லட்சம் வரை வருமான வரியில் லாபம்.
- வருடத்திற்கு 9% என்ற விகிதத்தில் 6 மாதத் திற்கு ஒரு முறை வட்டி வழங்கப்படும்.
- நான்-ரெஸிடெண்ட் இந்தியர்களின் முதலீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகளுக்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாக ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்போது கழிக்கப்பட மாட்டாது.
- வெளியூர் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

நாட்டின் தொழில் வளர்ச்சியிலும் பெறும் பங்கு.

Sobhagya/IDBI/91 Tam. Rev.

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபீசை அணுகுங்கள். அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், பம்பாய்-400 005. போன்: 218 9111/21.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka